1694
74
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 DEC 1939
RAS

உ

தாண்டவராயர் அருளிய

தாண்டவமாலை

52

காவேரிப்பாக்கம்
M. மார்க்கலிங்க சோதிடர் குமாரர்
K. M. தெய்வசிகாமணி சோதிடரால்
எழுதிய
விருத்தியுரையும்.

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்
பூமகள்விலாச அச்சுக்கூடம்
சென்னை
காபிரைட்] 1939 [விலை அணா 10
24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

உ

முருகன் துணை

தாண்டவராயர்

அருளிச்செய்த

தாண்டவமாலை

காவேரிப்பாக்கம்

M. மார்க்கலிங்க சோதிடர் குமாரர்

K. M. தெய்வசிகாமணி சோதிடரால்

எழுதிய

விருத்தியுரையும்

அ. முத்துவடிவேல் முதலியாரால்

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை

[ரிஜிஸ்டர் காபிரைட்] 1939 [இதன்விலை அணா 10

ரிஜிஸ்டர் காபிரைட்

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில்:—தாண்டவ ராயர் அருளிச்செய்த "தாண்டவமாலை" என்னும் இந்நூலுக்கு காவேரிப்பாக்கம். M. மார்க்கலிங்க சோதிடர் குமாரர் K. M. தெய்வ சிகாமணி சோதிடரால் விருத்தியுரை எழுதப் பெற்றதை அடியிற் கையொப்பமிட்டுள்ள யான் மேற்படியாரிடம் சகல சுதந் திரமும் பெற்று, கவர்ன்மெண்டார் சட்டப்படி இந்நூலை "ரிஜிஸ்டர் காபிரைட்" செய்து வெளியிட்டிருப்பதால், இந்நூலை என் அனுமதி யின்றி எவரும் அச்சிடக்கூடாது என்பதை தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

இப்படிக்கு

அ. முத்துவடிவேல் முதலியார்

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

சென்னை.

முகவுரை

ஸ்ரீ சிவபெருமானால் உண்டாக்கப்பெற்ற ஆத்துமாக்கள் பலவற்றுள் சிறந்த ஜீவாத்துமா மானிடரே ஆவர். மானிடர்கள் தங்கள் தங்களது சுக துக்காதிகளைத் தன் பிறவியின் கூறுகள் அறிந்துகொள்ளும் மார்க்கங்களும், மற்றும் பலவாற்றால் வரும் வினைகளை அறிந்துகொள்ளும் மார்க்கங்களும் பல. அவற்றுள் தாய்போன்று முதற்பொருளாய் இருப்பது கணித ஸ்கந்தம், சாதக ஸ்கந்தம், சங்கீதா ஸ்கந்தம் என மூவகையாகும். "கணித ஸ்கந்தம்" என்பது உலக பலனாகிய பஞ்சாங்க கணிதத்திற்கும், "சங்கீதா ஸ்கந்தம்" என்பது ஆரூடம் முதலியவற்றையும் கூறியுள்ளன. நிற்க "சாதக ஸ்கந்தம்" என்பது அவரவர்கள் ஜனனகால கிரக லக்ஷணங்களைக் கொண்டு தத்தமது வருகால வினைகளை அறிந்துக்கொள்ளும் சாஸ்திரமாகும்.

இவ்வாறு ஜனனகால கிரக லக்ஷணங்களால் தமது வருவினைகளை அறிந்துகொள்ளும் சோதிட சாஸ்திரங்கள் பல. அவற்றுள் கிரகங்களது சக்தி - குணம் - செய்கை முதலியனவற்றைக் கூறும் நூற்கள் பலவற்றுள் தலைசிறந்து விளங்குவது இத்தாண்டவமாலையே ஆகும்.

ஏனெனில்? இந்நூலினுள் கோட்களின் நோக்கம் நன்மை, தீமை, கிரகங்களினது குணமும், செய்கை மாறும்விதம், திசாநாதர் இயல்பு, மாரகவிலக்கணம், திசாநாதர் தன்மை முதலிய முக்கிய விசேஷங்களைப் பச்சாதாபமின்றி கூறியுள்ளன. இந்நூலானது எவரால் உண்டாயின? எவரது உதவியால் உண்டாயின? எவர் ஆமோதித்தனர்? என்று கவனிக்குமிடத்து இந்நூலின் 68-ஆம் செய்யுளில்,

"கோவிந்த தீக்ஷிதர்தங் கொள்கையினாற் செப்புகின்ற
மாவிந்த நூலின்வழக் கறிந்து—தேவின்
தருப்போற்றும் பிண்டியன் செல்வன் சீர்கூறி
வருபவனப் பாவையன் வந்து" என்றதாலும்,

"ஆதியாம் செய்யுளோ ராராறு மாரைந்தின்
மீதிரண்டாய் செப்பினான் மேதினியில்—வேதியன்றான்
ஆண்டகைய னாண்டி மகிபனருள் வணிகன்
தாண்டவன் பேரைத் தரித்து"

என்று கூறியமையால், **கோவிந்த தீக்ஷிதர்** என்பவரினது சிஷ்யரும், ஸ்ரீ சக்திதேவியினது திருநாமங்களை இடைவிடாது துதிப்பவருமாகிய

அப்பாவையர் என்பவர் இயற்றியதும், மேற்படி கோவிந்த தீக்ஷிதர் அங்கீகரிக்கப்பட்டதுமாகிய இந்நூல் மேற்படி அப்பாவையரது நடைக்கொத்தவரும் வணிக குலத்தவருமாகிய தாண்டவராயர் என்பவர் மேற்சொன்ன அப்பாவையர் கூறிய இவ்விஷயங்களை 68-செய்யுட்களாய்ப் பாடி தன் பெயரால் தாண்டவமாலை என்னும் பெயருடன் வெளியிட்டனர் என்று கூறவேண்டியதாகிறது.

ஆயினும் இந்நூலானது மற்றெல்லா சோதிட நூலினும் நன்னூலாய் விளங்குமாதலாலும், இதனுடைய அந்தரங்கக் கருத்தை வெளிப்படையாய் விளக்கி வெளியிடில் சோதிடர்களுக்கு தமது இருவிழிபோன்று விளங்குமெனக் கருதி, இந்நூலினுக்குத் தக்க மேற்கோளுடன் எம்மால் இயன்றவரையில் எழுதி வெளியிட்டுள்ளனம். ஆகலின், இந்நூலினை வாசிக்குங் கல்வியாளர்கள் ஏதேனும் குற்றமிருக்கினும், அதைத் திருத்தி வாசித்து ஆசீர்வதிக்குமாறு வேண்டுகின்றனம். சுபம்.

இங்ஙனம்:

6-5-1939.
காவேரிப்பாக்கம்

K. M. தேய்வசிகாமணி சோதிடர்.

விஷய அட்டவணை

விஷயம்	பக்கம்	விஷயம்	பக்கம்
முகவுரை	5	புத்தி இலக்கணம்	43
விநாயகர் துதி	8	மாரகதிசாயோகம்	48
நூற்பெருமை	9	திசாயோக பலன்	50
கோட்களின் நோக்கம்	11	திசாயோக விவரம்	54
கோட்களின் நன்மை தீமை	11	சனி-சுக்கிராள் பலன்	56
கோட்களின் சுபகேந்திரம் பாப கேந்திரம்	12	கோட்களின் குணம்	57
ஸ்தானம் ஒன்பதின்பலன்	14	மேடவிராசி பலன்	58
2-12-க்குடையவரியல்பு	15	இடபவிராசி பலன்	60
8-க்குடையவரியல்பு	17	மிதுனவிராசி பலன்	62
கேந்திராதிபத்தியதோஷம்	18	கடகவிராசி பலன்	64
புதன்-மதி இவர்கள் குணம்	20	சிங்கவிராசி பலன்	66
செவ்வாய் குணம்	21	கன்னியாவிராசி பலன்	69
இராகு-கேது இவர்களியல்பு	22	துலாவிராசி பலன்	71
பொதுச்சுபயோகம்	23	விருச்சிகராசி பலன்	73
இராஜயோகம்	25	தனுசுராசி பலன்	75
இராஜயோக பங்கம்	34	மகரவிராசி பலன்	77
மாரகவிலக்கணம்	35	கும்பராசி பலன்	79
சம்மந்தமாரகம்	36	மீனவிராசி பலன்	82
சனியன்மாரகம்	41	சுபாசுபர்கள் பொதுவிதி	84
		ஸ்தான பலன்	85

விஷய அட்டவணை முற்றிற்று.

உ

முருகன் துணை

தாண்டவமாலை

விநாயகர் துதி

கலி விருத்தம்

சீர்சி றந்த திரைகடல் வையினிற்
பார்வி ளங்க பலித்திடுஞ் சோதிடத்
தாருயர் நவக்கிரகநூல் சாற்றிடக்
கார்நல் லியானை கழலிணை யேற்றுவாம்.

தெய்வ வணக்கம்

திங்கண் மும்மாரிபெய்யத் திருவறஞ் செழித்துலாவ
மங்கள கரங்கள் தங்க மானிலத் தரசையாண்டு
பொங்கு தத்துவத்தைக்கொண்டு பொன்னெயின் மேனிநின்ற
வெங்கள்புங் கவனைப்போற்றி யிலங்குசோதிடநூற் சொல்வாம்.

அவையடக்கம்

அன்னமுன் னடக்க காக
மதினடை நடக்க நின்றுச்
சன்னதங் கொள்ளு மாப்போல்
தமிழறி வாளர் முன்னே
தன்னய மாகச் சொன்ன
தாண்டவ மாலை யென்னும்
பன்னு சோதிட நூலினுற்
படுபிழை பொறுப்பார் மேலோர்.

உ

சிவமயம்

தாண்டவமாலை

மூலமும்-விருத்தியுரையும்

நூற்பெருமை

வெண்பா

ஓரை முதலா யுரைக்கு மவையாவும்
ஓரை யிதரமுத லோர்ந்துரைத்த—பாரிலிந்தத்
தாண்டவமா லைப்படியே தக்கவிசே டப்பலனை
ஆண்டருள்வீ ராரறிவி னீர்.

(பொழிப்புரை.) நிறைந்த அறிவினையுடைய புலவர்களே! பூமியி னிடத்தில் லக்கின முதலாகச் சொல்லப்பட்ட பாவங்கள் சகலத்தையும் ஓராசாரம் பாராசரிய முதலான நூற்களை ஆராய்ந்தறிந்து செய்த தாண் டவமாலை யென்னும் இந்நூற்படியே தகுந்த விசேடமாயிருக்கும் பலாபலன் களை அறிந்தருள்வீர்கள் என்பதாம்.

(விருத்தியுரை.) 'ஓரையிதா முதல்' என்றது இலக்கினமுதற் பன் னிரண்டு பாவங்கள், கேந்திர திரிகோணங்கள், தெசாபுத்திகள் இவை முதலெனக்கொள்க. இவை நூற்பெருமை என்றுங் கூறலாம். மற்றும் இந்நூலிலுள்ள விஷயங்களைப் பெருமைபெறக் கூறியதெனவுங் கூறலாம். இச்செய்யுளின் ஆரம்பத்தில் 'ஓரைமுதலாய்' என்றதால் ஜோதிஷ அங் கங்களாகிய 144-ல் முதல் அங்கமென்பது ஓரையென்றே கூறவேண்டுவ தாகிறது.

'ஓரை' என்பது லக்கினம் என்பதால் முதன்முதலாக லக்கினத்தையே நிச்சயமாய் அறிவது முக்கிய கடமையாகும். லக்கினத்தை எவ்வாறறிவ தெனில்? நாம் குறித்தகாலத்தின் நாழிகையின் அளவைத் தெரிந்துகொண்டு குறித்த மாதம் எதுவோ அந்த மாதத்தில் ஜெனன தேதியில் அந்த மாதராசியின் நாழிகை மொத்தத்தில் சென்றவைபோக நின்ற நாழிகையுடன் ஜெனனநாழிகைவரைக்கும் வரும் லக்கின நாழிகையைக் கூட்டி, ஜெனன லக்கினத்தில் சென்ற பாகை-கலை-விகலை போக நின்ற பாகை-கலை-விகலைக் குரியபடி கீழ்வரும் பலாபலனை அறியவேண்டும் என்பதாம். பொதுவாய் கீழ்க்கண்டவாறு மாதராசி நாழிகைகளைக் குறிக்கப்பட்டுள்ளன.

விவரம்

1	சித்திரை	மேடம்	நாழிகை	4·15
2	வைகாசி	இடபம்	,,	4-45
3	ஆனி	மிதுனம்	,,	5-15
4	ஆடி	கட்கம்	,,	5-30

5	ஆவணி	சிங்கம்	நாழிகை	5·15
6	புரட்டாசி	கன்னி	,,	5·0
7	ஐப்பசி	துலாம்	,,	5·0
8	கார்த்திகை	விருச்சிகம்	,,	5·15
9	மார்கழி	தனுசு	,,	5·30
10	தை	மகரம்	,,	5·15
11	மாசி	கும்பம்	,,	4·45
12	பங்குனி	மீனம்	,,	4·15

என்பதை பொதுவாய் வைத்து எந்த மாதத்தில் ஜனனமானுலே அந்த மாதம் ராசி நாழிகையை அந்தந்த மாதத்தின் மொத்தநாள் எவ்வளவோ அத்தனை நாட்களுக்கும் பங்கிட்டு ஜெனன தேதி எத்தனையோ அத்தனை தேதிக்கும் வரும் விஞடியைக் கழித்து இனி எத்தனை நாட்கள் செல்லப் போகின்றனவோ அத்தனை நாட்களுக்கும் வரும் விஞடியே அவன் ஜனனமான மாதத்தேதியில் இருப்பு எனப்படும். இவை பிரதி வருஷந் தோறும் வெளிவரும் பஞ்சாங்கத்தில் லக்கின இருப்பு என்னும் கலத்தில் தெளிவாய்க் காணலாம். ஆதலால் இதனை மேலேவைத்து ஜனனநாழிகை வரையில் எத்தனை ராசிகள் செல்லாகின்றனவோ அத்தனை ராசிக்கும் மேற் கண்ட நாழிகையின்படி கூட்டிக் காண்பதாகும். இவை ஜனனலக்கின மாயினும் லக்கினஸ்புடம் செய்தபிறகே அதனை நிச்சயித்துப் பலன் கூற சிலாக்கியமானதால் லக்கினஸ்புடம் செய்யும் விவரத்தை இங்கு கூறுவாம்.

"ஜனனநாழிகை யதனை நாலாற் பெருக்கியே
லக்கினந் தனைகூட்டியே
சனமான சரம்பத்து உபயங்கள் பதினைந்து
திரமாயின் பத்துகூட்டி
கனமான இருபத்து ஏழால் வகுத்திட
கழிந்தசேடம் அதனையே
* குணமான பக்ஷப்படி அசுவினி யுடன்
கூர்உத்திரம் தொட்டிடே."

என்ற சுலோகப்படி ஜெனனநாழிகை எவ்வளவோ அந்த நாழிகை 4-ல் பெருக்கி வந்த தொகையுடன் மேடமுதலாக ஜனன லக்கினம் எத்தனை யாவது ராசி. ஆகின்றனவோ அந்த தொகையும் கூட்டி ஜன்மலக்கினம் † சரமாயின் 5-கூட்டியும், ஸ்திரமாயின் 10-கூட்டியும், உபயமாயின் 15-கூட்டியும் வந்ததொகை மொத்தத்தை 27-ல் வகுத்து நின்ற சேஷம் எவ்வளவோ அதனை ஜனனம் வளர்பிறையாயின் அசுவினி முதலும், தேய் பிறையாயின் உத்திரமுதலாய்க்கொண்டு எண்ணவரும் நக்ஷத்திரம் ஜன்ம நக்ஷத்திரமாகவோ திரிகோண நக்ஷத்திரமாகவோ வரின் அவையே ஜன்ம லக்கினம் எனப்படும். அப்படி ஜன்ம நக்ஷத்திரமோ திரிகோண நக்ஷத் திரமோ வராவிடின், அந்த நக்ஷத்திரம் வரத்தகுந்த அளவில் கூட்டியும் கழித்தும் மேற்சொல்லியவாறு அறிவதாகும். கோணம்·கேந்திரம் என்பது பின்வரும் செய்யுளால் அறியலாம்.

* பக்ஷம் இரண்டு பூர்வபக்ஷம்-அமரபக்ஷம் என்பதாம்.

† சரம் மேடம் - கடகம் - துலாம் - மகரம். ஸ்திரம் ரிடபம் - சிங்கம் விருச்சிகம்-கும்பம். உபயம் மிதுனம்-கன்னி-தனுசு-மீனம் என்பனவாம்.

கோட்களின் நோக்கங் கூறுகின்றது

பார்ப்பரே யெல்லாரும் பங்குகுரு சேய்மூன்று
பார்ப்பத்தைந் தொன்பானுன் பன்னியகோள்—சேர்ப்புறுநான்
கெட்டுமே பார்ப்ப ரெழிலா ரிளங்கொங்கை
மட்டவிழ்பூங் கோதாய் மதித்து.

(பொ-ரை) அழகு நிறைந்த விளமைதங்கிய ஸ்தனங்களையும் தேன் விரிந்த மலர்கள் பொருந்திய கூந்தலையுடையவளே! எல்லாக் கோள்களும் தாந்தாம் இருக்கும் இடத்துக்கு ஏழாம் இடத்தைப் பார்ப்பார்கள். இவை களில் விசேடமாய் சனி - வியாழம் - செவ்வாய் இம்மூவரும் நிறைநிறைய 3-ம் இடம் 10-ம் இடம் 5-ம் இடம் 9-ம் இடம் 4-ம் இடம் 8-ம் இடங் களைப் பார்ப்பார்கள் என்பதாம்.

(வி-ரை) சனிக்கு-3-10, குருவுக்கு-5-9, செவ்வாய்க்கு-4-8 விசேட பார்வை என்றறிக. இச்செய்யுளால் ஒவ்வொரு கிரகங்களும் எந்தெந்த ராசியை நோக்கும் என்பதைக் கூறியுள்ளார். பொதுவாய் எல்லா கோட் களும் 7-ஆம் ராசியை நோக்குமாயினும் 7-ஆம் இடம் என்பதே நேர்பார்வை எனப்படும். இதனை **வீமேஸ்வர உள்ளமுடையானில்,**

"இரவி சந்திரன் புந்தியும் பாம்புடன்
ஏற்றவேழை இனிதுற நோக்குவர்
விரவும் செவ்வாய்க்கு நாலேழு எட்டுமாம்
வேந்தன் ஐந்துடன் ஒன்பது மாகுமே
நரையும் செவ்வாய்க்கு நாலேழு எட்டுமாம்"

என்று கூறியதாலும், இந்நூலாசிரியரது கருத்திற்கும், வீமேஸ்வர நூலுடை யாரது கருத்திற்கும் எவ்வித பேதமும் இல்லையென்று ஏற்படுகிறது. இவ்விரண்டு நூலுக்கும் முன்னேயுள்ள சோதிட நூலாசிரியர்கள் சூரியன்-சந்திரன்-இராகு-கேது இந்நால்வருக்கும் தானிருந்த இடத்திற்கு 2-12-ஆம் இடங்களையும் பார்ப்பர் எனக் கூறியுள்ளனரேயன்றி தற்கால சோதிடர்கள் அதனை அநுபவத்தில் சம்மதிக்காது விட்டுவிடுகின்றனர். இவை ஒருபுறம் இருக்க, மேற்கூறியபடி குருவுக்கு 5-ஆம் இடம் $\frac{3}{4}$-பார்வையும், 9-ஆம் இடம் $\frac{1}{2}$-பார்வை எனவும், செவ்வாய்க்கு 4-ஆம் இடம் $\frac{1}{2}$-பார்வை என்றும், 8-ஆம் இடம் $\frac{3}{4}$-பார்வை என்றும், சனிக்கு 3-ஆம் இடம் $\frac{1}{4}$-பார்வை எனவும், 10-ஆம் இடம் என்பதை $\frac{3}{4}$-பார்வை எனவுங் கூறியுள்ளார். மற்றும் பல நூலாசிரியர்களும் இதை சம்மதித்துள்ளனர். இவை ஆதிபத்திய பலத்தைச் சொல்லுகையில் கவனிக்கத்தக்க விசேஷ விதியாகும். 2

எல்லாக்கோள்களுடைய நன்மைதீமை கூறுகின்றது

ஐந்தொன்பா னாதிபரா யாவர் வரினுமவர்
அந்தமிலின் பப்பலனை யாற்றுவார்—அந்தமுறும்
அற்பபல னாற்றுவா ரம்மூன்றா றும்பதினொன்
றாற்பதிக ளிவ்வுலகு ளோர்க்கு.

(பொ-ரை) இவ்வுலகத்துட் பிறந்தோர்களுக்கு லக்கினத்துக்கு 5-ஆம் இடத்திற்கும், 9 ஆம் இடத்திற்கும் அதிபராய் எந்தக் கிரகங்கள் வந்தாலும் மட்டில்லாத இன்பபலனைக் கொடுப்பார்கள்; 3-ஆம் இடத்துக்கும், 6-ஆம் இடத்துக்கும், 11-ஆம் இடத்துக்கும் அதிபராய் எந்தக்கிரகங்கள் வந்தாலும் மட்டில்லாத துன்பபலனைக் கொடுப்பார்கள் என்பதாம்.

(வி-ரை) முன்சொன்ன 3-7-11-ஆம் இடங்களில் இருக்கிறவர்கள் பாப பலனைக் கொடுப்பார்கள் என்றறிக. இச்செய்யுளால் எந்தெந்த ஸ்தானம் பெற்ற கோட்கள் சுபபலனைத் தருவார். எந்த ஸ்தானம்பெற்ற கோட்கள் பாபபலனைத் தருவார் என்பதை விளக்கியுள்ளார். எப்படியெனில்? 5 9-க்கு ஆதிபத்தியம்பெற்ற கிரகம் சுபனாயினும், பாபனாயினும் அவன் மட்டில்லாத பலனைக் கொடுப்பான் என்பதேயாகும். இராசிகள் 12-ல் இவ்விரண்டு ராசிக்குடையவர்களைப்பற்றி மாத்திரம் இவ்வளவு பெருமையாய்க் கூறிய தற்குக் காரணம் என்னவெனில்? 5-ஆம் இடம் என்பது அம்மானுடைய வாழ்க்கையையும், தந்தை வர்க்கத்தவர் என்னும் தாயாதி விஷயங்களையும், தனக்குப் பிறக்கும் புத்திரர்களின் விஷயங்களையும், பூர்வ புண்ணியமாகிய நல்வினை தீவினை என்பதையும், தமிழ் அல்லது தன் தாய்பாஷையில் செய்துள்ள நூற்களின் ஆராய்ச்சி அளவையும், மந்திரம் சினேகிதர்களது தன்மை, விசாரணை, புத்தி என்பனவற்றிற்குரிய க்ஷேத்திரமும், 9-ஆம் இடம் என்பது பிதாவினது விஷயங்களையும், தான் செய்யும் யாகாதி கிருத்தியங்களையும், தான் அடையும் கீர்த்தி முதலியனவற்றையும், செல் வத்தையும், திருப்பணி விஷயங்களையும், குரு உபதேசம் வெற்றி முதலியன வற்றையும் (தெரிந்து) அல்லது கொடுக்கத் தகுந்த முக்கிய க்ஷேத்திரமாத லாலும், மற்றெல்லா க்ஷேத்திரங்களைவிட இவ்விரண்டு க்ஷேத்திராதிபர்களும் விசேஷபலனைத்தருவர் எனப் பொதுவாய்க் கூறியுள்ளார்.

பொதுவாய் எந்த ஜீவனுக்கும் ஓர் பிதாவுண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆதலால் பிதாவின அந்தஸ்து முதலிய குணாகுண விசேஷங்களைத் தெளிவாய் அறிந்துகொள்வோமாயின், இந்த ஜாதகனது விஷயத்தைத் தெளிவாய் அறியலாம். இதைப்போன்றே இவனது சந்ததி என்னும் 5-ஆம் இடத்தை நன்றாய் ஆராய்வோமாயின், இவன் வாழ்க்கைப் பலனின் விசேஷங்களையும் எளிதில் அறியலாம். இதுவன்றி 3-6-11-க் குடையவர்கள் பாபபலனைக் கொடுப்பார் என்றனர். இதன் விவரத்தைப் பின்வரும் செய்யுளால் விளக்கியுள்ளாராயினும் இங்கு சிறிது கூறுவாம். பொதுவாய் ஷை மூன்று ஸ்தானங்களும், மறைவு இடம் எனப்படும். மற்றும் சோதிட கிரகசிந்தாமணி 113-ஆம் பக்கத்தில் கூறியபடி கேந்திர மாவது 1-4-7-10 எனவும், திரிகோணம என்பது 5-9 எனவும், மறைவு என்பது 6-8-12 எனவும், உபஜயம் என்பது 3-6-10-11 எனவும், பணபரம் என்பது 2-5-8-11 எனவுங் கூறியதாலும், இவ்வித அறுவகை ஸ்தான பேதங்களில் கோணம் என்பதே முக்கியமானதெனவும், 3-6-8-12 என்பது ஆபோக்கிலிப ஸ்தானமானதால் அவை மகா கொடிய ஸ்தானம் என்னும் கூறியிருப்பதை அறிக. இவை ஸ்தான விசேஷமாகும். மற்றுமுள்ள ஸ்தான விசேஷங்களைக் கீழ்வரும் செய்யுளாலும் அறிக. 3

கோட்களுக்குரித்தாதுஞ் சுபகேந்திரமும் பாபகேந்திரமுங் கூறுகின்றது

கொடியோர்கள் கேந்திரத்தோ ராகிற்கொ டார்கள்
கொடியபலன் நல்லோர்கொ டுப்பர்—கடல்புடைசூழ்
வையகத்தோர் தங்கட்கு வைவேன் மலர்விழியாய்
ஐயப்பா டின்றி யறி.

(பொ-ரை) கூர்மைபொருந்திய வேல்போலும் மலர்ந்த கண்களை யுடைய பெண்ணே! சமுத்திரஞ் சூழ்ந்த பூமியிலுள்ளவர்களுக்குப் பாபக் கிரகங்களாகிற சூரியன்-செவ்வாய்-சனி - இவர்கள் கேந்திரங்களாகிற 1-4 7-

10-ஆம் இடங்களுக்கு அதிபரானால் சுபபலத்தைக் கொடுப்பார்கள். சுபக்கிரகங்களாகிற குரு-சுக்கிரன்-புதன்-சந்திரன் இவர்கள் கேந்திராதிபதிகளானால் பாபபலத்தைக் கொடுப்பார்கள். முன்சொன்ன எல்லாக் கோள்களும், ஒன்றுக்கொன்று விசேஷ பிரபலராவர். அஃதாவது 5-ஆம் இடத்ததிபதிக்கு 9-ஆம் இடத்ததிபதி பிரபலன். இலக்கினாதிபதிக்கு 4-ஆம் இடத்ததிபதி பிரபலன். அவனுக்கு 7-ஆம் இடத்ததிபதி பிரபலன். அவனுக்கு 10-ஆம் இடத்ததிபதி பிரபலன். 3-ஆம் இடத்ததிபதிக்கு 6-ஆம் இடத்ததிபதி பிரபலன். அவனுக்கு 11-ஆம் இடத்ததிபதி பிரபலன். இவைகளைச் சந்தேகமில்லாமல் அறிவாயாக என்பதாம்.

(வி-ரை) சுபகோட்கள் கேந்திரம்பெறின் நல்ல பலனைக்கொடார் எனவும், பாவக்கோட்கள் கேந்திரம்பெறின் நல்ல பலனைக்கொடார் என்பதாம். இச்செய்யுளால் கொடிய கோட்கள் கேந்திரம்பெறின் நல்ல நல்ல பலனைத் தருவார் எனவும், பாவகோட்கள் கேந்திரம்பெறின் நல்ல பலனைக் கொடுப்பா என்றும் கூறினார். ஏனெனில் முன்சொன்ன செய்யுளில் 5 9-க்கு அதிபர்கள் எக்காரணத்தைக்கொண்டும் தீயபலனையே தரார் என்று கூறியுள்ளாராதலால், இச்செய்யுளை கவனிக்குமிடத்து கேந்திரம் என்னும் இடங்களில் இருந்த பாவர்கள் தனது குரூரகுணம் நீங்கி சுபத்துவத்தை அடைகிறார் எனவும், சுபகோட்கள் கேந்திரங்களில் இருக்கில் தனது சுபாவமாகிய சுபத்துவத்தை நீங்கி பாவத்தை அடைகிறார் என்பதேயாகும்.

கேந்திரங்கள் என்னும் 1-4-7-10 என்னும் க்ஷேத்திரங்கள் முறையே லக்கினம்-சுகம்-களத்திரம்-ராஜ்யம் என்று சொல்வதால் ஜென்ம லக்கினாதிபத்தியம் சுபர்களுக்கோ பாவர்களுக்கோவரின் அதற்குப் பாவத்துவம் கூற முடியாது எனவும், 4-7-10-ஆம் ஆதிபத்தியம் பாவர்களுக்குவரின் நல்ல பலனைத் தருவார் என்றமையால் இவை திசைபுக்தி காலங்களிலேயே செய்யும் என்பது குறிப்பிடத் தகுந்தது. பொதுவாய் 1-4-7-10-க்குடையவர்கள் பாவர்களாயின் அவர்கள் நற்பலனைத் தருவாரெனவும், 5-9-க்குடையவர்கள் சுபர்களாயின் தீயபலனையும் தருவார் என்பதே இச்செய்யுளின் முக்கிய கருத்தாகும்

இவை திசைபலனை மாத்திரம் குறிக்கத் தக்கதன்று. ஆதிபத்திய பலனையும் பொருந்தும் எப்படியெனில்? மீனலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு குரு தசமகேந்திராதிபதியாகிறான். ஷை குரு தன்திசை காலங்களில் நல்ல பலனைத்தரான் என்பது ஒருபுறமிருக்க, 10-ஆம் இடமென்பது தொழில்-செய்கை-கௌரவம்-பக்தி-யாத்திரை-தெய்வபூஜை-வீரம்-சுவை-பிரியம் முதலிய முக்கிய விஷயங்களைக் குறித்ததாதலால் மேற்படி விஷயங்களை அவன் காரக குணப்படி மேலான பலனைக் கொடுப்பான் எனவும், மேற்சொன்ன காரண காரியங்களில் சிரத்தையும், பக்தியு முடையவனென்றே கூறுதல்வேண்டும். குருவுக்குரிய குணகாரகத்தை குமாரசுவாமி நூலுடையார் விளக்கியதாவது என்னவெனில்? காரகர்களில் புத்திரகாரகனும், சொர்ணம்-வைடூரியம்-புட்பராகம் விப்பிராகிய பிராமணர் எனவும், இராஜயாதி பத்தியக் காரகம் வாய்ந்தவனெனவுங் கூறியிருத்தலால் கேந்திர தோஷமடைந்த பாவர்கள் தன் திசைபுக்தியில் நற்பலனைத்தரார் எனினும், ஆதிபத்திய பலனைக் கவனிக்கும்போது அவரவர்கள் தங்கள் தங்களது சுயக்ஷேத்திரத்திற்கு எவ்வித பலத்தில் இருக்கிறான் என்பதை ஆலோசித்தே கூறுவது முக்கிய கடமையாகும். இவ்வாறான சந்தேக விஷயங்களை பின்வரும் செய்யுட்களால் காணலாம்.

உரைத்த தானமோன்பதிற்த முயர்விழிவாற் பலனுரைக்கின்றது

அறைந்ததா னத்தலைவர் யாவருமென் மேலாய்ச்
செறிந்தவவ் வப்பலனைச் சேர்ப்பார்—அறிந்தருள்வாய்
வார்கலன்பொன் வம்பார் வனமுலைப்பூங் கோதைநல்லாய்
ஆர்கலிசூ ழும்புவியு ளார்க்கு.

(பொ-ரை) கச்சும் ஆபரணமும் தேமலும் வாசனையும் நிறைந்த அழகும் பொருந்திய கொங்கைகளையும் பூமாலை பொருந்திய கூந்தலையுடைய பெண்ணே! கடல்சூழ்ந்த பூமியிலுள்ளவர்களுக்குச் சொல்லப்பட்ட தானத் ததிபதிகளாகிய எல்லாரும் மேன்மேலாய்த் தங்களுக்குப் பொருந்திய சுபா சுபபலன்களைக் கொடுப்பார்கள். அன்றியும் 5-ஆம் இடத்ததிபதியைப் பார்க்கிலும் 9-ஆம் இடத்ததிபதி அதிகபலனைக் கொடுப்பன். இலக்கின கேந்திராதிபதியைப் பார்க்கிலும் சதுர்த்த கேந்திராதிபதி அதிக பலனைக் கொடுப்பன். 3-ஆம் இடத்ததிபதியைப் பார்க்கிலும் 6-ஆம் இடத்ததிபதி அதிக பலனைக் கொடுப்பன். அவனைப் பார்க்கிலும் 11-ஆம் இடத்ததிபதி அதிகபலனைக் கொடுப்பன். ஒழிந்த தானாதிபதிகட்கும் இவ்வளவே கொள்க என்பதாம்.

(வி-ரை) குரு-சுக்கிரன்-புதன்-சந்திரன்-சுபர்கள் இவர்கள் கேந்திராதி பதிகளானால் சுபபலனைக் கொடார்கள். சூரியன்-செவ்வாய்-சனி-பாபிகள் இவர்கள் கேந்திராதிபதிகளானால் அசுபபலனைக் கொடார்கள். இச்செய் யுளால் எந்த தானாதிபதிக்கு எவன பலமுடையவர் என்பதை விளக்கி யுள்ளார். எப்படியெனில்? அவரவர்கள் க்ஷேத்திரங்களுக்கு அவரவர்களே பலமுடையவர் எனினும் எவர் பெரியோர், எவர் சிறியோர் என்பதை அறிந்தே தீரவேண்டும். முன்கூறிய செய்யுளில் 5-9-சுபர்களுக்கும், 1-4-7-10-பாவர்களுக்கும் பலமெனக் கூறியுள்ளாராயினும், இவ்விரு அதி காரங்களுள் எந்த ஸ்தானாதிபன் சுபபலனுக்கோ பாவபலனுக்கோ மிக்க பலம் பொருந்தியவன் என்பதை அறியவேண்டுவது அவசியமாகுமாதலால் இங்கு அதனை விவரிக்குமிடத்து 5-ஆம் இடத்ததிபனைப் பார்க்கிலும், 9-ஆம் இடத்ததிபன பலவான் எனவும், 1-ஆம் இடத்ததிபதியைப் பார்க்கிலும் 4-ம் இடத்ததிபதியும், 4-ஆம் இடத்ததிபதியைப் பார்க்கிலும் 7-ஆம் இடத்ததி பதியும், 7-ஆம் இடத்ததிபதியைப் பார்க்கிலும் 10-ஆம் இடத்ததியும் பலவான் எனவும், 3-ஆம் இடத்தவனைவிட 6-ஆம் இடத்தவன் பலவான் எனவும், 6-ஆம் இடத்தவனைவிட 11-ஆம் இடத்ததிபதியே பலவான் என்று கூறியுள்ளார். ஆனதால் இங்கு முறையே எந்தெந்த ஸ்தானங்களுக்கு என்னென்ன குணவிசேஷம் உண்டு என்பதை ஆராய்வாம்.

1 இலக்கினம்-உதயம்-கீர்த்தி-மூர்த்தி-தேகநிறம்-தலை.

2 நேத்திரம்-வாக்கு-தனம்-முகம்-குடும்பம்.

3 சகோதரம்-வெற்றி-கேள்வி-காது-தைரியம்-அடிமை.

4 தாய்-வாகனம்-பூமி-பந்து-சுகம்-கல்வி-நீர்-வீடு-சில்லரை வியாபாரம்.

5 புதல்வர் உளம்-புத்தி-மூத்தி-விஸ்தாரம்-மானம்-பிதா-மாதுலன்-பிரபுத்துவம்.

6 சத்துரு-ரோகம்-விரணம்-ரணம் சோரம்-சிறை-பிரதாபம்.

7 களத்திரம்-காமம்-மாரகம்.

8 ஆயுள்-தீர்க்கவியாதி-மாணம்-அபமிருத்தியு.

9 பிதா-தருமம்-பாக்கியம்-குரு.

10 கருமம்-ஜீவனம்-ஆசாரம்.

11 ஜேஷ்ட சகோதரன்-லாபம்.

12 விரயம்-சயனம்-மோக்ஷம்-அந்தியகால நோய் என்னும் விஷய ஸ்தானங்கள். ஆதலாலும், லக்கினாதிபதி கீர்த்தி - கௌரவம் - ஆயுள்முதலியன வற்றைக் கொடுத்தாலும் சுகம் வேண்டுமல்லவா. சுகத்தைக் கொடுக்கும் ஸ்தானம் 4-ஆம் இடமேயாதலால், லக்கினத்தைவிட 4-ஆம் இடமே சிரேஷ்டமாகிய ஸ்தானம் என்றனர்.

4-ஆம் இடத்தால் சுகமுள்ளவன் எனத் தீர்மானித்து விட்டாலும், மாந்தர்கள் கோருவது களத்திர சுகமும், சயன சுகமுமேயாகும். ஆதலால் அவ்வித சுகத்தைக் கொடுக்கத் தகுந்தவன் 7-ஆம் வீட்டதிபதியேயாதலால் 4-ஆம் இடத்தவனைக் காட்டிலும் 7-ஆம் இடத்ததிபன் பெரியவன் என்றனர். ஆயுள்சுகம் - களத்திரம் - சயனம் இவை பிரதானமாகாது. ஏனெனில்? 'ஒருதொழிலு மில்லாதான் மூகடியாகும் ஒன்றுக்கும் உதவாதான் சோம்பனாகும்' என்றபடி, புருஷனாய் பிறந்த ஒருவனுக்கு தொழில் என்பதே முக்கியம். மேற்படி தொழில் மூலமாகவே மற்றைய சுகங்களை லேசில் அடையமுடியுமாதலால் அவ்வித தொழிலைத் தரத்தக்கவன் 10-ஆம் வீட்டதிபதியாகும். இதனாலேயே 7-ஆம் வீட்டவனைப் பார்க்கிலும் 10-ஆம் வீட்டோன் பெரியவன் என்றனர். இனி 5-9-ஆம் வீட்டிற்குடையவர்களது விஷயங்களை ஆராய்வாம்.

5-ஆம் இடமென்பது பொதுவாய் புத்திரர் - பிரபுத்துவம் - கௌரவம் என்னும் விசேஷ ஸ்தானமாயினும், மேற்சொன்ன புத்திர பாக்கியம், பிரபுத்துவ பாக்கியம், கௌரவ பாக்கியம் என்னும் இவற்றை நிலைநிறுத்தத் தக்கவன் 9-ஆம் வீட்டதிபனே யாதலால் 5-ஆம் வீட்டதிபதியைப் பார்க்கிலும் 9-ஆம் வீட்டதிபதி பிரபலன் என்று கூறினர். ஆனதால் பாவ பலனைக் கூறுகையில் எவர் பெரியோர், எவர் சிறியோர் என்பதையும், எவருக்கு எவர் பெரியோர், எவருக்கு எவர் சிறியோர் என்பதையும் ஆராய்வது நலம். இவ்வாறு ஆராய்வோமாயின், சுபர்கள் பாபராவதும், பாவர்கள் சுபராவதும் நன்கு விளங்கும். 5

இரண்டு பன்னிரண்டிற்கிறைவ ரியல்பு கூறுகின்றது

ஓரையுரு பக்கத்தி னதிபர்க ளொண்ணுதலாய்
சேருமவர் தங்கடங்கள் சீரிடக்கு—நேராகும்
அற்பபல னீவ ரலைகடல்சூழ் வையகத்தில்
எப்பிறவி யோர்க்கு மிருந்து.

(பொ-ரை) ஒளிபொருந்திய நெற்றியை யுடையவளே! அலைபொருந்திய சமுத்திரஞ் சூழ்ந்த பூமியினிடத்தில் எந்தச் சாதகர்களுக்கும் இலக்கினத்திற்கு இரண்டு பக்கமாகிய தனவியத்தானாதிபதிகள் தங்கள் தங்களுடனே சேர்ந்த கோட்களுக்கும் தங்கள் தங்களுக்கு வேறுமிடத்திற்கும் நேராகி அசுபபலன்களைக் கொடுப்பார்கள் என்பதாம்.

(வி-ரை) கிரக சம்பந்தமும் இராசி சம்பந்தமும் இல்லாமலிருந்து உள்ளளவில் தங்கள் தங்கள் பொசிப்பிற்கு ஒத்தபலன்களை விசாரித்துக்

கூறுதல் எனக்கொள்க. இவை 2-12-ஆம் ஆதிபதிகளின் குணம் என்பதாகும். எவையெனில்? 2-12-ஆதிபதிகள் எந்த கிரகங்களுடன் சேர்ந்தாலும் எந்த ராசியிலிருந்தாலும், அவர்களிருந்த ராசிக்கு 7-ஆம் வீட்டதிபதியின் காரகப்படி சுபபலனையினும், பாபபலனையினும் அப்பலனை அற்பமாகவே கொடுப்பார் என்பதாகும்.

இதனால் 2-12-ஆம் ஆதிபர்கள் சுபனாக இருக்கினும் பாவனாக இருக்கினும், சுபர்களுடன் சேர்ந்திருந்தாலும், பாவர்களுடன் சேர்ந்திருந்தாலும், அவர்கள் எந்த ராசியிலிருந்தார்களோ அந்த ராசிக்கு 7-ஆம் ராசியானது ஜென்ம லக்கினப்படி சுபக்ஷேத்திரமாயின் சுபபலனில் அற்பமாயும், பாவக்ஷேத்திரமாயின் பாவபலனில் அற்பமாயும் தருவார் என்பதேயாகும். இக்காரணத்தால் 2-12-ஆம் அதிபர்கள் எவ்வளவு சுபபலத்திற்கு அதிகாரிகளாயினும் அவர்களிருந்த ராசிக்கு 7-ஆம் வீட்டதிபனது காரகபலத்தில் கொஞ்சத்தையே இந்த ஜாதகனுக்குக் கொடுப்பார் என்றும் அர்த்தமாகிறது.

இந்த சந்தேகத்தை விளக்க வேண்டுவதெனின் லக்கினம் என்பது அந்த ஜாதகன் ஆயினும் 2-ஆம் இடம் என்பது வலதுவிழி, 12-ஆம் இடம் என்பது இடதுவிழி ஆதலால் மேற்படி இருகண்களுக்கு உடையவர்களும் எந்த ராசியில் இருந்தார்களோ அந்த வீட்டவர் பலத்தை இந்த இருவர்களும் பார்வை சக்தியால் புரித்து இந்த ஜாதகனுக்குக் கொடுப்பார் என்பது அர்த்தமாகிறது. ஜாதக அலங்கார நூலுடையார்,

'வேல்விழி மாதே விளம்பு வலக்கண்
சால விரண்ட தாமிடங் கொண்டும்
ஏழு மிடக்கண் ணீரா ராலும்
சீல சுபா சுபங்களைத் தேரே"

என்றும் கூறியதால் இருவிழிக்குடைய கிரகங்கள் எந்த ராசியில் இருந்தார்களோ அந்த ராசிக்கு 7-ஆம் வீட்டதிபன் சுபனையினும் பாவனையினும் அவனது பலத்தை பரித்தே அந்தந்த ஜாதகனுக்குத் தருவார் என்பதைத் திண்ணமாய் கூறவேண்டுவதாகிறது. முன்சொன்ன 5-ஆம் செய்யுளின் விருத்தியில் 2-ஆம் இடமென்பது நேத்திரம்-வாக்கு-தனம்-குடும்பம்-முகம் என்றும், 12-ஆம் இடமென்பது விரயம்-சயனம்-இடதுவிழி என்றுங் கூறப்பட்டிருப்பதால், இங்கு விஸ்தரித்துக் கூறவேண்டியதில்லையாயினும், சிலவற்றைக் கூறுவோம். இரண்டாம் இடம்,

"உரைத்திடும் சௌபாக்கியம் தனம்குடும்பம்
ஒளிசெறி நேத்திரம் வித்தை
தலைப்பெரும் செல்வமுடன் புகல்வாக்கு
சாத்திரக் கேள்விகள் முற்றும்
விரைத்தெழு கமன மனமுமுத்தேசம்
மேம்படு விரும்புசெம் பொன்னும்
நிரைத்திடு நவரத்தின மிரண்டிடத்தி
நிலமைகண் டுரைசெய்வர் நின்றே"

எனவும், பனிரண்டாம் இடம்,

"பாவமங்கிய தேசத்தி லுத்தியோகம்
பணச்சில வுடனுறும் போகம்
மேவியசயன சவுக்கிய விவாதம்
விளைந்திடுந் தொழில்புரி கன்மம்

ஆவதோர் தானம் புண்ணியத் தியாகம்
அருண்மகனுஞ் சார்வதோர் விருத்தி
சேவலங் கொடியோ னருளினர் பெரியோர்
செப்புவர் துவாதச பலனே''

என்றுங் கூறியதை கவனிக்கில் 2-12-என்னும் விழிகள் இல்லையேல் எந்த ஜாதகனுக்கும் யோக போகபலன்களை கூறுவது சிலாக்கியமல்ல. மற்றெல்லா ஸ்தானாதிபர்களும் யோகத்தைக் கொடுக்கத் தகுந்தவர் என்றாலும், விழிகளுக்குரிய ஸ்தானங்களான 2-12-ஆம் இடமே விசேஷ முக்கிய ஸ்தானம் எனக்கொள்க. 6

எட்டுக்கிறைவனியல்பு கூறுகின்றது

பாக்கியநா சத்திறையாம் பாவத்தா லெட்டதிபன்
வீக்குவம் பார்முலையாய் மேதினியோர்—காக்கமிலாத்
துன்பமீ வன்னிவனே தூயவோ ராதிபனேல்
இன்பமீ வன்னிகலி யே.

(பொ-ரை) கச்சுக்கட்டிய தனங்களையுடையவளே! பூமியிலுள்ளவர்களுக்கு 8-ஆம் இடத்ததிபதி பாக்கியத்தானத்திற்கு விரயத் தானாதிபதியான பாவத்தினாலே நன்மை பெருக்கமில்லாத துன்பத்தைக் கொடுப்பன். அந்த 8-ஆம் இடத்ததிபதிதானே இலக்கினாதிபதியானால் மாறுபட்டு இன்பத்தைக் கொடுப்பன் என்பதாம்.

(வி-ரை) 8-ஆம் இடத்ததிபதியைப்போல மிகவுந் துன்பபலத்தைக் கொடானெனவுணர்க. இச்செய்யுளால் 8-ஆம் வீட்டதிபதியை என் கொடியவன் என்று கூறவேண்டுவதெனின் பாக்கியம் என்னும் 9-ஆம் வீட்டிற்கு விரயஸ்தானாதிபனாய் வந்த காரணத்தாலேயே 8-ஆம் வீட்டுக் குடையவனைப் பாவன் என்று கூறவேண்டியதாயிற்று எனவும் கூறினார். மற்றும் மேற்சொன்ன 8-ஆம் வீட்டதிபதியே ஜென்ம லக்கினாதிபதியாக வரில் மேற்கூறியவண்ணம் பாவபலனைச் செய்யாது இன்பமாகிய பலனையே செய்வான் எனவுங் கூறியுள்ளார். ஜென்ம லக்கினாதிபதியே எட்டாம் பாவாதியாக வருவது மேடலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு செவ்வாய், 1-8-க்குடையவனும் துலாலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சுக்கிரன் 1 8-க் குடையவனாகவும் வருவார். ஆனதால் இந்த இரண்டு லக்கினத்திற்கும் 8-ஆம் வீட்டவன் தீமையைச் செய்யான் என்றாலும் மற்றய ராசியில் பிறந்தவர்களுக்கு ஷை 8-ஆம் வீட்டோன் கொடியதைச் செய்வான் என்றே ஏற்படுகிறது.

பொதுவாய் கொடிய ஸ்தானங்கள் என்று கூறியது 3-6 8-12-ஆகும். இந்நான்கு க்ஷேத்திராதிபர்களையும் என் பாவர்கள் என்று கூறினரெனில்? 3-ஆம் வீட்டோன் மாதரு விரயாதிபனானதாலும், 6ஆம் வீட்டோன் களத்திர விரயாதிபனானதாலும், 8-ஆம் வீட்டோன் பிதுர்பாக்கிய விரயாதியானதாலும், 12-ஆம் வீட்டோன் லக்கின விரயாதியானதாலுமே கொடியவர் எனக் கூறினர் என்றும், விரயாதிபத்திய தோஷத்தாலேயே கொடியவராவர் என்றதால் எல்லோரைக் காட்டிலும் விரயாதிபதியே முழுபாபி என்றுங் கூறவேண்டியதாகிறது. இவ்வித காரணத்தால் ஓர் ஜாதகனுக்கு வேண்டியது பாக்கியமேயாதலால் பாக்கிய விரயாதியாகியவன், 8-ஆம் வீட்டவனேயாதலால் மேற்படி 8-ஆம் வீட்டவனைக் கொடியவன் எனக் கூறினர்.

மற்றும் 8-ஆம் பாவத்தின் பொது லக்ஷணங்கள் என்னவெனில்?

"புலவுறும் படையால் வாதைசே ருயுத்தம்
பொருப்பின்மே லேறிவீழ்ந் திடுதல்
நிலைபெறும் வியாதி விக்கினங் கிலேச
நீள்பல துன்பமோ டிரணம்
சிலவினு னட்ட மூழ்விழுகாடு
செறிபகை மரணமித் தனையும்
உலகினி லுயர்ந்தோ ரட்டம பலன்கண்
டுரைசெய்வா ருண்மை பெற்றிடவே"

என்றதால் 8-ஆம் பாவாதிபதி பலமாய் இருந்தாலும், ஆயுள்மாத்திரம் அதிகமா யுண்டாகலாமேயொழிய, அஷ்டமாதிபன் பலமடைந்த திசையில், கொடிய பலனையே தருவார். அவையாவன:—இச்செய்யுளில் கூறியபடி பாக்கியத்தை விரயம் செய்தே தீருவான் எனவும், **மணிகண்ட கேரளம் திசைப்போசிப்பு மாரககாண்டச் செய்யுளின்படி,**

"எட்டவன் திசையுமாகில் இருமாரக பொசிப்புமாகில்
நட்டங்கள் மிகவுண் டாகும்"

எனக் கூறியவண்ணம் அட்டமாதிபன் திசையில் இரண்டுவித கெண்டம் (இருமுறை கெண்டம்) செய்யும் எனவும், புக்தியாகில் அளவிறந்த நஷ்டங் களை உண்டுபண்ணும் எனவுங் கூறவேண்டுவதாயிற்று.

மற்றும் சிலர் சூரியசந்திரர்களுக்கு 8 ஆம் ஆதிபத்தியம்வரில் அவர் தீயபலனைத் தரார் என்றுங் கூறுவதுண்டு. பொதுவாய் முன்கூறியபடி மேடம் - துலாம் இவற்றில் பிறந்தோர்க்கும் எவர்களாயினும் சூரியன் சந்திரன் இவர்கள் 8-ஆம் வீட்டிற்கதிகாரிகளாகி அவர்கள் திசைகாலங் களில் தீமையைத் தரமாட்டார் என்று கூறலாமேயொழிய நன்மையைத் தருவார் என்று கூறயிடமில்லை. ஆதிபத்தியத்தால் 8-ஆம் வீட்டவனுகி, தான் நின்றயிடம் கேந்திரகோணமானாலும் இவ்விதமே கூறுவதற்கு இட முண்டாகும். இங்கு கேந்திராதிபத்திய தோஷம் எவரை அதிகமாய் பாதிக்கும் என்பதை விளக்குவார். 7

கேந்திராதிபத்திய தோஷத்தைக் கூறுகின்றது

கண்டத் ததிபராம் பாபத்திற் காரிகையாய்
கொண்டகுரு வெள்ளி கொடியரிவர்—தண்டாமல்
ஆயு வியத்திருப்பா ராமாகி லையமிலா
தாயுவியஞ் செய்திடுவா ராங்கு.

(பொ-ரை) பெண்ணே! கேந்திராதிபத்திய தோஷத்தில் குருவும் வெள்ளியும் மிகவும் பலவான்கள். இவர்கள் நீங்காமல் ஆயுளுக்கு வியத் தானமாகிய 2·7-ஆம் இடங்களில் நின்றாராகில் சந்தேகமில்லாமல் ஆயுள் விரயஞ் செய்வார்கள் என்பதாம்.

(வி·ரை) மாரகத் தானுதிபதியைப் பார்க்கிலும் அந்த மாரகத்தானத்தி லிருப்பவர்கள் பலவான்கள் எனக்கொள்க. இவர்கட்குக் கேந்திராதிபத்திய தோஷத்தாற் கூறப்பட்டது. மாரகத்தான இலக்கினமேற் கூறுகின்றது. இச்செய்யுளால் கேந்திர தோஷத்தில் மிக்க பலமுடையவர் எவர்? என்பதை

நன்கு விளக்கியுள்ளார். ஏனெனில்? முன்கூறிய 4-ஆம் செய்யுளின்படி சுபகோட்கள் கேந்திரம்பெறின் கொடிய பலனைத் தருவார் என்றபடி மேற்படி கேந்திரத்தால் தோஷமடைந்த சுபர்களில் எவர்கள் மிக்க கொடியவர் என்பதை இச்செய்யுளில் குரு-சுக்கிரன் என்னும் இவ்விருவர்களே மகா பாபிகள் என்பதைக் கூறினார். ஏனெனில்? சுபகோட்கள் நால்வருள் குரு-சுக்கிரன் என்னும் இருவரும் பூரண சுபனெனவும், புதன் கால் சுபனெனவும், பூர்வபக்ஷத்தில் பிறந்தவர்களுக்கு சந்திரன் முழுச்சுபனும், அமாபக்ஷத்துக்குச் சந்திரன் முழுப்பாபியும் ஆவர்களெனக் கூறியதாலென்க. மற்றும் புதனைப்பற்றிய சிறப்பு விதியை கவனிக்குமிடத்து,

"ஆன புந்தி சுபரோ டுத்திடில்
தானும் நற்சுப னாகுவன் சூழ்வுடன்
ஊன தீயருடன் கூடினால் விழி
மான னாகுவன் மன்னுவன் தீயனாய்"

என்ற காரணத்தால் புதன் தனித்திருந்தால் பூரண சுபன் எனவும், சுபருடன் கூடினால் பூரண சுபனெனவும், பாவர்களுடன் கூடினால் பூரண பாவனெனவும் கூறுதலால் ஆதிபத்திய தோஷத்தால் பாவர்களாகும் கிரகங்கள் உள்ளனவேயன்றி தனது குணானுபவத்தால் மாற்றுதலடையாத கிரகங்கள் குரு-சுக்கிரன் என்னும் இவ்விருவரே யாகுமென்றும் ஏற்படுகிறது.

இக்காரணத்தால் குரு - சுக்கிரர் என்னும் இருவர்களும், தினசரி கோட்களில் பூரண சுபர்களேயாயினும் ஆதிபத்தியங்களில் 4-7-10 என்னும் க்ஷேத்திராதிபர்களாகவரில் இவ்விருவரைவிட கொடியவர்கள் இல்லை என்பது விளங்குகிறது. இதனாலேயே இந்நூலாசிரியரும், மேற்படி இருவரும் ஆயுள் விரயஸ்தானம் என்னும் * 2-7-ஆம் இடங்களில் இருப்பார்களே யாமானால் அவர்கள் திசையில் கட்டாயம் மாரகம் செய்வார் என்றனர்.

இவ்வித மாறுபாட்டால் இங்கு கூறிய குரு-சுக்கிரர் என்னும் கேந்திர தோஷமடைந்து 2-7-ல் நிற்பார்களேயாமானால் அவர்கள் திசையில் கட்டாயம் மாரகமே செய்வார் என்று ஏற்படுகிறது. 2-ஆம் வீட்டையும், 7-ஆம் வீட்டையும் ஏன் மாரகஸ்தானம் எனக் கூறவேண்டும் என்பதை பின்வரும் 21-ஆம் செய்யுளால் நன்கு விளக்கியுள்ளார். ஆதலால் இங்கு எந்தெந்த லக்கினத்திற்கு எவரெவர் மாரகர் என்பதை விளக்குவாம்.

மேடம் - கடகம் - துலாம் - மகரம் என்னும் 4-ராசிகளுக்கும், அந்தந்த லக்கினத்திற்கு 2 - 7 - என்னும் க்ஷேத்திராதிபர்கள் மாரகராவர். ரிடபம்-சிங்கம்-விருச்சிகம்-கும்பம்-என்னும் நான்கு ராசிகளுக்கும், அந்தந்த இலக்கினத்திற்கு 3-8-என்னும் க்ஷேத்திராதிபர்கள் மாரகராவார்கள். மிதுனம்-கன்னி-தனுசு-மீனம் என்னும் நான்கு ராசிகளுக்கும் 7-11-என்னும் இரண்டு க்ஷேத்திராதிபர்களும் மாரகராவர் என்பது பொதுவிதியாகும். மற்றும் பொதுவிதியைக் கூறுகையில், லக்கினத்துக்கு 2-7-ஜாதகனுக்கு மாரகம். லக்கினத்துக்கு 4-7-5-அன்னைக்கு மாரகம். லக்கினத்துக்கு 5-11-சகோதர மாரகம். லக்கினத்துக்கு 6-ஆம் இடம் பிதாவுக்கு மாரகம். லக்கினத்துக்கு 8 - ராகு நிற்கில் பிதா மாரகம் என்பனவாம். இதனை எம்மால் அச்சிட்டுள்ள **சோதிட சில்லரைக்கோர்வை** 29-ஆம் பக்கத்தில் இன்னும் விரிவாய்க் காணலாம்.

---

* 2-7-ஐ மாரகத்தானம் என்று கூறியதற்கு காரணம் இந்நூலின் 21-ஆம் செய்யுளால் அறிக.

ஆதலால் இங்கு கூறிய செய்யுளால் கேந்திர தோஷத்தால் பலயீனம் அந்த குரு-சுக்கிரர்கள் ஜென்ம லக்கினத்திற்கு 2-7 என்னும் இடங்களில் இருந்து அவர்கள் திசை எந்த வயதில் வந்தாலும் அந்த திசையில் கட்டாயம் மாரகம் செய்யும் என்பது முக்கிய கருத்தாகும். பின்வரும் செய்யுளால் அந்தந்த கிரகங்களது குணகுண விசேஷங்களை அறிக. 8

புதன் மதி இவர்களுக்குண்டானகுணங் கூறுகின்றது

பின்னரப் பாவத்திற் பேர்பெரியன் மாலாகும்
பின்ன ரவன்றந்தை பேசுங்கால்—இந்நிலத்தில்
எட்டா மிடத்ததிப ரெண்ணிற் பெரும்பாவம்
கிட்டா திரவி மதிக்கு.

(பொ-ரை) குரு வெள்ளிக்குப் பின்னர் அந்தக் கேந்திராதிபத்திய தோஷத்தில் புதன் பலவான். புதன் பின்னரவன்றந்தையாகிய சந்திரன் பலவான். 8-ஆமிடத்து ஆதிபத்தியத்திலுண்டான மட்டில்லாத பெரிய பாவம் சூரிய சந்திரர்கட்குச் சேராது என்பதாம்.

(வி-ரை) ஒழிந்தோர்கட்குச் சேருமென்பதாயிற்று. கேந்திராதிபத்திய தோஷமுள்ள இந்நால்வரையும் சேரக் கூறுதலால் குரு தோஷத்தில் சுக்கிர தோஷம், சுக்கிர தோஷத்தில் புததோஷம், புததோஷத்தில் சந்திர தோஷமும் குறைதலெனக்கொள்க. மற்றை 8-ஆம் இடத்ததிபதிகளைப் போலச் சூரிய சந்திராதிகளுக்குத் தோஷமில்லையென்க. இச்செய்யுளால் முன்கூறிய செய்யுளின்படி குரு - மதி என்னும் இவ்விருவரும் கேந்திர தோஷத்தில் மகா கொடியவர் என்று கூறினாலும், புதன்-சந்திரன் என்னும் இவ்விருவருங்கூடி மேற்சொன்ன கேந்திர தோஷத்தால் கொடியவராவர் எனினும், குரு-சுக்கிரர் என்னும் இவ்விருவர்களிலும் குறைந்த தோஷமே புதன-சந்திரன என்னும் இவ்விருவருக்கும் உண்டு என ஏற்படுகிறது. ஏனெனில்? புதனைப்பற்றிய விஷயங்களை முன்கூறிய (8)-ஆம் செய்யுளின் விருத்தியில் கூறியுள்ளேன். ஆதலால் இங்கு சந்திரனைப்பற்றி ஆராய்ச்சி செய்வாம்.

பொதுவாய்ச் சந்திரனது விஷயங்களைச் சோதிக்குமிடத்து தினசரிக் கோட்களில் சந்திரன் சுபன ஆயினும் வளர்பிறைச் சந்திரனே பூரண சுபன் எனவும், தேய்பிறைச் சந்திரனே பூரணபாவன் எனவும், பொதுப் பலனால் விளக்கப்பட்டுள்ளன. மற்றும் சந்திரன் $2\frac{1}{4}$-நாளைக்கு ஒருமுறை ஒவ்வோர் இராசியாய் மாறிக்கொண்டே மாறிமாறி சஞ்சரிப்பவனானதால் இந்த சந்திரனை சுபன் என்பதா? பாபி என்பதா? என்னும் சந்தேகத்தை நிவர்த்தி செய்ய, அவனது கலை குறைவதும் அதிகமாவதுமாகிய இதனைக் கொண்டே தீர்மானிக்கலாம் என்பது இந்நூலாசிரியரது கருத்தாகும். மற்றுமுள்ள பல நூலாசிரியரும் இதனை ஆமோதித்து இருக்கின்றனர். ஆனதால், சந்திரன்-புதன் என்னும் இருவரையும் தினசரிக் கோட்களில் சுபன் என்று நிச்சியாது மற்றுமுள்ள பலா பலன்களால் சுபன் - அசுபன் என்று தேர்ந்துத் தெளிவதே சோதிடர்களின் முக்கிய கடமையாகும். புதன்-சந்திரன் என்னும் இவ்விருவர்களின் ஆதிபத்தியங்கள் இவ்வாறிருக்க, முன்கூறிய (8)-ஆம் செய்யுளில் சூரிய சந்திரர்களுக்கு 8-ஆம் இடத்து தோஷம் இல்லை என்று சிலர் கூறுவார் என்றதை இந்நூலாசிரியரும் சம்மதித்திருக்கின்றனர். எப்படியெனில்?

"எட்டா மிடத்ததிப ரெண்ணிற் பெரும்பாவம்
கிட்டா திரவி மதிக்கு"

என்று கூறியதாலெனக. 8-ஆம் வீட்டு தோஷம் ஏன் சூரிய சந்திரர்களை பாதிக்காது? எனில், சூரிய சந்திரர்களுக்குள்ள குணங்களையே இங்கு அத்தாக்ஷி கூறவேண்டுவதாகிறது. எப்படியெனில்? "பாரெலாம் சசிகதிரோன் இருவர்க்கு மாகும்" என்றுகூறிய சாதக அலங்காரத்தால் இப்பூமி எவ்வளவுதூரம் உள்ளனவோ அவ்வளவு தூரமும், சூரிய சந்திரர்களுக்குச் சொந்தமாகிய இடமெனவும் கூறுவதோடு, "இரவி சங்கரன் ஈஸ்வரி திங்கள்" என்ற வீமேசுரர் வாக்கியப்படி சூரியனே சங்கரன் என்றும், சந்திரனே மகா பரமேஸ்வரி என்றுங் கூறியிருத்தலாலும், "பானுமதி இவர்கள் பாழ்செய்யார்" என்று கூறிய பிருகத்ஜாதக வசனத்தாலும், சூரிய சந்திரர்கள் எவ்வித தோஷத்தால் பீடிக்கப்பட்டிருந்தாலும் நன்மைப் பலன்களைச் செய்யார என்று கூறலாமேயொழிய கொடிய தீமைப்பலனைச் செய்யார் என்று கூறியதாலென்றே கூறவேண்டியதாகிறது.

மற்றும் பொதுப்படையான விஷயங்களைச்சோதிக்குமிடத்து சூரியன் பிதுருகாரகனும், சந்திரன் மாதுருகாரகனும் ஆனதால் தன் பிள்ளைக்குத் தானே கெடுதி செய்யான் என்றும் கூறவேண்டுவதாகிறது. மற்றும் சூரியனது விஷயங்களையும், சந்திரனது தாரதம்மியங்களையும் எல்லோரும் அறிவர். ஆனதால் 8-ஆம் வீட்டதிபர்கள் சூரியன் அல்லது சந்திரனாயினும் அவர்கள் நன்மையும் செய்யார், தீமையும் செய்யார் என்றே கூறுவது சிலாக்கியம். 9

செவ்வாய்க்குணங் கூறுகின்றது

ஆறற்கி ரைந்தாங்கண் டாதிக்கத் தானசுபம்
சீருற்ற கோணத்தாற் சீர்பெருமே—வாருற்ற
கொங்கையாய்க் கச்சாலை மூர்த்திகுமா ரந்தையான்
சிங்கார மாங்கடகச் சீர்.

(பொ-ரை) கச்சணிந்த தனங்களையுடையவளே! செவ்வாய்க்கு ஆதிக்கத்தினாலே தசமகேந்திராதிபத்தியத்திலுண்டான சுபத்துவம் திரிகோணாதிபத்தியத்தி லுண்டானபடியினாலே சிறப்பைப் பெறும். தசமகேந்திராதிபத்தியத்தினாலே மாத்திரம் சிறப்பைப் பெறாது. இஃது குமாரந்தையானாகிய தாண்டவபூபன் புதல்வனாகிய கச்சாலை மூர்த்தியினுடைய சர்தக இலக்கினமாகிய கடகத்திற குண்டாகிய சிறப்பு எனபதாம்.

(வி-ரை) இச்செய்யுளால் கொடியவனாகிய செவ்வாய் கேந்திராதிபத்தியத்தால் மாத்திரம் சுபனாவான் என்று நினையாதே, கேந்திராதிபத்தியத்துடன் கோணாதிபத்தியமும் சேர்ந்ததாலேயே சுபனாவான் என்பதை யறிவாய் என்றதோடு இவை கடக லக்கினம் ஒன்றுக்கே பொருந்தும் என்றும் இந்த லக்கினத்தில் கச்சாலை மூர்த்தி என்பவர் பிறந்ததால் இவ்வாறு கூறப்பட்டதெனவுங் கூறியுள்ளார். ஏனெனில்? கடக லக்கினத்தில் பிறந்தவர்களுக்கே 5-10-க்குடைய கோள் செவ்வாயாக வரும், கோணாதிபத்தியமும் கேந்திராதி பத்தியமும் பெற்ற கோள் ஒன்றாயின் அவை தீமையை செய்யமாட்டாது என்பது சாஸ்திரங்களின் கருத்து. எப்படியெனில்?

"கேந்திர கோணத் ததிப ரொருவாகில்
கிளர்சுப யோகப் பலனைக் கொடுப்பர்" என்றதாலும்,

"கண்டத்து ஆதிபரும் கனகேந்தி ராதிபரும்
விண்டிடத்தி லேகனு மாய்"

என்றதாலும் கேந்திராதி பத்தியமும், கோணாதி பத்தியமும் ஒரே கிரகத்திற்குச் சொந்தமாகில், அந்த ஜாதகனுக்குப் பிரபல இராஜயோகம் உண்டு எனவும் கூறியுள்ளார். இதற்கு திருஷ்டாந்தம் கச்சாலை மூர்த்தி ஜனித்தது கடகலக்கினம் ஆதலாலும், கடக ராசிக்கு கோணாதிபதி என்னும் 5-ஆம் வீட்டுக்குடையவனும் தசமகேந்திராதிபதி என்னும் 10-ஆம் வீட்டுக்குடையவனும் செவவாயே யாதலால் இந்த செவ்வாய்க்குரிய குணங்குறிகளை கூறப்பட்டன. செவ்வாய் ஒருவன் மாத்திரம் 5-10-க்கு ஆதிபத்தியம் பெற்று நிற்பது கடகம் ஒன்றே யாதலாலும், இந்த லக்கினத்தில் பிறந்தவர் தாண்டவமூர்த்தியே யாதலாலும் இதற்கு உதாரணம் கூறியதும் வியக்கத் தக்கது. இச்செய்யுளால் கடகலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு 5-ஆம் ஆதிக்கம் பெற்ற விசேஷத்தால் பலமடையவில்லையாயினும் 5 - ஆம் ஆதிக்கத்துடன் 10-ஆம் ஆதிக்கமும் பெற்ற விசேஷ குணத்தால் பூரண சுபனானன் என்பது ஒருபுறம் இருக்க, மற்றய லக்கினங்களுக்கு செவ்வாய் எவ்வித காரணத்தால் சுபனாவன் அல்லது பாவனாவன் என்று ஆராய்வோமாயின் பொதுப்படையாய் 5-ஆம் ஆதிபத்தியம் பெற்ற செவ்வாய் சுபனாவானென்றே கூற வேண்டுவதாகிறது.

இவ்வாறு 5-ஆம் ஆதிக்கம் செவ்வாய்க்கு வருவது தனுசு லக்கினத்தில் பிறந்தவர்களுக்கேவரும். தனுசு லக்கினத்தில் பிறந்தாலும், ஷை செவ்வாய்க்கு 5-ம் ஆதிக்கத்துடன் விரயாதி பத்தியமும் வரும் காரணத்தால் ஷை செவ்வாய் அரைச்சுபன் என்றும் கூறுவர் சிலர். இதனையும் சம்மதிக்க வேண்டியதேயாகும். பொதுவாய் செவ்வாய் தினசரி கோட்களில் பாபியும் கடக லக்கினத்திற் பிறந்தவருக்கு பூரண சுபனும், தனுசு லக்கினத்திற்கு அரைச்சுபனும், ஏனையோர்க்கு பாபியுமாவான் என்றே கூறவேண்டுவதாகிறது. மற்றும் துலாராசியும பிறந்தோர்க்கு செவ்வாய் 7-ஆம் ஆதிக்கமும், மகரத்தில் பிறந்தோர்க்கு 4-ஆம் ஆதிக்கமும் பெற்ற காரணத்தால் பாவிகள் கேந்திராதி பத்தியம்பெறின் சுபனாவன் என்று கூறியதைச் சம்மதித்தாலும் பூரண சுபன் என்று கூறமுடியாது. ஆதலால், மேற்படி செவ்வாயினது இடம் - சேர்க்கை - பார்வை முதலிய காரணத்தாலேயே அதனை நிலைகூறுவது சிலாக்கியமாகும். 10

இராகு கேதுக்களினியல்பு கூறுகின்றது

யாதொரு பாவத்தோன் யாதொருபா வேசனுடன்
தீதறச்சேர்ந் திட்டாற் றினபலன்கள்—காதுறவேற்
கண்ணாய் கடுங்கோட்கள் காசினியி லுள்ளவர்கட்
கெண்ணும லீவா ரிருந்து.

(பொ-ரை) காதளவு பொருந்திய கண்களை யுடையவளே! பூமியிலுள்ளவர்கட்கு இராகு கேதுக்கள் மற்றைக் கோட்கள்போல ஆதிபத்திய மில்லாதபடியினாலே அவர்கள் எந்தெந்த ஸ்தானத்திலிருந்தார்களோ எந்தெந்த பாவாதிபர்களுடன் கூடினார்களோ அவ்வவர்கட்கேற்ற சுபாசுப பலன்களைக் கொடுப்பார்கள் என்பதாம்.

(வி-ரை) கூடுமவர்கள் பலரா யுள்ளளவில் அதிற் பலவானுக்கேற்ற பலன் கொடுப்பார்களெனவறிக. இச்செய்யுளின் முக்கிய கருத்தாவது என்னவெனில்? சூரியன்முதல் சனியீறாக உள்ள சப்த கோட்களுக்கும்,

ஆக்ஷிவீடென்னும் சுயக்ஷேத்திரம் உள்ளதாலும், இராகு கேதுக்களுக்கு மாத்திரம் ஆக்ஷிவீடு இல்லையாதலால் அவர்கள் எந்த ராசியிலிருந்தார்களோ அந்த ராசியதிபனுடைய காரக பலத்தையாவது அல்லது எந்த கிரகத்துடன் சேர்ந்தானோ அந்த கோளின் பலத்தையே கொடுப்பார் என்பதே யாகும். இதற்குக் காரணம் என்னவெனில்? இராகு கேதுக்களுக்குச் சுயக்ஷேத்திரம் இல்லாததாலே யாகும்.

மற்றும் இராகு வைராக்கிய காரகனும், கேது ஞானமோக்ஷ காரகனும், ஆனது பற்றியும், எல்லா கிரகங்களது ஒளியையும் ஷ இராகு கேதுவினது சாயையானது மறைத்துவிடு மாதலாலும், இராகுவுடனே அல்லது கேதுவுடனே எந்த கிரகங்கள் சேர்ந்தனவோ அந்த கிரகத்தினது காரக குணத்தை மேற்படி சாயா கோட்களானது பரித்து தனக்கு அதிகாரம் வந்த காலத்து இப்பூமியிலுள்ளவர்க்குக் கொடுப்பர் என்னும் சாஸ்திரப் பிரமாணம் இருப்பதாலும் அனுபவத்திலும் ஒற்றுமைப்பட்டு வருவதாலும் என்க.

இதுவன்றி இராகு கேதுக்கள் தினசரிக் கோட்களில் பாவியெனக் கூறப்பட்டிருப்பதாலும், இந்த இராகு கேதுக்களும் கேந்திராதி பத்தியத்தால் பலவான் என்றே கூறவேண்டுவதாகிறது. ஆயினும் பொதுப்பலனை கவனிக்குமிடத்து ஜென்மத்தில் இராகு அல்லது கேது நிற்கில் பலயீனமுடையவன் எனவும் 2-ல் நிற்கில் குடும்ப யீனமுடையவன் எனவும், 3-ல் நிற்கில் சகோதர தோஷமுடையவனெனவும், 4-ல் நிற்கில் மாதுருயீனன் சுகயீனன் எனவும், 5-ல் நிற்கில் புத்திரயீனனும், 6-ல் நிற்கில் தைரியவான் வியாதியில்லாதவன், கடன் இல்லாதவன் என்றும், 7-ல் நிற்கில் களத்திரயீனன் என்றும், 8-ல் நிற்கில் விஷத்தால் கெண்டமும், 9-ல் நிற்கில் பிதாவுக்கு பீடையும், 10-ல் நிற்கில் அடிமைத் தொழிலும் படாடோபமும் உடையவனெனவும், 11 ல் நிற்கில் வருமான விக்கினமுடையவன் எனவும், 12-ல் நிற்கில் துர்விரயமுடையவன் எனவுங் கூறியுள்ளார்.

இவ்வாறான விஷயங்களை ஆராயுமிடத்து இராகுவுக்கோ அல்லது கேதுவுக்கோ 6-ல் நிற்கினும், 10-ல் நிற்கினும் நன்மை எனவுங் கூறுதலால் இவ்விரண்டு க்ஷேத்திரங்களைவிட மற்றய க்ஷேத்திரங்கள் விசேஷ நற்பலனுக்குடைய க்ஷேத்திரமல்ல என்பதேயாகும். ஆயினும் அவர்கள் நின்ற வீட்டுக்குடையோன் காரகத்துவமும் அவர்களுடன் சேர்ந்தவர், பார்த்தவர் முதலியவர்களது காரகத்துவமும், சுபத்துவமா யிருந்தாலன்றி பொதுவாய் இராகு - கேது இவர்களுக்கு நற்குணம் என்பது இல்லையென்றே கருத வேண்டியதாகிறது. மேற்சொல்லிய விதங்களாய் சுபத்துவம் சுபகாரகம் பெற்ற கோட்களின் சகிதம் பெற்ற இராகு கேதுக்களோவெனில் அளவிட முடியாத விசேஷ பலனைத் தருவார் என்பதற்கு ஐயமில்லை. பொதுவாய் சுபத்துவம் பெற்றவர்களுடன் கூடின் அளவிறந்த சுபபலனும், பாப ஆதிபத்தியம் பெற்ற கோட்களுடன் கூடில் அளவிடமுடியாத பாபபலனுமே
தருவார் என்பது நிச்சயம். 11

பொதுச்சுபயோகம் புகல்கின்றது

கோணக்கோள் கண்டக்கோள் கூடலுடனே பார்த்தல்
பேணுற் றொருவரில்லிற் பெட்புடனே—காணுற்
றொருவருற்று ராகி லொழிந்தோ ருறுமல்
இழிநலத்தை யீவா ரிவர்க்கு.

(பொ-ரை) திரிகோணாதிபதியும் கேந்திராதிபதியும் 3-6-8-11-ஆம் இடங்களுக்கு அதிபதிகளுடன் கூடாமல் தங்கடங்கள் சம்பந்தமான வேறொரிடத்து ஆதிபத்திய தோஷமில்லாமல் இருவருங்கூடல், ஒருவரை யொருவர் பார்த்தல், ஒருவர் வீட்டில் ஒருவர் இருத்தலான சம்பந்த மூற்றாராகில் இவ் வுலகத்தோருக்கு விசேஷ சுபபலனைக் கொடுப்பார்கள் என்பதாம்.

(வி-ரை) தான விசேஷத்தால் சுபபலனைக் கொடுப்பவராயினும் ஒருவருக்கொருவர் சம்பந்தத்தால் விசேஷபலனைக் கொடுப்பார்க ளென்றறிக. இச்செய்யுளால் கோணாதிபதிகள் கேந்திரத்திலும், கேந்திராதிபதி கோணத்திலும் இருந்து கொடியவர்களாகிய 3-6-8-12-என்னும் க்ஷேத்திராதிபருடன் கூடாமலும், பாராமலு மிருக்கில் அளவிறந்த சுபயோக பலனைத் தருவார் எனவும், மேற்கூறியவண்ணம் கோணாதிபதிகள் கேந்திரத்திலும், கேந்திராதிபதி கோணத்திலும் நின்று ஒருவர்க்கொருவர் பரிவர்த்தனை யோகம் அடைந்திருந்தாலும், மேற்கூறிய 3-6-8-11-என்னும் அதிபர்களுடன் சேர்ந்தோ அல்லது பார்வையிட்டோ இருக்கில் மேற்படி கேந்திரகோணாதிபர்கள் சுபபலனைத் தரத்தகுந்தவர்களல்ல என்பதே இச்செய்யுளின் கருத்தாகிறது.

ஆகலால் கேந்திரகோணாதிபர்களுக்கு 3-6-8-12-என்னும் இடங்களில் உள்ள கிரகமும். மேற்படி ஸ்தானாதிபர்களும் பகைவரெனவும் கூறவேண்டுவதாகிறது. இவை ஆதிபத்தியப் பகை என்று கூறவேண்டியதாகும். இச்செய்யுளின் இறுதியில் "இழிகலத்தை யீவார்" என்றமையால் மேற்கூறியவாறிருக்கின் கொடிய பலனையே தருவான் என்றும் ஏற்படுகிறது. இக்கார்ணத்தைக்கொண்டே,

"கேந்திரகோ ணத்ததிபர் கீழோ ருடன்கூட
போந்திருந்த கோட்களுமே பொல்லாரேல்
மாந்தருக்குப் பொல்லாது"

என்றும் கூறியுள்ளார். பொதுவாய் கேந்திராதிபதி கோணத்திலும், கோணாதிபதி கேந்திரத்திலும் இருந்து பொல்லார் பாராரேல் அவர்களைவிட நற்பலனை கொடுப்பவர். வேறொருவரும் இல்லையெனவும், மேற்சொன்னவாறிருந்து கொடியோர் சம்மந்த மூற்றிருப்பாரேயாமாகில் அவர்களைப்போல் கொடியபலனைக் கொடுப்பவரும் வேறில்லை எனவுங் கூறவேண்டியதாகிறது. கேந்திர கோணாதிபர்கள் ஒருவர்க்கொருவர் பரிவர்த்தனையா யிருக்கின் அவர்கள் தரும்பலன் என்னவெனில்?

"கூசாது கோணாதி கேந்திராதி
குறிப்பான பரிவர்த்தனையா யிருக்க
தேசாதி பத்தியமும் வருவதோடு
திரளான தானியங்கள் கூடும்பாரு
ஆசார மூண்டாகும் அரிவைசேர்வள்
அழகான ஆபரண மூண்டாம்பாரு
வீசாது கொடியபலன் கொஞ்சமேனும்
விதவிதமாய் வாகனங்கள் உண்டுபாரே"

என்றும் வர்ணித்திருப்பதை அறிக. மற்றும் மேற்கூறியவண்ணம் கேந்திர கோணாதிபதிகள் பரிவர்த்தனை அடைந்திருந்தாலும், 3-6-8-12-க்குடையவர்கள் சேர்க்கையோ பார்வையோ இருக்கின் அவர்கள் தரும் பலனவைது என்னவெனில்?

"கேந்திர கோணத்ததிபர் மாறிநின்று
கிழோர்க ளுடன்கூட பார்வையாகில்
போந்தபலன் தாராது புகழ்ச்சிகுன்றும்
புண்ணியனே பலதனமும் சேதமாகும்
ஏந்திழையாள் மரணமுண்டு இன்னும்கேளு
எல்லவர்க்கும் பொல்லாவனாய் விளங்குவானும்
காந்தனெனும் மனைவிக்கு தோஷம்காட்டும்
கனமான போகமெலாம் நாசமாமே"

என்று கூறியதால் கேந்திர கோணாதிகள் ஒருவருக்கொருவர் பரிவர்த்தனையாகி அவர்களுடன் பாவக்கோட்கள் சம்மந்த முற்றிருப்பாரேயாமானால் அவர்கள் திசைபுக்தி காலங்களில் அளவிறந்த தீயபலனையே விளைவிப்பாரெனவும் கூறலாம். ஆதலால் இவ்வாறான விஷயங்களை திசைபுக்தி காலங்களிலும், பொதுப்பலனை விசாரிக்கும் காலத்திலும் வெகுவாய் விசாரித்து நிலைகூறவேண்டும். 12

இராஜயோகங் கூறுகின்றது

வலியாருங் கண்டக்கோள் வாய்ந்தகோ ணக்கோள்
நலியார்க ளாகினுமே லல்லர்—சலியாமல்
கூடின மாத்திரத்திற் கொம்பனையாய் தாண்டவன்றன்
பீடுறுதேட் சீரென்று பேசு.

(பொ-ரை) பூங்கொம்புக்குச் சமானமானவளே! சுசமகேந்திராதிபதியும் நவத் திரிகோணாதிபதியுங்கூடின சம்பந்த மாத்திரத்தினலே பாவக்கோளுடன்கூடி பாவராசிபாதிபத்திய முற்றிருந்தாலும் சலியாமல் நல்ல இராஜயோகபலனைக் கொடுப்பார்கள். இஃது தாண்டவபூபன் சாதக விலக்கினமான விருச்சிகத்துக்குண்டான சிறப்பென்று சொல்வாயாக என்பதாம்.

(வி-ரை) முன்கூறிய செய்யுளால் கேந்திர கோணாதிபர்கள் ஒருவருக்கொருவர் பரிவர்த்தனையில் இருந்தால் சுபபலனைத் தருவார் என்றும், மேற்படி கோட்களுடன் பாவர்கள் சம்மந்தப்படின், கொடிய பலனைத் தருவர் என்றும் கூறினர். ஆயினும் இச்செய்யுளால் 9-10-ஆம் வீட்டிற்குடையவர் ஒன்றுகூடி பாவசம்மந்தம் பெற்றிருந்தாலும், அவர் இராஜயோகத்தையே தருவார் என்றனர். ஏனெனில்? இவை தாண்டவபூபன் ஜனன லக்கினமாதலால் கூறப்பட்டதென்றுங் கூறியுள்ளார். தாண்டவபூபரது விரிவான சரித்திரத்தை இந்நூலின் இறுதியில் அறியலாம்.

இங்கு கூறப்பட்டது தர்ம கர்மாதியோகம் எனப்படும். 9-10-க்குடையவர்களது பெருமையை சந்திர காவியத்தில்,

"அஞ்சொன் பதுக்கதிபர் பாவிசுப ராகுலும்
மிஞ்சு பலனைத் தருவர்" எனவும்,

"பிலகேந் திரகோண நாதருக்கு பேதஞ்
சொலும்பாவி சம்பந்த தோடமில்லை மயிலே"

எனவுங் கூறியிருத்தலால் 9-10-க்குடைய கோட்களுக்கு பாவர்களது சம்மந்த தோஷமோ சேர்க்கைதோஷமோ இல்லையெனவுங் கூறுதலால் என்க. மற்றும் அநேக நூலாசிரியர்களும் 9-10-க்குடையவர் ஒன்றுகூடின் பிரபல இராஜயோகத்தையே தருவார் என்பதை ஆமோதித்திருப்பதுடன், "கேந்திரத்திற

பத்தாம்கிளர்திரிகோணத்து ஒன்பதாம்" என்றமையால், 1-4-7-10-என்னும் இடங்களில் 10-ஆம் கேந்திரமே மிக்க பலமுடையதெனவும், 5-9-என்னும் கோணங்களில் 9-ஆம் கோணமே மிக்க பலமுடையதெனவும் அறியப்படுகிறது. 9-பாக்கியம் என்றும், 10-காரியம் என்றும் பெயராகும் என்றதால், பாக்கியத்தையும், கௌரவத்தையும் அமோகமாய்க் கொடுப்பான் என்பதே இச்செய்யுளின் முக்கிய கருத்து. இதுவன்றி, மேற்படி 9-10-க்குடையவர்கள் பாவராசிக்கு அதிபதியாயினும் சரியே என்றனர். விசேஷமாய் மேடத்திற்கு குரு 9-12-க்கு அதிபதியாகிறான். அப்படி 12-க்கு அதிபதியானாலும் மேற்படி குருவுக்கு பாவாதிபத்தியம் சம்மந்தப்படாது.

மகர லக்கினத்தோர்க்கு புதன் 6-9 க்குடையவனாகிறான். 9-ஆம் ஆதிபத்தியம் வந்த விசேஷ காரணத்தால் தனது பாவாதிபத்தியத்தின் குரூர குணம் நீங்கி 9-ஆம் ஆதிபத்தியப்படி அவன் பூரண இராஜயோகத்தைத் தரத்தகுந்தவனாகிறான் என்பதே இச்செய்யுளின் முக்கிய கருத்து. பொதுவாய் 9-ஆம் ஆதிபத்தியம் பெற்ற கிரகம் வேறு எவ்வித பாவாதி பத்தியம் பெற்றாலும், பாபபலனைக் கொடாது சுபபலனைக் கொடுப்பான் என்பதேயாகும்.

மற்றும் குரு-சனி கூடினாலும், சந்திர கேந்திரத்தில் குரு இருந்தாலும், 10-ல் பாவர்களிருந்து 5-9-ஆம் வீட்டோர் 4-7-10-ல் நின்றாலும், இராஜயோகம் உண்டென்பது சாஸ்திரவிதி. 9-ல் குரு, 4-ல் சனி, 7-ல் ரவி, 10-ல் செவ்வாய், 1-ல் சுக்கிரன் நின்றால் இவ்வுலகெங்கணும் புரக்கத் தகுந்தவன் எனவும், 1-4-7-10-ல் நவகோட்களும் நின்று, மேடராசியில் இராகு அல்லது கேதுவாக இருக்கில் அவனும் இராஜயோக முடையவன் என்பது பொதுவிதியேயாகும். ஆதலால், பொதுப்பலன்களை முதலில் ஆராய்வதும், ஆதிபத்தியபலனால் நிலைகூறுவதுமே சோதிடர்களின் முக்கிய கடமையாகும். 13

இதுவுமது

தன்மகன் மப்பதிக டங்களிற்று மாறியுமே
அன்னியமாய் தங்கட் கறையுமிடத்—தின்பமுடன்
உற்றிடுவா ராகி லொளிவளையா யிவ்வுலகோர்
பெற்றிடுவார் யாவர் பெரிது.

(பொ-ரை) பிரகாசம் பொருந்திய வளையல்களை யுடையவளே! தருமாதிபதியுங் கருமாதிபதியுந் தங்களிடத்தில் தாங்கள் இருந்தாலும் தங்களுக்கு அன்னியமாய்ச் சொல்லுமிடத்திற் சேர்ந்திருந்தாலும் தருமத்தானத்தில் கருமாதிபதி கருமத்தானத்தில் தருமாதிபதி தானிருந்தாலும் இவ்வுலகத்திலுள்ளவர்கள் யாவரும் பெரிதாகிய யோகபலனைப் பெறுவார்கள் என்பதாம்.

(வி-ரை) தரும கருமாதிபதிகள் தோஷத்துடனே கூடியிருந்தாலும், தோஷத்துடனே கூடாதிருந்தாலும் இராஜயோகத்தைக் கொடுப்பார்கள் எனக்கொள்க. 9-10-க்குடையவர் ஒன்றுகூடி பாவர் சம்மந்தமுற்றிருந்தாலும் இராஜயோகம் கொடுப்பார் என்றனர். இச்செய்யுளால் தன்மகன்மாதியாகிய 9-10-க்குடையவர்கள் தங்கள் தங்களிடத்தில் இருந்தாலும், அல்லது 9-ஆம் வீட்டோன் 10-லும், 10-ஆம் வீட்டோன் 9-ல் நின்றாலும், மேற்படி இருவரும் ஒன்றுகூடி வேறு எந்த க்ஷேத்திரத்தில் இருந்தாலும், இராஜயோகத்தையே தருவார் என்றனர். சோதிடர்கள் முதன்முதலாய் கவனிக்க வேண்டுவது என்னவெனில்? ஒவ்வொரு ஜாதகர்களுக்கும் யோகர்

எவர், பாவர் எவர் என்பதை ஆராய்வதேயாகும். பொதுவிதிப்படி ஆராயுமிடத்து 5-ஆம் இடமும், 9-ஆம் இடமும் யோகத்தைத் தாதகுந்த க்ஷேத்திரமென்பது சாஸ்திரங்களின் கருத்து. மற்றும் ஒவ்வோர் இலக்கினமாய்ப் பார்க்குமிடத்து மேடலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சனி குருவும், ரிடபத்தில் பிறந்தவர்களுக்குச் சனியும், மிதுனத்தில் பிறந்தவர்களுக்கும், கடகத்தில் பிறந்தவருக்கும் செவ்வாயும், சிம்மத்தில் பிறந்தவருக்கு குரு செவ்வாயும், கன்னியில் பிறந்தவருக்கு சுக்கிரன் புதனும், துலாத்தில் பிறந்தவருக்கு சந்திரனும் புதனும், விருச்சிகத்தில் பிறந்தவருக்கு சூரியன் சந்திரனும், தனுசில் பிறந்தவருக்கு சூரியன் புதனும், மகரம் - கும்பத்தில் பிறந்தவருக்குச் சுக்கிரனும், மீனததில் பிறந்தவருக்கு அங்காரகன் குருவும் யோகர் எனக் கூறியிருத்தலாலும், இவர்களும் மேற்கூறியபடி 9-10-க்குடையவர்களையே யோகர் எனக் கூறியிருத்தலால் யோகத்தைத் தரவல்லவர்கள் 9-10 என்னும் க்ஷேத்திராதிபர்களே என்று நிர்ணயிக்க ஏதுவாகிறது. மற்றும் மேற்கூறிய செய்யுளின்படி 9-10-ஆம் இடத்தோர் தத்தமது க்ஷேத்திரங்களில் ஆக்ஷி பெற்றிருந்தாலும், ஒருவர் வீட்டில் ஒருவர் மாறியிருந்தாலும் மேற்படி இருவரும் கூடி ஏகராசியிலிருந்தாலும் இராஜயோகத்தைத் தருவர் என்பதை எவரும் மறுக்க முடியாது.

9-ஆம் பாவாதிபனுக்குள்ள விசேஷம் என்னவெனில்? தன் சொந்த பிதா. யாகாதி கருமம், தானதருமம், பாக்கியம், கீர்த்தி, செல்வம் முதலிய விசேஷங்களைத் தாத்தகுந்த இடமென்பதை முன்பே கூறியுள்ளேன். மற்றுமொரு நூலாசிரியர் 9-ஆம் வீட்டவனும், 10-ஆம் வீட்டவனும் கூடில் அவர் தரும்பலனை விளக்கியது என்னவெனில்?

"சொல்லுமையா பாக்கியத்தோன் பத்தோன் கூடி
சுகமாக வீற்றிருக்கிற் பலனைக்கேளு
எல்லையிலா தனம்படைத்து வாழ்வதோடு
எவர்களுமே பணிவார்கள் இறைவன்போல
தொல்லையிலான் பலபேரைக் கார்க்கும்வள்ளல்
துணையாளர் பலபேரும் உண்டுபாரு
வல்லவியாய் ஈஸ்வரியின் கடாக்ஷத்தாலே
வாழ்ந்திருப்பான் என்றுளும் வளமாயோதே"

என்றதால 9-10-க்குடையவர்கள் ஒருவருக்கொருவர் பரிவர்த்தனையாகவோ அல்லது மேற்படி இருவரும் ஒன்று கூடுவதோ அல்லது இருவரும் ஆக்ஷி பெறுவதோ, இவை அவரவர்கள் செய்த புண்ணியம் என்றே கருத வேண்டியதாகிறது. இவ்வித ஆராய்ச்சியால் எந்த லக்கினத்திற்கும் 9-10-என்னும் இரண்டு க்ஷேத்திராதிபர்களே பூரணசுபர் எனவும், மற்றையோர் அவரவர்கள் இடத்திற்குத் தகுந்தபடி மாறுவர் என்றுங் கூறவேண்டியதாகிறது. 14

இதுவுமது

ஆய்ந்தகோ ணத்தலைவ ராரேனு மாம்வரோ
டேய்ந்தசம் பந்தமீ ரைந்தவர்க்கு—வாய்ந்திடுமேல்
வைய மகிமைதரும் வாணுதலாய் தாண்டவன்போல்
செய்ய கமலை சிறந்து.

(பொ-ரை) ஒளிபொருந்திய நெற்றியை யுடையவளே! ஆராய்ந்தெடுத்த திரிகோணாதிபதிகள் யாராயினுமாகுக. அவருடனே பொருந்திய சம்பந்தத்

தசமகேந்திராதிபத்திக்கு உண்டாகில் திருமகள் சிறந்த தாண்டவனைப்போல அரசுரிமைப் பெறுவர் உலகத்தோர் என்பதாம்.

(வி-ரை) சம்பந்தமுற்ற கிரகங்கள் கொடுப்பார்க ளென்றபோதிலும் தரும கருமாதிபதிகளைப்போலப் பலன்களைக் கொடார்களெனக் கொள்க. இதுவரையில் கூறிய 2-செய்யுட்களாலும் தரும கருமாதிய யோகங்களைக் கூறியுள்ளாராயினும் இங்கு திரிகோணதியுடன் தசமகேந்திராதிபதி கூடில் இராஜயோகம் உண்டெனக் கூறியுள்ளார். கோணம் என்பது 5-9-என்பதை முன்பே கூறியுள்ளேன். இச்செய்யுளின் முக்கிய கருத்தாவது என்ன வெனில்? முன்கூறியபடி 9-10-க்குடையவர் கூடியிருந்தால் இராஜயோகம் கொடுக்கும் என்பதோடு 5-ஆம் வீட்டோனுடன் 10-ஆம் வீட்டோன் கூடினுலும் மேற்கூறியபடியே இராஜயோகம் உண்டு என்பதேயாகும். ஆயினும் முன்சொன்ன 14-ஆம் செய்யுளின்படி சொல்லிய இராஜயோகத்திற்கு இங்கு கூறும் இராஜயோகமானது குறைந்தே காட்டும் என்பது நிச்சயம். ஏனெனில் மேற்சொன்னது பிரபல இராஜயோகம் எனவும், இங்கு கூறுவது சமத்துவ ராஜயோகம் என்றே கூறவேண்டுவதாகிறது. ஏனெனில்? 5-ஆம் கோணதிபதியைவிட 9-ஆம் கோணதிபதி பிரபலன எனக் கூறியதாலென்க.

மற்றும் செவ்வாய் ஒருவனுக்கே 5-ஆம் கோணதிபத்தியம் பலம் என்பதை முன்பே கூறியுள்ளேன. மற்றையோருக்கு 5-ஆம் ஆதிபத்தியம் பலம் இல்லையோவெனில் எல்லா கோட்களுக்கும் உண்டு. ஆனலும், செவ்வாய்க்குள்ள பலத்தைப்போல் மற்றையோருக்கு இல்லையெனபதே சாஸ்திரங்களின் முக்கிய கொள்கை. ஜாதக அலங்கார நூலுடையார் தான் கூறிய யோக படலம் 271-ஆம் செய்யுளால்,

''குணமார் தன்ம கன்மாதி கூறும் சுபக்கோ ளுடன்கூடி
மணமார் தன்ம கன்மத்தில் மருவி யிருக்கில் மன்னவனும்
உணர்வா யிவர்க ளிருவருடன் ஓரைந் தாதி யுடன்கூடிப்
புணர்வா ரெங்கே இருந்தாலும் பூமி புறக்கும் புரவானும''

என்றனர். அவையாவன:—தன்ம கன்மாதி ஒன்றுகூடி எந்த ராசியில் இருந்தாலும் அரசன் என்றும், மேற்படி இருவருடன் 5-ஆம் வீட்டோனும் கூடில் சக்கரவர்த்தி என்றும் கூறியுள்ளார். ஆனதால், 9-10-ஆம் வீட்டுக் குடையவர்களுடன் 5-ஆம் அதிபதி சேர்வது விசேஷம் எனறே கருத வேண்டியதாகிறது. இங்கு கூறுவது யோகபலனே ஆதலால் பாவபலனைக் கூறவில்லை. இதுவன்றி,

''செப்பிய திரிகோணத்திற் றிரிகோணத் தானத்தாதி
தப்பற உச்சமாக தலத்தூரில் ராஜயோகம்''

என்றதால் 5-9-10-ஆம் வீட்டதிபர்கள் ஒருவர்க்கொருவர் சேராவிடினும் எந்த ராசியிலாவது உச்சம் பெற்றாலும், இராஜயோகம் தரும் எனபது சாஸ்திரங்களின் கருத்து. மற்றும் பலவிதமாய் ஆராயுமிடத்து 9 ஆம் வீட்டுக்குடையவனோடாவது, 5-ஆம் வீட்டுக்குடையவனோடாவது, 10-ஆம் வீட்டோன் சேர்ந்தால் இராஜயோகம் என்று கூறியதோடு, மேற்சொன்ன மூவரில் ஒருவர் ஆக்ஷி உச்சங்களால் பலம் பெற்றாலும் கூட யோகமுண்டு என்பது கருத்து. ஆனல் மேற்சொன்ன இராஜயோகம் என்று கூறமுடியா தாயினும், செல்வம்-பாக்கியம்-பூமி-புத்திரர் முதலிய செல்வத்தையே தரும். மற்றுமுள்ளவைகளைக் கீழ்வருவனவற்றால் காண்க. 15

இதுவுமது

யோக திசையிரண்டி னுண்டுநின் றோன்றெசையும்
யோக பலனளித்த லொள்ளியதன்—னாகப்
படமனைய வல்குலாய் பாரி னிலக்கோள்கள்
உடனுறைத லின்றே லுரை.

(பொ-ரை) ஒளிபொருந்திய நல்ல பாம்பின் படத்தை நிகர்த்த அல்குலையுடையவளே! இராஜயோகங் கொடுக்கும் அவர் திசை இரண்டினுள் நடுவில் நின்றவன் திசையும், அவர்களுடன் சம்பந்தமில்லாமலிருந்து உள்ளளவில் அவ்வாசயோக பலனைக் கொடுக்குமென்று சொல்வாயாக என்பதாம்.

(வி-ரை) இச்செய்யுளால் ஒவ்வொரு ஜாதகர்களுக்கும் வரும் யோககாரகர் திசை இரண்டில் மேற்படி இருவருடன் கூடிய கிரகம, பார்த்த கிரகமும் கூட மேற்சொன்ன இராஜயோகத்தைத் தரலாம் என்றனர். இவை யாதுபற்றியெனின்? சிற்சில ஜாதகங்களுக்கு யோகத்தைத் தரத் தகுந்தவர்கள் என்று கூறிய 5-ஆம் வீட்டுக்குடையவன் திசையோ அல்லது 9-ஆம் வீட்டுக்குடையவன் திசையோ வருவதே இல்லை. அப்படியாயின் அந்த ஜாதகனுக்கு யோகம் இல்லையோவெனில் உண்டு. எக்காலத்திலெனில்? மேற்கூறிய 5-9-ஆம் வீட்டுக்குடையவனுடன் கூடிய கிரகத்தின திசைவரினும் அல்லது மேற்படி 5-9-ஆம் வீட்டுக்குடையவனை நேராய் திருஷ்டித்தவனது திசையும், மேற்கூறிய இராஜயோகத்தைத் தருவார் என்பதேயாகும்.

இதனைத் தற்கால சோதிடர்களில் சிலர் சம்மதிப்பதில்லை 5-9-க்குடையவன் திசை அந்த ஜாதகனது ஆயுள் முடிவதற்குள் வரவில்லையேல் அந்த ஜாதகனுக்கு யோகம் இல்லை. மற்றும் தனாதிபதி திசையும், சுகாதிபதி திசையும், லாபாதிபதி திசையும் அவ்வவர்கள் இருந்த சக்திக்கு ஏற்றவாறு பொதுப்பலனை அளிப்பார் என்றே கூறுகின்றனர். சிலரோவெனில் இந்நூலாசிரியர் கூறியவண்ணம் மேற்படி 5-9-க்குடையவர் திசை வராவிடினும், மேற்படி இருவருடன் சேர்ந்த கோட்களின் திசையோ, பார்த்தவர்களின் திசையோவரின் அவ்வவர்களுடைய காரகத்துக்குத் தக்கபடி பலனை அளிப்பர் என்று கூறுகின்றனர்.

"நல்லோரைச் சேர்ந்தவன் நன்மையே அடைவான்". "கற்பகத் தருவைச்சார்ந்த காகமும் அமுதம் உண்ணும்" என்பது பழமொழி. அதைப்போன்று எல்லோருக்கும் யோகத்தைத்தர, ஆதிபத்தியம் வாய்ந்த கிரகத்தோடு ஆதிபத்தியத்தாலோ, குணத்தாலோ தீயவரெனக் கூறும் கிரகங்கள் கூடுமாயின், இந்த தீயவர்களது குணம் மாறிவிடும் என்பது சாஸ்திரத்தாலும், அனுபவத்தாலுங் கூறவேண்டுவதாகிறது. மற்றும் மேற்படி 5-9-க்குடையவர்களுடன் சேர்ந்த கோட்கள் சுபன் அல்லது பாபனானாலும், மேற்படி 5-9-ஆம அதிபதியைப்போல் பிரபல யோகத்தைத்தர சக்தியில்லாராயினும் அந்த ஜாதகனுக்குப் போதுமான அளவு திட்டமான யோகத்தையாவது கொடுத்தே தீரவேண்டும். அது அவரவர்கள் காரகப்படியாகும்.

"நாடிய கேந்திரத் தானத் ததிபனும்
தேடிய மூலத் திரிகோணத ததிபனும்
கூடிய கேந்திர மீங்கொள நின்றிடில்
ஊடிய ராகத் தாசனென் றோதே"

எனவும்,

"உலாத்திடி லாம மொன்பது பத்தும்
விரித்திடு மந்த வீட்டினிற் கதிபனை
பொருத்திய தொகைப்படி பொருந்துமவ் வீட்டோன்
வருத்தமில் கேந்திரம் வந்தரின் மன்னனும்" எனவும்,

"மன்னிய லக்கினம் வருதேள் சிங்கம்
பன்னிய லாப மாமைந் தொன்பதில்
அன்னிய மூவரி லாரேனு மிருந்து
மின்னிய கேந்திர மேவிடி லாசே"

என்றதால் மேற்கூறிய விஷயம் நன்கு விளங்குகிறது. மற்றும் யோக
முண்டாகும் ஆராய்ச்சியை கீழ்வருவனவற்றால் அறிக. 16

இதுவுமது

கோட்கடாம் பொல்லாக் கொடியவர்க ளானாலும்
வாட்கண்ணாய் வல்லோ ருடன்வயங்கும்—காட்புறுசம்
பந்தமுண்டேற் றத்தம் வயங்குபொசிப் புக்கேற்பத்
தந்திடுவர் பூபாலர் தாம்.

(பொ-ரை) வாள்போலும் கண்களை யுடையவளே! கிரகங்கள் தாங்கள் தாங்கள் பொல்லாத கொடியவர்களானாலும் அரசயோக மளித்தற்கு வல்லோருடனே விளங்கும் உறுதியமைந்த சம்பந்தம் உண்டாகில் தாங்கள் தங்கள் தங்கள் புத்திக்கேற்ப அரசயோக பலனைத் தந்திடுவார்கள் என்பதாம்.

(வி-ரை) புத்தியிலக்கண முன்னர் புகல்கின்றது யோககாரக சம்பந்தத்தால் பாவக் கோள்களும் இப்படிப் பலன் கொடுப்பார்களாகில் சுபக்கோள் கொடுக்கும் நிறைந்த பலத்தில் என்ன சந்தேகம் என்பதாயிற்று. இச்செய்யுளால் யோகத்தைத் தாத்தகுந்த கோட்களுடன் பாவர்கள் சம்மந்தப்பட்டாலும் கூட தங்கள் தங்கள் காரகமென்னும் அந்தஸ்துக்குத் தக்கதாகிய யோகத்தைத் தருவார் என்றனர். இராஜயோகத்தைத் தரவல்லவர்கள் 5-9-10-க்குடையவர்கள் என்பதை முன்னமே கூறியுள்ளேன். இங்கு மேற்படி 5-9-10-க்குடையவர்களுடன் பாவகிரகங்கள் சம்மந்தமுற்றாலும் மேற்படி 5-9-10-க்குடைய கோட்களினது பலம் பூராவுங் குன்றாது. ஆனதால் தனது சக்திக்குத் தக்கவாறு யோகத்தைத் தருவார் என்பதேயாகும். இதனால் 5-9-10-க்குடையவர்களது சிறப்பு விளங்குகிறது. எப்படியெனில்? 5-9-10-க்குடைய கோட்கள் பாவருடன் கூடியதால் தன்பலங் குன்றுதென்றும், மேற்படி 5-9-10 க்குடைய கோட்களினது திசை வந்தாலும், வராவிட்டாலும் அவர்களுடன் கூடிய பாவக்கிரகங்களது திசை வருமேயாயின் அந்த திசையிலுங்கூட இராஜயோகத்தைத் தரலாம் என்பதே இச்செய்யுளின் முக்கிய கருத்து.

அவையாவன:—பாவர்கள் இராஜயோகந் தரவல்ல கோட்களுடன் கூடில் மேற்படி பாவர்களே தங்கள் தங்கள் ஸ்திதிக்குத் தக்கபடி இராஜயோகம் தருவார் என்பதேயாகும். இவ்விஷயத்தையும் சிலர் சம்மதித்தும் ஏனையோர் சம்மதிக்காததுமாக உள்ளனவாதலால் சிற்சில விஷயங்களை இங்கு ஆராய்வோம்.

சுபர்கள் என்பது சந்திரன்-புதன்-குரு-சுக்கிரன் என்றும், பாவர்கள் சூரியன்-செவ்வாய்-சனி-இராகு-கேது என்றுங் கூறியுள்ளனர். சுபஸ்தானம் என்பது 1-4-5-7-9 10-எனவும், 3-6-8-12-என்பது கொடிய ஸ்தானம் என்

பதும், 2-11-என்பது நன்மையும் தீமையும் இல்லாத மத்திப ஸ்தானங்கள் எனவுங் கூறியுள்ளனர். சுபத்தானங்கள் 6-ல் 9-10-என்னும் இரண்டு ஸ்தானங்களையே விசேஷ சுபத்தானங்கள் எனவுங் கூறியுள்ளனர்.

இச்செய்யுளின்படி 9-10 க்குடையவரும் இராஜயோகத்தை தரவல்லவருமான யோகாதியுடன் 3-6-8-12-என்னும் கொடிய ஸ்தானாதிபரென்று கூறும் கோட்களில் ஒருவர் கூடினதாய் வைத்துக்கொள்வோம். அப்போது அந்த ஜாதகனுக்கு யோகம் உண்டா? இல்லையா? என ஆராய்ந்து பார்க்கில் உண்டு என்றே கூறவேண்டியதாகிறது. ஆயினும் அமோகமாய் இல்லாது அளவாக இருக்குமென்பதேயாகும். மேற்சொன்ன 9-10-ஆம் இடத்ததிபன் திசையின்றி கொடியஸ்தானாதிபன் திசைவரினும் மேற்சொல்லியவாறே தமது சக்திக்குத் தக்கபடி பலன் உண்டாகும் என்றே கூறவேண்டும். ஆனாலும் எவருக்கு எவர் மித்துரு, எவருக்கு எவர் சத்துரு என்பதை அறிந்தே நிலைகூறவேண்டுவது கடமையாகும். சத்துரு மித்துரு என்பதைக் கீழ்வருவனவற்றால் காண்க.

	சத்துரு	மித்துரு
சூரியனுக்கு	சுக்கிரன்-சனி	சூரியன்-அங்காரகன்-குரு
சந்திரனுக்கு		சூரியன்-புதன்
செவ்வாய்க்கு	புதன்	சூரியன்-சந்திரன்-குரு
புதனுக்கு	சந்திரன்	சுக்கிரன்-சனி
குருவுக்கு	புதன்-சுக்கிரன்	சூரியன்-சந்திரன்-அங்கார
சுக்கிரனுக்கு	சூரியன்-சந்திரன்	புதன்-சனி-ராகு-கேது
சனிக்கு	சூரியன்-சந்திரன்-அங்காரகன்	புதன்-சுக்ரன்-ராகு-கேது

என்பதை அறிக. 17

இதுவுமது

கண்டக்கோ ணத்தி லிருந்த கடுங்கோட்குக்
கெண்டைவிழிச் செவ்வாய் கிளிமொழியாய்—ஒண்டொடீ
ஆதிபனோ டல்லா விடத்துண்டேற் சம்பந்தங்
கோதில்யோ கங்கொடுப்பார் கூர்ந்து.

(பொ-ரை) சேல்போலுங் கண்களையுஞ் சிவந்த வாயினையுங் கிளிபோலுஞ் சொற்களையும் ஒளிபொருந்திய வளையல்களையுமுடையவளே! கேந்திரத்திலாவது திரிகோணத்திலாவது இருந்த இராகு கேதுக்களுக்கு அல்லாத இடத்ததிபதியுடனே சம்மந்தமுண்டாகில் அந்த இராகு கேதுக்கள் குற்றமற்ற பெரிய யோகபலனைக் கொடுப்பார்கள் என்பதாம்.

(வி-ரை) அல்லாத இடத்ததிபதியுடனே சம்பந்த முறவென்றால் கேந்திரத்தில் இருந்தால் திரிகோணாதிபதியுடனும் திரிகோணத்தில் இருந்தால் கேந்திராதிபதியுடனுஞ் சம்பந்தமுதல் பிரபலத்தான பிரபலக்கிரக சம்பந்தக்கிரக அனுசாரியாய் விசேஷ சுபபலன்களைக் கொடுப்பாரென்றறிவது. இச்செய்யுளால் இராகு கேதுவினது குணமும், யோகம் தரும் மார்க்கமும் விளங்குகிறது. எப்படியெனில்? கேந்திர கோணங்களென்னும் 1-4-5-7-9-10-என்னும் இடங்களில் இருந்து மேற்சொன்ன இராகு கேதுக்கள் எந்த கிரகத்தின் வீட்டில் இருந்தாலோ அந்த கிரகம் மேற்சொன்ன இராகு கேதுக்களுடன் கூடாது வேறு கிரகம் சகிதம் பெற்றிருக்குமேயானால்

அளவிறந்த யோகத்லைத் தருவார் என்றனர். அவையாவன:—ஆக்ஷிபெற்ற கிரகத்துடன் இராகு சேர்ந்து அந்த ராசியானது ஜென்ம லக்கினத்துக்கு கேந்திர கோணமாயின் அவை யோகந்தராது என்றும், ஆக்ஷி பெறாத வேறு கோட்கள் சம்மந்தமுறின் இராஜயோகம் தருவார் என்பதாம்.

இராகு கேதுக்களுக்கு ஆக்ஷி வீடில்லை என்றும் அவர்கள் எந்த ராசியி லிருந்த அந்த கிரகத்தின் பலத்தையே இராகு கேதுக்கள் தருவார் என் பதும் சாஸ்திர சம்மதம். அதிலும் இராகு கேதுக்கள் கேந்திரம்பெறின் யோகம் தருவார் என்பதும் பலராலும் சம்மதிக்கப்பட்டு வருகின்றன. அப்படி கேந்திரம் பெற்றாலும் அந்த வீட்டுக்குடையோன் ஆக்ஷி பெறுவது கூடாது என்பதே இச்செய்யுளில் கூறிய முக்கிய விஷயமாகும். உதா ரணமாக:—

"பேசுமந்த கேந்திரத்தில் ராகுநிற்க
பிரபலனும் ராஜாக்கள் சேவையுள்ளோன்
வீசுகின்ற தனம்படைத்து சீமானுகி
விதரணையாய் வாழ்ந்திடுவான் இன்னங்கேளு
தேசுபெறும் பட்டாடை பணிகள்சேர்ப்பன்
தெவிட்டாத வாழ்க்கையுளோன் திரண்டகீர்த்தி
மாசடா மன்னவனுய்ப் பலநாள்மட்டும்
வாழ்ந்திருப்பான் எனவுரைத்தார் முனிவோர்தானே"

என்று கூறியதால் இராகு அல்லது கேதுக்கள் கேந்திரங்களில் இருக்கில், ஆதிபத்திய பொதுப்பலன்படி அந்தந்த வர்க்கத்தவர்க்கு தோஷத்தை விளைக்கினும் அவர்கள் திசைகாலங்களில் பிரபல யோகத்தைத் தருவான என்றே கருதவேண்டியதாகிறது. மற்றும் இந்நூலாசிரியர் கோணத்தில் இருக்கினும் யோகத்தைத் தருவார் என்றனர். கோணம் என்பது 5-9- என்னும் இரண்டிடத்தையே குறிக்குமானதாலும், ஒவ்வொரு ஜாதகர் களுக்கும் மேற்சொன்ன இரண்டிடங்களே யோகத்தைத் தாத்தகுந்த ஸ்தானங்களாதலாலும், எல்லோருக்கும் மேற்படி இராகுவை யோககார கன் எனவும், கேதுவை மோக்ஷகாரகன் எனவுங் கூறியிருத்தலாலும், மேற்படி யோகத்தைத்தரும் ஸ்தானங்கள் மேற்படி இராகு அல்லது கேது நிற்கில் யோகத்தைத் தருவார் என்றனர். ஆனல் இராகு கேது நின்ற வீட்டுக்குடையவனும், அவர்களுடனே ஆக்ஷியாய் இருக்கில் இராகு கேதுவுக்கு பலம் இல்லையாதலால் அவர் யோகத்தைத் தரமாட்டார் என்றும், வேறு எந்த கோட்கள் சம்மந்தப்பட்டாலும், யோகத்தைத் தருவார் என்றுங் கூறியுள்ளார். இவை இராகு கேதுக்கள் யோகர்களாக வரும் மார்க்க மாகும்.

18

இதுவுமது

கேந்திரகோ ணத்தலைவர் கேட்கி லொருவரென்
ருந்திரமா யோக மளிப்பரன்றே—சூர்ந்தருவீர்
அன்னியகோ ணத்தவனே டாராய்ந்தி டும்பலன்கள்
என்ன லறிவரிதா மீங்கு.

(பொ - ரை) கேந்திராதிபதியும் திரிகோணதிபதியும் ஒருவராகில் நிறைந்து திறமாய் இருக்கப்பட்ட யோகபலனைக் கொடுப்பார். அவர் அன் னியத் திரிகோணதிபதியுடனே சம்பந்தமுற்றுராகில் அவர் கொடுக்கும் பலன்களை என்னல் அளவிட்டு அறியப்படாதென்று அறிவீர் என்பதாம்.

(வி-ரை) அவர்கள் பலத்திற்கு அனுசாரியாய்ப் பலத்தை விசாரித்துச் சொல்வது. இச்செய்யுளால் கேந்திராதியும் கோணாதியும் அளவிறந்த பலனைத் தருவார் எனவும், மற்றும் தான் நிற்கும் இடத்திற்கு கேந்திராதி பதிகளோ, கோணாதிபதிகளோ மேற்சொன்ன கோணாதியுடன் கூடியிருக்கில், அவர்கள் தரும்பலன்களைக் கூறமுடியாது என்றனர். அவையாவன:— கேந்திராதிபதி, கோணாதிபதி இவர்கள் எந்த ராசியில் இருந்தார்களோ அந்த ராசிக்குக் கேந்திரகோணாதிபதிகள் கூடியிருக்கில், அவர்கள் அளவில்லா பலனைக் கொடுப்பார் என்றமைக்குக் காரணம் என்னவெனில்? இவை கேந்திரகோணாதி சம்மந்தம் என்பதாகும். இப்படி கிரகங்கள் அமைவது மிக்க கடினம். இப்படி கிரகம் அமைவது மன்னர்களுக்கும் சக்கரவர்த்திக்குமேயாகும். உதாரணமாய்க் கீழ்க்கண்ட சக்கரத்தைக் கவனிக்கவும்.



மேற்காட்டிய சக்கரத்தில் கோணாதியாகிய செவ்வாய் தசமகேந்திரம் பெற்றும், தான் இருந்த ராசிக்கு 7-10-க்குடைய புதன் சம்மந்தமுற்றிருக்கிறான். ஆதலால் இந்த ஜாதகனுக்கு அளவிட முடியாத இராஜயோகம் சித்திக்கும் என்பதேயாகும். இவ்வாறாய் கிரகங்கள் நிற்கும்போது ஒருவர்க்கொருவர் சத்துரு மித்துருவாய் நின்றாலும், யோகத்தைக் கெடுக்கமுடியாது. இவை ஆதிபத்தியத்தின் பெருமையால் உண்டாவதாகும். இதற்காகவே இந்நூலாசிரியரும், கேந்திராதிபதி கோணத்திலும், கோணாதிபதி கேந்திரத்திலும் நிற்பது விசேஷம் என்றும், தான் இருக்கும் ராசிக்கு கோணகேந்திரங்கள் இருக்கில் அளவிறந்த யோகத்தைத் தருவார் என்றனர். மேற்கூறியவாறு கிரகம் அமைந்திருக்கப் பிறந்தவர்களைக் குறித்து ஓராசாஸ்திரத்தில் கூறியதாவது,

“போற்றுகின்ற கோணக்கோள் கண்டக்கோளும்
புண்ணியர்கள் சேர்ந்துநின்ற மனைக்கைக்கோனும்
சாற்றுமொருங் கேகூடி நின்றாராயின்
சகலகலை வல்லவனாய் சீமானாகி
தேற்றுமந்த பெரியோர்கள் நேயனாகி
திரமான மனைவிமக்க ளுடையோனவன்
மாற்றறியா பொன்படைத்த வாழ்க்கையுள்ளன்
மானிலத்தில் ஜனிப்பதரி தாகும்பாரே”

என்று கூறியுள்ளாராதலின் இவ்வாறு கோணாதிபரும், கேந்திராதிபரும் பரிவர்த்தனையுடனேயாவது இவ்விருவரும் ஒன்று சேர்ந்தாவது நின்று அவர்களிருந்த ராசிக்கு 1-4-5-7-9-10-க்குடையவர்களில் ஒருவன்சேரில் அந்த ஜாதகன் மன்னர்க்கெல்லாம் மன்னனாவான் எனினும், இவ்வாறு கிரகம் அமையப் பிறப்பது கோடிக்கு ஒன்று என்று கூட நிர்ணயிக்க முடியாதெனவுங் கூறவேண்டியதாகிறது.

இதுவன்றி இவ்வாறான விஷயங்கட்கு சத்துரு மித்துருத்துவம் பாதிக்கப்படுமோவெனில்? மேற்கூறிய 9-10-க்குடைய கோட்களை பாதிக்கமாட்டாதென்றே கூறவேண்டுவதாகிறது. இதுவரையில் கூறிவந்த இராஜயோகத்தால் முதன்முதலாக 9-10-ஆம் அதிபதியையும் இரண்டாவதாக கேந்திர கோணாதிபரையும், மூன்றாவதாகத் தான் இருந்த இடத்திற்கு கேந்திர கோணாதிபரையுமே வெகுவாய்க் குறித்துக் கூறியுள்ளனர். இங்கு இராஜ யோகபங்கம் உண்டாகும் காரணங்களைக் கூறுவார். 19

இராஜயோக பங்கம்

தன்மகன் மப்பதிக டாமெட்டு டன்பதினொன்
றின்றலைவ ராகிலவ ரின்பமுற்ற—நன்னயஞ்சேர்
சம்பந்தத் தாலே சகத்திலுள் ளோர்தமக்குத்
தம்பலனீ யாரென்று சாற்று.

(பொ-ரை) தரும கருமாதிபதிகள் அட்டம லாபாதிபதிகளாய் இருந்தாலும், அட்டம லாபாதிபதியுடைய சம்பந்தம் வந்தாலும் பூமியிலுள்ளோர்கட்குத் தங்கள் சுபபலனைக் கொடார்களென்று சொல்வாயாக என்பதாம்.

(வி-ரை) இவர்கள் சம்பந்தத்தால் இல்லை எனவே அன்னிய யோக காரக சம்பந்தமுண்டாயிருந்தால் யோகபலன் அடைவரெனக் கொள்க. இச்செய்யுளால் தன்ம கன்மம் என்னும் 9-10-ஆம் இடத்தவர்களே 8-11-என்னும் க்ஷேத்திரங்களுக்கு அதிகாரியாயினும், அல்லது மேற்சொன்ன 9-10-க்குடையவர்களோடு 8-11-ஆம் இடத்தவர் சேரினும், மேற்சொன்ன 9-10-க்குடையவர்கள் தமது சுபாவமாகிய இராஜயோகப் பலனைத் தரார் என்றனர்.

இவை ஆதிபத்தியதோஷம் எனப்படும். அவையாவன:—9-ஆம் வீட்டோனுக்கு 8-ஆம் வீட்டவனும், 10-ஆம் வீட்டவனுக்கு 11-ஆம் வீட்டவனும் பகை என்பதை சிற்சில சாஸ்திரங்களில் கூறப்பட்டன. 8-ஆம் பாவத்தால் அல்லது 8-ஆம் பாவாதிக்குரிய குணம் என்னவெனில்? ஜாதக அலங்காரம்,

"புலவுறும் படையால் வாதைசேர் உயுத்தம்
பொருப்பின்மே லேறிவீழ்ந் திறத்தல்
நிலைபெறும வியாதி விக்கினங் கிலேச
நீள்பல துன்பமோ டிரணம்
சிலவினை நட்ட மாம்விழுக் காடு
செறிபகை மரணமித் தனையும்
உலகினி லுயர்ந்தோர் அட்டமப் பலன்கண்
டுரைசெய்வா ருண்மை பெற்றிடவே"

என்று கூறியுள்ளதனாலெண்க. மற்றும் இச்செய்யுளால் நாம் முக்கியமாய் அறிந்துகொள்ள வேண்டுவது என்னவெனில்? பாக்கியத்தானம் என்பது பொதுவாய் 9 ஆம் இடமென்றாலும், மேற்படி பாக்கியத்திற்கு 2 ஆம் வீடாகிய 10-ஆம வீட்டவனுடன் கூடினதாலேயே பாக்கியாதிபதிக்குப் பெருமை வாய்ந்தனவென்றே கருத்து கொள்ளவேண்டியதாகிறது. இதனாலே பாக்கியத்திற்கு விரயாதியான 8 ஆம் வீடு பாக்கியாதிபதிக்கு வரினும், பாக்கியததானாதியான 9-க்கு 3-ஆம் இடமாகிய 11-ஆம் வீட்டாதிபத்தியம் வரினும் அல்லது அவர்களுடன் சேரினும், அவர்கள் யோகத்தைத் தாமாட்

டார் என்றனர். விசேஷமாய் மிதுனலக்கினத்தில் ஜெனித்தவர்களுக்கு பாக்கியாதிபதி சனியாகும். அஷ்டமாதிபதியும் சனியேயாகும். இதனுலேயே மிதுனலக்கினத்திற்கு ஆதிபத்திய விசேஷத்தால் எவரையும் யோகர் என்று குறிப்பிடவில்லை. இதனை எல்லா நூற்களிலும் காணலாம்.

அட்டமாதிபனே பாக்கியாதிபாகலரின் அவனுக்கு வயது நூறு என்று கூறும் சாஸ்திரங்கள் அனேகம்.ஆனுல் யோகத்தைக் குறித்துக் கூறவில்லை. உதாரணமாக ஜாதக அலங்காரம் 8-ஆம் பாவத்தில்,

"அட்டமத் ததிபன்பாக்கி யாதிப ஞகினிற்கில்
அட்டமத் ததிபன்பாவி யாகினும் ஐயமில்லை"

என்றதால் ஆயுளுக்கு ஐயமில்லை என்றனரே யொழிய யோகத்தைக் கூறவில்லை. யோகததைக் குறித்துக் கூறுகையில் சோதிடர்கள் கவனிக்க வேண்டியது என்னவெனில்? முதன்முதலாக இந்த ஜாதகனுக்கு யோகம் உண்டா? இல்லையா? என்பதையும் உண்டெனில் சமயோகமா? பிரபல யோகமா? குறைந்த யோகமா? என்பதையும் அவை உண்டாகும் காலத்தையும் அறியவேண்டியது முக்கியமாகும். இங்கு கூறியது யாவும் பிரபல இராஜயோகத்தையே கூறியதால் மற்றுமுள்ளவைகளை எம்மால் உரை எழுதி அச்சிட்டுள்ள ஜாதக அலங்காரம், சோதிடக் களஞ்சியம் முதலியவற்றில் மிக்க தெளிவாய்க் காணலாம். 20

மாரகவிலக்கணம் வழுத்துகின்றது

எட்டுமதற் கெட்டா மிரண்டனேயு மாயுவென்று
திட்ட முடனறிந்து சீறிலா—நட்டத்தை
மாரக மென்று வகுத்தறிவாய் மாமயிலே
ஆர்கலிசூ ழம்புவியு ளார்க்கு.

(பொ-ரை) பெருமை பொருந்திய மயில்போலுஞ் சாயலை யுடையவளே! இலக்கினத்திற்கு 8-ஆம் இடமும், அதற்கு 8-ஆம் இடமான 3-ஆம் இடமும் ஆயுள்ஸ்தானமென்று பெயர். இவைகளுக்குச் சிறப்பில்லாத விரயத்தானங்களாகிய 7-ஆம் இடத்தையும், 2-ஆம் இடத்தையும் கடல்சூழ்ந்த பூமியிலுள்ளவர்களுக்கு மாரகத்தானமென்று வகுத்தறிவாயாக என்பதாம்.

(வி-ரை) பாவம் 12-க்கும் இப்படியே பகுத்தறிவது. இச்செய்யுளில் ஜென்ம லக்கினத்திற்கு 8-ஆம் இடமும், அதற்கு 8-ஆம் இடமுமான 3-ஆம் இடமும் ஆயுள் ஸ்தானமென்றும், மேறசொன்ன 8-ஆம் இடத்திற்கு 12-ஆம் இடமான 7-ஆம் இடமும், 3-ஆம் வீடாகிய ஆயுள் ஸ்தானத்திற்கு 12-ஆம இடமாகிய 2-ஆம் இடமும் மாரகஸ்தானமுமாகும் எனக் கூறியுள்ளார். 3 8-ஆம் இடம ஆயுள்ஸ்தானம் என்பதையும், 2-7-ஆம் இடததை மாரகஸ்தானம் என்பதையும், எல்லா சோதிட நூலாசிரியர்களும் ஆமோதித்துள்ளனர். 2-7-ஆம் இடங்களை ஏன் மாரகஸ்தானம் என்று கூறினர்களெனில்? ஆயுள் ஸ்தானத்திற்கு விரயஸ்தானமானதினுல் என்றுங் கூற வேண்டுவதாயிற்று இவ்விரண்டில் எவை விசேஷ மாரகர் என்பதைக் கீழ்வருவனவற்றுல் அறியலாம். இங்கு கூறியது ஜாதகனுக்குரிய மாரகஸ்தானத்தைக் குறிக்குமே யொழிய மாதுரு-பிதுரு-சகோதரர்-களத்திரம்-புத்திரர் முதலியோரைக் குறிக்காது. மற்றும் முறையே நடந்துவரும் திசைகளில் மாரகம் செய்யத்தகுந்தது எது என்பதை விளக்குவாம்.

"மாரகத்தின் திசையறிய வருனான்காந்
திசைசனியே வந்தூற்றாலும்
பார்தனக்குச் சுதன்செவ்வா யைந்தாகுந்
திசைதானே பரிந்தூற்றாலும்
பேருதித்த வாராகுந் திசையரச
ராறனும் பின்புராகு
சீருதித்த வேழாகுந் திசையானாலும்
மரணந் திண்ணந்தானே"

என்றபடி சனிதிசை நாலாந்திசை மாரகம், செவ்வாய்திசை ஐந்தாவது திசை மாரகம், குருதிசை ஆறுவதுதிசை மாரகம், இராகுதிசை ஏழாவது திசை மாரகம் என்பதையும், அற்பாயுசுக்கு ஒன்று மூன்றாந்திசை மாரகம் என்றும், மத்திப ஆயுசுடையவர்களுக்கு 3-5-6 வது திசை மாரகம் என்றும், தீர்க்காயுசுக்கு 7-வது திசை மாரகம் என்றும், சந்திரனுக்கு 4-10-ல் நின்ற பாபர்திசை மாரகம் எனக் கூறப்பட்டிருத்தலால் ஒவ்வொரு ஜாதகத்தையும் கவனித்து அந்த ஜாதகன் அற்பாயுசுடையவனு? தீர்க்காயுசு உடையவனு? மத்திப ஆயுசு உடையவனு? என்பதை நன்கு ஆராய்ந்தறிந்து மாரகவிஷயத்தைக் கூறவேண்டுவது அவசியம். மற்றும் எந்த விஷயத்தையும் நிர்ணயம் செய்ய பலபாவ ஆராய்ச்சி வேண்டுவது அவசியம்.

இங்கு கூறியது பொதுவாய் 3-8 ஆயுள் ஸ்தானமாதலால், ஆயுள் ஸ்தானத்திற்கு விரயஸ்தானத்தை மாரகஸ்தானம் என்று கூறியது எல்லாருக்கும் பொதுவாய் உள்ளதாகும். எப்படியெனில்?

மேடத்திற்கு	மாரகன்	சுக்கிரன்
ரிடபத்திற்கு	,,	புதன்-செவ்வாய்
மிதுனத்திற்கு	,,	சந்திரன்-குரு
கடகத்திற்கு	,,	ரவி-சனி
சிங்கத்திற்கு	,,	புதன்-சனி
கன்னிக்கு	,,	சுக்கிரன்-குரு
துலாத்திற்கு	,,	குஜன்
விருச்சிகத்திற்கு	,,	குரு-சுக்கிரன்
தனுசுக்கு	,,	சனி-புதன்
மகரத்திற்கு	,,	சனி-சந்திரன்
கும்பத்திற்கு	,,	குரு-ரவி
மீனத்திற்கு	,,	குஜன்-புதன்

என்பனவாம். 21

சம்பந்தமாரகஞ் சாற்றுகின்றது

அம்மா ரகமிரண்டி லாதியினு மேற்பலமென்
றெம்மா னவர்க்குமுரை யேந்திழையாய்—அம்மா
ரகத்ததிப ருற்று ரவருடனே கூடும்
அகத்தவர்க்கு மப்படியே யாம்.

(பொ-ரை) ஆபரணங்களை யுடையவளே! அந்த மாரகத்தானம் இரண்டிலே முந்தின மாரகத்தானமாகிய 7-ஆம் இடத்தைக்காட்டிலும், பிந்தின மாரகத்தானமாகிய 2-ஆம் இடமே பலமென்று உரைப்பாயென்க. அஃது எப்படியெனில்? முதற்பரியாயமாய்ச் சொல்லப்பட்ட மாரகத்தானமாகிய

7-ஆம் இடத்திற்கு இரண்டாம் பரியாயமாய்ச் சொல்லப்பட்ட 2-ஆம் இடம் பலயாயிறறு என்பதாம்.

(வி-ரை) "அறைந்ததா னத்தலைவர் யாவருமென மேலாய்ச் செறிந்த வவ் வப்பலனைச் சேர்ப்பாரென்று" முன்னங் கூறியவதனுல் 2-ஆம் இடமே பலமுடையதெனக்கொள்க. அந்த மாரகத்தானுதிபதியைக் காட்டிலும் அந்த மாரகத்தானத்தில் இருக்கிறவர்கள் பலமுடையவர்கள். அந்த ஸ்தானத்தில் இருக்கிறவர்களைக் காட்டிலும் அந்த மாரகத்தானுதிபதியுடனே கூடியிருக்கிற பாபிகள் பலமுடையவர்கள் 2-ஆம் இடத்ததிபதி 7-ஆம் இடத்ததிபதி இவர்களுடைய பலாபலன்கட்கேற்ப இவர்களுடனே கூடுமவர்கட்கும் பலாபலம் யூகித்துக் கொள்வது என்பதாம்.

இங்குகூறிய செய்யுளால் முன்செய்யுளில் கூறியபடி 2-7-ஆம் அதிபதி என்றாலும், 7-ஆம் வீட்டவனைவிட 2-ஆம் வீட்டவனே மாரகம் செய்வதில் பலமுடையவன் என்றும், மேற்சொன்ன இருவரிலும் அவர்களுடன் கூடிய கிரகம்-மாரகம் செய்வதில் பலமுடையவர்கள் என்று கூறியதுடன் மாரகாதியுடன்சம்மந்த கிரகத்தின் பலாபலத்தைக்கொண்டே இதனை நிச்சயித்தல்வேண்டும் எனவும் கூறியுள்ளார். எப்படியெனில்? மேஷலக்கினத்திற்கு சுக்கிரன் மாரகனுகும். அவர் ஜாதக ராசிப்படி சூரியனும் சுக்கிரனும் 7-ல் நிற்பதாயின் இவ்விருவர்களில் எவர் மாரகம் செய்யத்தக்கவர் என்பதை ஆராயுமிடத்து கிரக யோக்கியதையில் சுக்கிரனைவிட சூரியன் மேம்பட்டவராயினும், சூரியன் மேற்படி ராசியில் நீச்சமடைந்து பலவீனப்பட்டதால் சூரியன செய்யார். மற்றும் எவர் செய்வாரெனில்? சுக்கிரனே செய்வார் என்று பொருள்படுகிறது. கீழ்க்கண்ட சக்கரத்தை கவனிக்கவும்.

லக்	சனி	ரா	
	இராசி		
			அ-சு சூரி
	கே	சந்	புத குரு

மேற்கண்ட சக்கரத்தில் ஜென்மலக்கினம் மீனம் ஆதலால், மீனலக்கினத்திற்கு செவ்வாயும் புதனும மாரகம் செய்யத் தகுந்தவர்கள் முதலாம் மாரகாதியான புதன் உச்சயாகி குரு சம்மந்தப்பட்டிருக்கிறார். ஆனதால் இவ்விருவரில் எவர் செய்வாரெனில்? புதனே மாரகம் செய்யத் தகுந்தவர் என்று கூறவேண்டியதாயிற்று.

இந்நூலாசிரியாது கொள்கையின்படி முதல் மாரகாதியான 7-ஆம் வீட்டவனைக் காட்டிலும் 2-ஆம் மாரகாதியான 2-ஆம் வீட்டவனே கொல்லும் பலத்தில் சிறநதவன் என்றபடி 2-ஆம் மாரகாதியான செவ்வாய்-சுக்கிரன்-சூரியனுடன் கூடியுள்ளார். மேற்படி ராசியானது செவ்வாய்க்கு சமராசியும, சுக்கிரனுக்குப் பகை ராசியும் ஆகும். இவ்விருவரிலும் பலம் பெற்றவரெவரெனில்? சூரியன் ஒருவரே ஆக்ஷிபெற்று பலமடைந்ததால் சூரியனே மாரகம் செய்யத் தகுந்தவர் எனக் கூறவேண்டியதாயிற்று.

ஆனதால் மேற்படி சூரியதிசையானது எக்காலம் வருகிறதென்பதை ஆராய்ந்து அந்த வயதில் மாரகம் செய்யும் என நிலைகூறலாம். இவ்வித

தீர்மானம் அடையவும், பொதுவாய் இராசி சக்கரப்படி இந்த ஜாதகனுக்கு உத்தம வயதா? மத்திப வயதா? என்பதை ஆராய்ந்து பின்பே முடிவு கூற வேண்டி வரும். ஆனதால், சோதிடர்கள் எந்த ஜாதகத்திற்கும் தோராயமாய் வயதுகூறி முடிப்பதைவிட்டு, கிரகங்களுடைய சட்பலத்தாலும், பஞ்ச பலத்தாலும், பார்வை-சேர்க்கை முதலிய தாராதரத்தாலும், அஷ்டகவர்க்கு-காலசக்கிரம் முதலியவற்றாலும் நன்கு ஆராய்ந்து ஆயுள்நிர்ணயம் செய்வது முக்கிய கடமையாகும். இவ்வாறு நிர்ணயித்து ஆயுள் சொல்லவேண்டுமென்றே நம்முன்னோர் அடிக்கடி வற்புறுத்திக் கூறியிருத்தலை அறியலாம்.

இதுவுமது

அல்லவர் தங்கட் கமைத்த தெசைபொசிப்பில்
செல்வதே யாமரணஞ் செப்புங்கால்—வல்லமையில்
இல்லையா மாகி லெழின்முலையீ ராறிடத்தோன்
நல்ல தெசையி னவில்.

(பொ-ரை) அழகிய கொங்கைகளை யுடையவளே! அந்த மாரகத்தானத்தில் இருப்போர் அல்லது அந்த மாரகத்தானாதிபதியுடனே சம்பந்தமுற்றிருப்போர் பாபிகளானால் இவர்கட்கு அமைத்த தெசாபுத்திகளிலே மரணமுண்டாகும். இவைகளில் மாரகம் இல்லாவிடில் நன்மைபொருந்திய இலக்கினத்திற்கு 12-ஆம் இடத்ததிபதியினுடைய தெசாபுத்திகளிலே மரணமுண்டாகுமென்று சொல்வாயாக என்பதாம்.

(வி-ரை) இச்செய்யுளின் கருத்தாவது என்னவெனில்? மாரகாதிபதியும் கொல்லலாம். மாரகாதிபதியுடன் கூடிய கோட்கள் பாவராயின் அவர்களும் கொல்லலாம். இவ்விருவர்களது திசையும் வரவில்லையானாலும் பற்பல காரணத்தால் மாரகம் செய்ய ஏதுவில்லாதவர்களானாலும், ஜென்மலக்கினத்திற்குப் 12-ஆம் வீட்டோன் கட்டாயம் கொன்றுவிடுவான் என்பதேயாகும்.

1 ஏழாம் வீட்டவன் அல்லது 2-ஆம் வீட்டவன் கொல்லும் சக்தியில் முதற்சக்தி வாய்ந்தவன் என்றும்,

2 ஏழு அல்லது 2-ஆம் வீட்டவனுடன் கூடியவர்கள் பாவர்களாகில் அவர்கள் திசையில் கொல்லலாம் எனவும்,

3 இவ்விரு விதத்தாரும் கொல்ல பலமற்றவராயிருக்கின் கட்டாயமாய் 12-ஆம் வீட்டோன் கொல்வார் என்பது இச்செய்யுளின் கருத்தின்படி, ஒவ்வொரு சோதிடர்களும் முக்கியமாய் கவனிக்கவேண்டுவது என்னவெனில்? முன்கூறிய 22-ஆம் செய்யுளின் விருத்தியில் கூறியபடி ஜென்மலக்கின ரீதியாய் அற்ப ஆயுள், மத்திம ஆயுள், பூரண ஆயுள் என்பதைச் செவ்வனே அறிந்து, பூரண ஆயுள் எனத் தென்படுமாயின அக்காலம் சம்பவிக்கும் திசை மாரகம் செய்யத் தகுந்ததா என்பதையும், தெளிந்து பின்பே ஆயுள் நிர்ணயம் செய்யவேண்டுவது அவசியமாகும்.

மேற்கூறியபடி மாரகாதிபதிகள் மூவரில் எவர் பலம் பெற்றனர் என்பதை ஆராய்வோமாயின், மேற்கூறியபடி அற்ப ஆயுள், பூரண ஆயுள், மத்திப ஆயுள் என்பது நன்கு விளங்கும். மற்றும் பல நூலாராய்ச்சியால் காணுமிடத்து,

1 பொதுவாய்க் கடகம் முதல் தனுசுக்குள் குருவும், மகரம் முதல் மிதுனத்திற்குள் சனியும் நிற்கின் தீர்க்க வயது.

2 மகரம் முதல் 6-ராசிக்குள் சனியும், கடகமுதல் 6-ராசிக்குள் சந்திரனும் நிற்கவும், 1-4-7-10-ல் குருவும் இருந்தால் தீர்க்க வயது.

3 மிதுனம் முதல் 6-ராசிக்குள் குருவும், தனுசுமுதல் 6-ராசிக்குள் புதன் சுக்கிரன் இவர்கள் நிற்க தீர்க்க வயது.

4 ஜென்ம லக்கினத்தில் சந்திரனும், 4-ல் குரு-சுக்கிரனும், இவர்கள் மத்தியில் சனியும் நிற்க தீர்க்க வயது.

5 ஜென்மலக்கின முதல் 4-ராசிக்குள் புதன்-குரு-சுக்கிரன் இவர்கள் நிற்க தீர்க்க வயது.

6 இலக்கினதிபதி பாவியாய் சுபர் பார்வையற்று 6-8-12-ல் நிற்க அற்ப வயது.

7 ஜென்மத்தில் பாபரிருந்து 6-8-12-ல் தேய்பிறைச் சந்திரனிருக்கில் அற்ப வயது.

8 6-8-12-ல் புதன்-செவ்வாய் நின்றும், சனி வக்கிரம் பெற்றும் நிற்கில் அற்ப வயது.

9 6-8-12-ல் பாவர்களும், லக்கினதிபதி 2-11-ல் நிற்கில் மத்திப வயது.

10 சந்திரனுக்கு இருபுறமும் பாவர்கள் நின்று, லக்கினதிபதி பாவர்களுடன் கூடில் மத்திபவயது என்னும் பொதுப்பலனை ஆராய்ந்து அதன்பின் மேற்கூறியவண்ணம் எவர் மாரகம் செய்வார் என்பதை ஆராய்ந்து பார்க்கின் மாரகாதிபர்களைச் செவ்வனே அறியலாம். இவ்வாறு ஆராயவேண்டுமென் பது சாதக அலங்கார நூலுடையாரின் முக்கிய கருத்தாகும். 23

இதுவுமது

இவன்றெசையி லின்றே லிவனிடத்தி லுற்ற
அவன்றெசையி தாமதுவு மன்றே—சிவந்தவிழி
தேமொழியே நல்லோர் தெசைபிற்கு னெட்டிடத்தோன்
நாம தெசையி னவில்.

(பொ-ரை) சிவப்பாகிய கண்களையுந் தேன்போலும் வார்த்தைகளையு முடையவளே! இந்த 12-ஆம் இடத்ததிபதியினுடைய தெசாபுத்திகளிலே மாணமில்லையாகில், இவனிடமாகிய 12-ஆம் இடத்திலிருந்தவன் 12-ஆம் இடத்ததிபதியுடனே சம்பந்தமுற்றிருக்கிற பாபிகள் இவர்களுடைய தெசா புத்திகளிலே மரணமாம். அதிலும் இல்லையாகில் அந்த விரயாதிபதியுடன் சம்பந்தமுற்ற யோககாரகனல்லாத சுபர்களுடைய தெசாபுத்திகளிலேயும் சிலவிசை மரணமாம். இதிலும் இல்லையாகில் 8-ஆம் இடத்ததிபதி 8-க்கு 8-ஆம் இடத்ததிபதியான 3-ஆம் இடத்ததிபதி இவர்களுடைய தெசாபுத்தி களிலே மாணமாமென்று சொல்வாயாக என்பதாம்.

(வி-ரை) 8-ஆம் இடத்துக்குடையவர்கள் ஆயுளைக் கொடுப்பவர்களாய் இருப்பாரும் மற்றை வேறுவகையில் மாரகம் உண்டாவதற்கு இடமில்லா ததனல் இவர்கள் மாரகங் கொடுக்கவேண்டியதாயிற்று. இச்செய்யுளில் மேற்கூறிய விரயாதிபரும், மாரகம் செய்யவில்லையாயின் 12-ல் இருந் தவர் 12-ஆம் வீட்டோனுடன் சேர்ந்தவர் என்னும் இவர்களும் மாரகம் செய்யலாம். இவர்களும செய்யவில்லையேல் 3-ஆம் வீட்டோன் திசையில் மரணமுண்டாகுமென்றனர்.

இவ்வாறு ஒருவர் செய்யவில்லையேல் இன்னொருவர் செய்வார் என்பது நிச்சயமாயினும், இங்கு இவ்வாறு கூறுவதற்குக் காரணம் என்னவெனில்? மாரகம் செய்பவரைக் குறிப்பதேயாகும். இதுகாறும் கூறிவந்த செய்யுளால் முதன்முதலாய் 7-ஆம் வீட்டோன் மாராகாதி என்றும், 7-ஆம் வீட்டோன் மாரகம் செய்யவில்லையேல் 2-ஆம் வீட்டோன் செய்வாரென்றும், இவ்விருவரும் செய்யவில்லையேல் 2-7-ல் நின்றவர்கள் செய்வாரென்றும், இவர்களும் மாரகம் செய்யவில்லையேல் 2-அல்லது 7-க்குடையவர்கள் திசையில் செய்வாரென்றும், இவர்களும் மாரகம் செய்யவில்லையேல் 12-ஆம் வீட்டோன் அல்லது 12-ல் நின்றவர் அல்லது 12-ஆம் வீட்டவனுடன் சேர்ந்தவர் திசையில் செய்யுமெனவும், இவர்களும் செய்யவில்லையேல் ஆயுள்ஸ்தானாதிபதியான 3-ஆம் வீட்டோனே மாரகம் செய்வாரென்றுங் கூறியுள்ளார். இவ்வாறு பலரையும் மாரகம் செய்யத் தகுந்தவரெனில் எவர்தான் நிச்சயமாய் செய்யத்தகுந்தவரெனில் இதனை அவரவர்கள் இராசிப்படி உத்தம மத்திப அற்பவயது என்னும் மூவிதத்தில் எவை என்பதை ஆராய்ந்தே தான் கூறமுடியும். எப்படியெனில்?

“சரத்துடனே சரந்தீர்க்கம் திரத்தான் மத்திமமாம்
 தயங்கியதோ ருபயங்கள் தானற்ப மாகும்
திரமதனிற் திரமற்பம் சரத்தான் மத்திமமாம்
 திரத்திலுப யம்பெரினும் தீர்க்கவய தாகும்
வருமுபயர் தனிலுபய மத்திபமே யாகும்
 மற்றுமதிற் சரமாகில் வயதற்ப மாமே
பெருமையுட னுபயத்திற் பிறக்க தீர்க்கவயதே
 பெற்றிடில் பூரணவயதே பெற்றிடுவர் தானே”

என்றபடி இலக்கினாதியும், அஷ்டமாதியும் சராராசியில் நிற்கில் தீர்க்கவயது என்றும், லக்கினாதியும், அஷ்டமாதியும், சரம் - ஸ்திரம் என்னும் ராசிகள் மாறியிருக்கில் மத்திம வயதென்றும், சரம் - உபயம் என்னும் ராசிகளில் மேற்படி 1-8-ஆம் வீட்டோர் மாறிநிற்கில் அற்ப வயதென்றும், இலக்கினாதியும், அஷ்டமாதியும் ஸ்திரராசியில் நிற்கில் அற்ப வயதெனவும், ஸ்திரமும் சரமுமாயிருக்கில் மத்திப வயதென்றும், ஸ்திரமும் உபயமாயிருக்கில் தீர்க்க வயதென்றும், இலக்கினாதியும், அஷ்டமாதியும், உபயராசியில் இருக்கில் மத்திப வயதும், உபயமும் சரமுமாக இருக்கில் அற்ப வயதும், உபயமும் ஸ்திரமுமாக இருக்கில் தீர்க்க வயதென்றுங் கூறியதால், இவ்வித காரணத்தைத் தெரிந்து எந்தெந்த காலங்களில் எவர் மாரகம் செய்யத் தகுந்தவர் என்பதை ஆராய்ந்து மாரகாதிபதியை நியமித்துக் கூறுக. அற்ப-மத்திம-உத்தம வயது காலத்தில் மாரகாதிபதியின் திசை வந்து சம்பவிக்கிறதா என்பதை ஆராய்ந்துகொள்க என்பதாம். 24

இதுவுமது

ஆங்கவற்று ளில்லையே லல்லாத கற்றவர்தம்
ஓங்கு தெசையி லுரைக்கவென்—றீங்குயர்ந்தோர்
செப்பினர் மாரகங்கள் செல்வதறி யாதுவிடின்
இப்புவியி லோர்க்கென்று மே.

(பொ-ரை) பூமியிலுள்ளோர்க்கு எந்நாளும் அந்த 8-ஆம் இடம் முதலியவைகளுக்கு அதிபதிகளுடைய தெசாபுத்திகளிலேயும் மரணமில்லையாகில் மாரகங்கள் செவ்வையாய் வராத காலத்தில் மாரகசம்பந்தம் இல்லாமல்

இருக்கிற பாபக்கிரகங்களுடைய தெசாபுத்திகளிலே சிலவிசை மாரகம் உரைக்கவென்று சோதிட நூல் வல்லவர்கள் சொன்னார்கள் என்பதாம்.

(வி-ரை) இச்செய்யுளால் முன்கூறியவண்ணம் உத்தமவயது - மத்திம வயது - தீர்க்கவயது என்பதை ஆராய்ந்து குறித்த காலத்தில் மாரகம் செய்யத் தகுந்தவர்களது திசை வரவில்லையேல் பாவிகள் திசையில் மாரகம் செய்யலாம் என்றனர். அதிலும் மாரகாதிகள் சம்மந்தமில்லாத பாவர்களாயினும் செய்யலாம் என்பதால், முதன்முதலாய் அந்தந்த ஜாதகனுக்கு அற்ப வயதா? மத்திம வயதா? தீர்க்க வயதா? என்பதை ஆராய்ந்து பின்பு அந்தந்த காலங்களில் மாரகாதிபதியின் திசை சம்பவிக்கிறதா என்பதை ஆராய்ந்து அவ்வாறு மாரகாதிபதியின் திசை வருமாயின் கட்டாயம் மாரகம் செய்வான் எனவும், அப்படி மாரகாதிபதி திசை வரவில்லையேல் அக்காலம் சம்பவிக்கும் திசை சுபன் திசையா? பாபன் திசையா? என்பதை ஆராய்ந்து பாபியின் திசையாயின் மேற்படி பாபி மாரக கிரக சம்பந்தமில்லாதவனாயினும் கட்டாயம் மாரகம் செய்வான் என்று நிலைமையாய் கூறலாம்.

பாபன்திசை என்பதை இரண்டுவிதமாய் ஆராயவேண்டுவது அவசியம். தினசரிக் கோட்களில் புதன் - மதி - வெள்ளி - குரு என்னும் நால்வரையும் சுபன் எனவும், சூரியன்-சனி-செவ்வாய்-ராகு-கேது இவர்கள் பாவர்கள் எனவும் கூறியுள்ளார். மற்றும் பூரணசந்திரன் குரு என்னும் இருவரும் பூரண சுபர் என்றும், சுக்கிரன் முக்கால் சுபரென்றும், புதன் அரைச் சுபரென்றும், தேய்பிறைச் சந்திரன் கால்சுபனென்றும் சனி - ராகு - கேது இம்மூவரும் முழுப்பாபிகள் என்றும், செவ்வாய் முக்கால் பாபி என்றும், சூரியன் அரை பாபி என்றும், பாவர்களுடன் கூடிய சந்திரன் - புதன் என்னும் இருவரும் கால் பாபி என்றும், குரு, சனி-ராகு-கேதுக்களுடன் கூடில் சனியைப்போன்ற முழுப்பாபி என்றும், அமாவாசியைச் சந்திரன் புதனுடன் கூடில் முக்கால் சுபரெனவும், சாதக அலங்காரம் 24-ஆம் செய்யுளில் கூறியவண்ணம் சுபன் - அசுபன் என்னும் இருதிறத்தினரையுங் கண்டுகொள்க. மற்றும் பாவக்ஷேத்திரங்கள் எதுவெனில்? 3-6-8-12-என்னும் நான்கும் முழுக் கொடியத்தானம் எனவும், 1-4-5-7-9-10-என்னும் தானங்கள் முழு சுபத்தானமென்றும், 2-11-என்னும் ஸ்தானங்கள் நன்மையும், தீமையும் இல்லாத மத்திமத்தானமென்றுங் கூறியுள்ளதால், இவ்வாறான காரணங்களைக்கொண்டே சுபன்திசை என்றும், பாபன்திசை என்றும் பிரித்தறிவது கடமையாகும்.

இவ்வாறாய் ஆராயாது பொதுவாய்க்கூறிய சுபன் - பாபன் என்னும் மார்க்கத்தால் மாரகம் செய்பவரைக்கூறின் அவை பொருத்தமற்றதேயாகும். இதுவன்றி யோகத்தைக் கொடுப்பவன் என்னும் விஷயங்களுக்கும் இவ்வாறு ஆராய்ந்து கூறுவதே முக்கிய கடமையென சாஸ்திர மேதாவிகள் முக்கிய கருத்தாகும். 25

சனியன் மாரகஞ் சாற்றுகின்றது

பாபபல னைக்கொடுக்கும் பங்குகொள் வோருடனே
சேர்பலத்தா லெல்லோரை யுஞ்செறிந்து—தீபரமாய்க்
கொல்வனென கோதாய் குவலயத்தி லுள்ளவர்கட்
கில்லிவற்றி லைய மியம்பு.

(பொ-ரை) மாலையை யுடையவளே! பாபபலனைக் கொடுக்கிற சனி மாரகக் கிரகங்களுடனே கூடியிருக்கிற குற்றத்தின் வலிமையினாலே எல்லோரையுந் தள்ளி தானே சடுதியில் கொல்வனென்று பூமியிலுள்ள பேர்க்குச் சொல்வாய் இவற்றில் சந்தேகமில்லை என்பதாம்.

(வி-ரை) எல்லோரையுந் தள்ளி என்பதினால் தனக்குமுன் வந்த பேர்களையுந் தள்ளிப் பின் வரப்போகிற மாரகர்களையுந் தள்ளி எனப்படும். இந்த செய்யுளால் மாரகாதிபதி எந்த கிரகமாயினும் மேற்படி மாரகாதியுடன் சனி சம்பந்தப்படுவானேயானால் முன் மாரகாதியையும், 2-ஆம் மாரகாதியையும் நீக்கித் தனது திசை எந்த வயதில் வந்தாலும் அந்த காலத்திலேயே கொல்வான் எனவுங் கூறியுள்ளார்.

அவையாவன:—மேற்படி சனிதிசை எந்த வயதில் வந்தாலும், அந்த வயதிலேயே கொல்வார் என்பதாம். உதாரணமாக 2-ஆம் வீட்டுக்குடையவருடன் சனி சேர்ந்ததாய் வைத்துக் கொள்வோம். மேற்படி சனிதிசை ஜெனன காலத்திலே வந்தாலும் கொல்லும். மத்திப வயதில் வந்தாலும் அப்போது தான் கொல்லும் அல்லது தன் விருதாப்பிய வயதில் மேற்படி சனிதிசை வந்தாலும், அந்த காலம்வரையில் முன்சொன்ன மாரகாதிபதிகள் எவ்வித பலத்துடன் இருந்தாலும் அவர்கள் கொல்ல வல்லவரல்ல. சனி ஒருவரே கொல்லத் தகுந்தவர் என்பது கருத்து. ஏனெனில்? மாரகாதிபர்கள் எவர்களாயினும், அவர்களுடன் சனி கூடுவாராயின் மேற்படி மாரகாதிபர்களுக்கு பலமில்லையானதால் மேற்படி மாரகபலத்தைப் பரித்துக் கொண்ட சனி தனது திசை அதிகாரம் எந்த காலத்தில்வரினும் அந்த காலத்தில் தான் கொல்வார் என்பதே இச்செய்யுளின் முக்கிய கருத்து.

சனி எல்லோர்க்கும் ஆயுள் காரகன் என்பது சாஸ்திரக் கருத்து. பாபபலத்திலும், சுபபலத்திலும் பூரணசக்தி வாய்ந்தவர். தேவர்களையும் தனது வல்லமையால் இம்சித்தவர் சனிக்குள்ள பலம் மற்றையோர்க்கில்லை என்பது கருத்து. மற்றும் சனி எல்லோர்க்கும் ஆயுள் காரகனானதால், மாரகாதியுடன் சம்மந்தப்பட்ட காரணத்தால் மாரகாதிபதியின் பலத்தைத் தானே பரித்து தனக்கு அதிகாரம் வரும் நாளில் தானே அந்த மாரகத்தைச் செய்ய வல்லவனாகிறார். இவை சனிக்குடைய சிறப்புவிதியாகும். இதனாலேயே,

"அந்தமுள விரண்டோனும் சனியும்கூடி
அவனுக்குக் கல்விபல வுண்டாம்சீறு
தொந்தவிவன் குடும்பமது வேஷியாகும்
துலைதூரம் சென்றிடுவான் வந்துசேர்வான்
சந்ததமும் பலகலையுங் கற்றுவாழ்வான்
சாஸ்திரத்தின் வகையறிவான் சதுரனாகும்
எந்தவகை யானாலும் சனியின்காலம்
இவனுக்கு மரணமென இயம்புவாயே"

என்றனர். இதனால் 2-ல் சனி நிற்பாரே யாமானால் அவனுக்குச் சனிதிசை வருமளவும் எவ்வித கண்டமுண்டாயினும் அவை நீங்கி மேற்படி சனியின்திசை எந்த காலத்தில் வந்தனவோ அந்த காலத்தில் மரணமடைவான் எனவுங் கூறவேண்டுவதாகிறது. இவ்விதமாய் கிரகங்கள் அமையப் பெற்ற ஜாதகங்கட்கு மேற்படி சனிதிசை வருமளவும் மத்தியகாலம் எவ்வித பலம் வாய்ந்த மாரகாதியின் திசை வந்தாலும், மற்றும் கொடிய ஆதிபத்தியம்

பெற்றவர் கொடிய கோட்களின் திசை முதலியன வாய்ந்தாலும், அந்த காலங்களில் கெண்டாதி கெண்டங்கள் உண்டாகி நீங்குமெனக் கூறலாமே யொழிய சனிதிசை வருமளவும் பிராணன் போகாது என்றே கூறவேண்டி வரும். இவ்விதத்தாலும் உத்தம-மத்திப-தீர்க்க ஆயுள் என்னும் விவரங்களை அறியலாம். ஆதலால் இவ்வாறாய் ஆயுள் நிர்ணயம் செய்யலாம் என்பதும் பொருந்தும். 26

புத்தியிலக்கணம் புகல்கின்றது

கோட்களெல்லாந் தந்தங் குலவு தெசைபொசிப்பில்
சேட்படுமிவ் வையகத்திற் செப்பரிய—மாக்கடமக்
கியார் பலாபலன்க ளொன்றுந் தமக்கேற்ற
சேயரிக் கண்மாதே செப்பு.

(பொ-ரை) செவ்வரிபொருந்திய கண்களையுடைய பெண்ணே! விசாலம் பொருந்திய இப்பூமியிடத்தில் சொல்லுதற்கரிய மனிதர்களுக்கு எல்லாக் கோள்களுந் தங்கள் தங்கள் தெசையில், தங்கள் தங்கள் சுயபுத்தியில் தமக்குத்தக்க சுபாசுப பலன்களை எப்போதும் கொடாரென்று சொல்வா யாக என்பதாம்.

(வி-ரை) என்னவெனில்? மேல்வருகிற புத்திகளில் சுபபலனை கொடுப் பதினால் தான் தங்கள் புத்தியில் எதைக் கொடுப்பாரெனில் முன்தெசைக் கொத்த முன் பலனைக் கொடுப்பார்கள். இச்செய்யுளின் முக்கிய கருத்தாவ தென்னவெனில்? ஒருவனுக்குச் சுபனது திசையோ பாபனது திசையோ வரும்போது தன் சுயபுத்தி நடக்கும்வரையில் சுபனுயின் சுபபலத்தையும், பாபனுயின் பாபபலத்தையும் தரமாட்டார் தன் திசைக்குமுன் நடந்த திசைக்குத் தக்க பலனையே கொடுப்பார் என்பதேயாகும்.

சாதக அலங்காரம், சாதக சிந்தாமணி முதலிய நூற்களில் பொதுவாய்க் கூறிய திசைபுத்தி பலன்களில் சுபன் திசையில் சுபபலனும், பாவன் திசை யில் பாபபலனையுங் கூறியுள்ளதை அறியலாம். ஆயினும் அவை பொதுப் பலனென்றே குறிப்பிட்டுள்ளனர். மற்றும் சில நூற்களில் ஓர் சுபன்திசை அல்லது யோகத்தைத் தரத்தகுந்தவன் திசையில் தன் சுயபுத்தியில் நற்பலனை கொடுப்பாராகில் பின்வரும் புத்திகாலங்களில் தனக்குரிய கார கத்தின்படிக்கு உண்டாகிய நற்பலனைத்தரார் என்றுங் கூறப்பட்டிருக் கின்றன.

இவை யாது காரணம்பற்றியெனின்? ஓர் அரசன் எல்லா விஷயங் களையும் தானே தன் குடிகளுக்குச் செய்துவிட முடியாது. பல சிப்பந்தி களைக்கொண்டே தன் மனததிலுள்ள காரியா காரியங்களை முடிக்க முடியும். அப்படித் தானே செய்ய முயலுவாராயின், தனக்குற்ற வயதுபோக மற்றய வயதில் எல்லா விஷயங்களையும் செய்ய சக்தியற்றவனுயும், வெறுப்புற்றவ னுகவும் நிற்பன். இதனுலே அனேக அரசர்கள் ஏதோ சில முக்கிய காரி யங்களை மாத்திரம் தமது பார்வையிலும், மற்ற விஷயங்களை சிப்பந்தி மூலமாய் நடப்புவித்து அவை பாழடையாவண்ணம் கவனிப்பது உத்தம அரசர்களது பழக்கம்.

இதைப்போன்று ஓர் திசாநாதன் ஒரு ஜாதகனுக்கு நன்மையோ தீமையோ செய்யச் சக்திவாய்ந்தவனுகின் அவன் தானே செய்து முடித்து

விடின் சிப்பந்திகளாகிய புக்திநாதர்கள் அரசனாகிய திசாநாதனது பார்வை யில்லாத காரணத்தால் தமது இஷ்டம்போல் பற்பல காரியங்களைச் செய்து விடலாம். இதுவன்றி, திசாநாதன் தனக்குள்ள பலத்தை தானே செய்து விடுவானாகில் பின்வரும் சிப்பந்திகள்போன்ற புத்திநாதர்களை கவனியாது விட்டுவிடுவானானதால் புத்திநாதர்கள் இஷ்டப்படி நன்மையையோ தீமை யையோ செய்யலாம். ஆனதால் திசாநாதன் பார்வையிருந்து புக்திநாதர்கள் கொடியவராயினும், பாபராயினும், தனது ஆக்கினைக்குக் கீழ்ப்பட்டவராத லால் இவ்வாறு தான் செய்யவேண்டும் எனக் கூறுவதுபோன்று புக்தி நாதர்களது குரூரசித்தமாகிய தனது குணத்தைத் திருப்பி தமது எண்ணப் படி நற்பலனை விளைவிப்பான்.

இவ்வாறு அனேக ஜாதகங்களுக்குத் தன் திசையில் தமது காரகத் திற்குத் தகுந்த பலத்தைக் கொடுத்து பின்வரும் புக்திகாலங்களில் எவ்வித பலனும் இல்லாது வீணாவதை அனுபவ வாயிலாய்க் காணலாம். ஆனால் 100-க்கு 5 ஜாதகங்களுக்கே இவ்வாறு உண்டாகும். மற்றும் 95 ஜாதகங் களுக்கும் தன் திசையின் முதலில் நற்பலன் உண்டாவதில்லை. அப்படி உண்டாயினும் தன்முன் திசைக்கேற்ப நற்பலனோ துற்பலனோ சமமாய் உண்டாவதே வழக்கம். இது கடவுளின் ஆக்கினையேயாகும். இதனாலேயே இந்நூலாசிரியரும் தன் சுயபுத்தியில் கட்டாயமாய்ச் சுபபலனைக் கொடுக்கார் என்று கூறினர். 27

இதுவுமது

யாரொருவர் தம்முடனே யுற்றார் தமக்குநிகர்
யாரவர்கள் யாரு மரும்பொசிப்பில்—வார்நெடுங்கண்
மாதேத் தந்தெசையின் மாண்பார்ப லாபலன்கள்
கோதறக்கொள் எக்கொடுப்பார் கொண்டு.

(பொ-ரை) நீண்ட கண்களையுடைய பெண்ணே! எல்லாக் கோள்களும் யாதொரு கோள்கள் தங்களுடனே சம்பந்தமுற்றார்களோ யாதொரு கோள் கள் சுபாசுப பாவாதிபத்தியத்தினாலே தங்களுக்குச் சமமாய் இருக்கின்றார் களோ அவர்களுடைய அரும் பொசிப்பில் தங்கள் தங்கள் தெசைகளுடைய மாட்சிமை பொருந்திய சுபாசுப பலன்களைக் குற்றமற அடையும்படி கொடுப் பார்கள் என்பதாம்.

(வி-ரை) இங்கு திசாநாதருடன் சம்மந்த கோட்கள் பற்பல காரணத் தால் சுபபலனைத் தரத்தக்கதான வகையில் பலப்பட்டு தனக்குச் சமமான பலத்துடன் இருப்பார்களானால் அப்படிப்பட்டவர்கள் புக்தியில் திசாநாதனது பலம் எவ்வளவோ அவ்வளவு பலனையும் தருவார் என்றும் கூறியுள்ளார். இவை சுபபலத்திற்கும் பாவபலத்திற்கும் பொருந்தும். திசாநாதன் சுபனாகி மேற்படி திசாநாதனுடன் சம்மந்தப்பட்டவரும் சுபனாகி ஆதிபத்திய முதலிய வற்றால் நற்பலமடைந்து சேர்ந்திருக்கில், அந்த கிரகத்தினது புக்தியில் திசாநாதனுக்குள்ள பலம் எவ்வளவோ அவ்வளவு பலனையும் தரும் என்ப தாகும்.

இதனால் திசாநாதனுக்குள்ள சுபபலம் புக்திநாதனுக்கு உண்டாகிற தெனக் கூறவேண்டுவதாகிறது. அதிலும் திசாநாதனும், புக்திநாதனும் சம பலமாய் சுபம் பெற்றால் இவ்விதம் உண்டு எனக் கூறவேண்டுவதாகிறது. உதாரணமாகக் கீழ்க்கண்ட சக்கரத்தை கவனிக்கவும்.



மேற்கண்ட சக்கரத்தில் யோககாரகனாகிய புதனுடன் லக்கினாதியான சுக்கிரன் கூடியுள்ளான். இருவரும் சமமான பலத்துடன் நிற்கின்றனர். ஆனதால் மேற்படி புதன் திசையின் சுக்கிர புக்தியிலோ, சுக்கிரன் திசையில் புதன் புக்தியிலோ அவரவர்கள் காரகத்திற்கேற்ப பலனைத் தாமதமின்றி கொடுப்பாரென்று ஏற்படுகிறது.

இங்கு காட்டிய சக்கரம் மேற்கோளுக்காய் காட்டியதாதலால், மற்றுமுள்ள ஜாதகங்களுக்கு இன்னும் வெகுவாய் ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியம். இதுவன்றி இச்செய்யுளின் முக்கிய கருத்தாவது என்னவெனில்? திசாநாதனுடன் கூடிய சுபகிரகம் திசாநாதனுக்குரிய பலத்திற்கு சமமாகிய பலம்பெற்று நிற்கில் தன் சுயபுக்தியில் தனது சுபபலத்தைக் கொடுக்காது தன்னுடன் கூடிய சுபகிரகத்தினது புக்தியில் தனது சக்தி எவ்வளவோ அவ்வளவு பலனையும் தருவார் என்றுங் கூறலாம். திசைபுக்தி விஷயமாய் கவனிக்கவேண்டிய முக்கியவிதி.

1 திசாநாதன் சுபனா? அசுபனா?

2 திசாநாதன் எந்த ஆதிபத்தியம் பெற்றான்?

3 திசாநாதன் இருந்த வீடு பஞ்சபலங்களில் எவை?

4 திசாநாதன் எவர்களால் பார்க்கப்பட்டான்? அப்படி பார்க்கின் அவர்களுக்கு சத்துரு-மித்துரு முதலியன.

5 திசாநாதன் சந்திர லக்கினப்படி அமர்ந்த ராசி சுபக்ஷேத்திரமா? அசுபக்ஷேத்திரமா?

6 திசாநாதனுக்கு புக்திநாதன் எந்த ராசியில் இருக்கிறான்?

7 திசாநாதனுக்கும் புக்திநாதனுக்கும் உள்ள சத்துரு மித்துருத்துவம்.

8 ஜென்மலக்கினப்படி சுபன்-அசுபன்-யோகன்-மாரகன் முதலியவிதி என்னும் இவ்விதங்களையும் மண்டல சமயம் - அஷ்டகவர்க்கம் முதலியனவற்றையும் ஆராய்ந்து திசைபுக்தி பலன் கூறவேண்டுவது அவசியம். 28

இதுவுமது

அல்லா தவர்பொசிப்பி லன்னியமா மப்பலன்கள்
எல்லாரு மீவரென்றே யின்பமுடன்—சொல்லிடுவீர்
கோளின் வலியுங் குணமு மறிந்தூக்கி
வாளி னடப்பவர்போல் வந்து.

(பொ-ரை) சம்பந்தமும் சமானத்துவமும் இல்லாதவர்களுடைய புத்திகளில் தாங்கள் சுபரானால் சுபபலனையும், அசுபரானல் அசுபபலனையும் எல்

லாருங் கொடுப்பாரென்று கூறுவீராக. சொல்லும்போது கோட்களுடைய வலிமையாகிய நட்பு - ஆட்சி - உச்சம் - பகை - நீச்சம் முதலாகியவைகளையும் காரகத்துவமுமறிந்து வாளின்மேல் நடப்பவர்போல சாவதானமாய்ப் பலன் களைச் சொல்வீர் என்பதாம்.

(வி - ரை) முன்கூறிய செய்யுளில் திசாநாதனுடன் கூடிய கிரகம் தனக்குச் சமமான சுபாவகுணமுடையதாயின், மேற்படி திசையில் தனது புக்தியில் திசாநாதன் கொடுக்கவேண்டிய பலன் யாவும் கொடுப்பார் என்றனர். இங்கு திசாநாதனுடன் சம்மந்தப்படாததும், திசாநாதனுக்குச் சமமான பலாபலன்கள் இல்லாததுமாகிய கிரகங்கள் புக்தியில் தத்தமது காரகப்படியும், தமக்குள்ள பலத்தின்படியும் பலனை அளிப்பார் என்றுங் கூறினர். அவை எவ்வளவு என்பதை ஆட்சி-உச்சம்-நட்பு-பகை-நீச்சம் முதலியவற்றால் கூறுக என்றமையால் மேற்சொன்ன பஞ்சபலங்களின் தன்மை எவ்வளவு என்பதை அறிந்தே அவரவர்கள் காரகப்படி சுபனுயின் சுபபலனும், பாபனுயின் பாபபலனும் தருவார் என்று ஏற்படுகிறது. ஆனதால் இங்கு உச்சம்பெற்ற கிரகத்திற்கு எவ்வளவு பலம், ஆக்ஷிபெற்ற கிரகத்திற்கு எவ்வளவு பலம், நீச்சம் - பகை - நட்பு முதலியனவுடைய கிரகங்களுக்கு எவ்வளவு பலம் என்று கூறுமிடத்து,

"உச்ச மொன்றுடன் கால்ஒன்று கேந்திரம்
அச்ச முக்கா லதிபதி யோர்பலம்
மெச்சு நட்புக் கரைபலம் மிக்ககால்
துச்ச நீசப் பலனெனப் பேசுமே"

என்று கூறியதால், உச்சஸ்தானத்தில் இருந்த கிரகத்திற்கு ஒன்றேகால் பலமும், கேந்திர ஸ்தானத்தில் இருந்த கிரகத்திற்கும், ஆக்ஷிபெற்ற கிரகத் திற்கும் ஒரு பலனும், நட்பு ஸ்தானத்தில் இருந்த கிரகத்திற்கு அரைப் பலனும், நீச்ச ஸ்தானம்பெற்ற கிரகத்திற்குக் கால்பலனும் என்க. இவை சுபபலனுக்கும் பாவபலனுக்கும் பொருந்தும். ஏனெனில்? எந்த திசை யிலும் திசாநாதனுடன் சம்மந்தமும், சமானமும் இல்லாத கோட்களினது புக்தியில் தத்தமது காரகப்படி தன் பலமுள்ள அளவுபலனைக் கொடுப்பார் என்றதனுலேயாகும். மற்றும் கிரகங்களினது ஆக்ஷி-உச்சம்-நட்பு முதலிய வற்றைக் கூறுமிடத்து,

சூரியனுக்கு	ஆக்ஷி	சிங்கம்	உச்சவீடு	மேடம்
சந்திரனுக்கு	,,	கடகம்	,,	ரிடபம்
செவ்வாய்க்கு	,,	மேடம்-விருச்சிக	,,	மகரம்
புதனுக்கு	,,	கன்னி-மிதுனம்	,,	கன்னி
குருவுக்கு	,,	தனுசு-மீனம்	,,	கடகம்
சுக்கிரனுக்கு	,,	ரிடபம்-துலாம்	,,	மீனம்
சனிக்கு	,,	மகரம்-கும்பம்	,,	துலாம்

சூரியனுக்கு	நீச்சவீடு	துலாம்
சந்திரனுக்கு	,,	விருச்சிகம்
செவ்வாய்க்கு	,,	கடகம்
புதனுக்கு	,,	மீனம்
குருவுக்கு	,,	மகரம்
சுக்கிரனுக்கு	,,	கன்னி
சனிக்கு	,,	மேஷம்

சூரியனுக்கு	பகைவீடு	ரிடபம்-மகரம்-கும்பம்
சந்திரனுக்கு	,,	ரிடபம்-மகரம்-கும்பம்
செவ்வாய்க்கு	,,	மிதுனம்-கன்னி
புதனுக்கு	,,	கடகம்
குருவுக்கு	,,	ரிடபம்-மிதுனம்-கன்னி-துலாம்
சுக்கிரனுக்கு	,,	கடகம்-சிங்கம்
சனிக்கு	,,	கடகம்-சிங்கம்-விருச்சிகம்

சூரியனுக்கு	நட்புவீடு	கடகம்-விருச்சிகம்-தனுசு-மீனம்
சந்திரனுக்கு	,,	மிதுனம்-சிங்கம்-கன்னி
செவ்வாய்க்கு	,,	சிங்கம்-தனுசு-மீனம்
புதனுக்கு	,,	ரிடபம்-சிங்கம்-துலாம்
குருவுக்கு	,,	மேடம்-சிங்கம்-விருச்சிகம்
சுக்கிரனுக்கு	,,	மிதுனம்-மகரம்-கும்பம்
சனிக்கு	,,	ரிடபம்-மிதுனம்-கன்னி

இராகு கேதுக்களுக்கு மேடம் பகை, ரிடபம்-நீசம், மிதுனம்-நட்பு, கடகம்-பகை, சிங்கம்-பகை, கன்னி-நட்பு, துலாம்-நட்பு, விருச்சிகம்-உச்சம், தனுசு-நட்பு, மகரம்-நட்பு, கும்பம்-பகை, மீனம்-நட்பு என்பனவாம். இவ்விதம் கிரகங்களின் பஞ்சபலம் அறிந்தே பாவபலனும், யோகபலனும் கூறவது அவசியம். மற்றும் திசைப்பலன் சொல்லவேண்டிய மார்க்கங்களைக் கீழ்வரும் செய்யுளாலும் விளக்குவார். 29

இதுவுமது

தன்றெசையிற் கோணத் தலைவன்கண் டத்தலைவன்
தன்பொசிப்பிற் றுனளிப்பன் தக்கசுபம்—அன்னவனும்
அப்படியே யாகு மவரகத்தா ரன்றியுறச்
செப்பமுட னின்றளிப்பன் சீர்.

(பொ-ரை) திரிகோணாதிபதி தன் திசையில் கேந்திராதிபதியின் புக்திகளில் தனக்குத்தக்க சுபபலனைக் கொடுப்பன். அத்தன்மையனாகிய கேந்திராதிபதியின் அவன்றெசையில் திரிகோணாதிபதி தன்பொசிப்பில் தனக்குத் தக்க சுபபலனைக் கொடுப்பன். திசாநாதன், புக்திநாதன் இந்த இரண்டு பேர்களும் ஒருவர்க்கொருவர் சம்பந்தமில்லாமல் இருந்தபோதிலும், இவர்களுக்கு அட்டத்தாணாதிபதித்தியதோஷம் வாராமல் இருக்கவேண்டுவது என்பதாம்.

(வி-ரை) பத்தாம் அதிபதி திசையில் நவமாதிபதி புத்தியில் விசேஷ சுபபலனைக் கொடுப்பன். இச்செய்யுளில் கோணாதிபன் திசையில் கேந்திராதிபதிகளின் புக்தியும், கேந்திராதிபர்கள் திசையில் கோணாதிபர்களது புக்தியிலும் விசேஷ சுபபலனைத் தருவார் என்றனர். இவை பொருந்தத் தக்கதேயாகும். எப்படியெனில்? கோணாதிபர்கள் கேந்திரத்தில் இருந்தாலும், கேந்திராதிபர்கள் விசேஷபலனைத் தருவார் என்றமையால், இவர்களது திசையிலும், புக்தியிலும் அளவிறந்த இராஜயோகத்தையே தருவார் என்பது பொருந்தும். இவ்விதத்தால் நாம் இன்னமொன்றும் யூகிக்க வேண்டியதாகிறது. கீழ்க்கண்ட சக்கரத்தை கவனிக்கவும்.

பு-கு சனி	சூரி கே	லக்	
சுக்	இராசி		
அங்			
	சந்	ராகு	

இந்த ஜாதகருக்கு சனி திசையில் செவ்வாய் புக்தி நடப்பதாயின் அவர் தரும்பலன் என்ன என்பதை ஆராய்வோம். திசாநாதன் 9-10-க்குடையவன் ஆனதால் இந்த திசை இராஜயோகத்தைக் கொடுக்கத் தகுந்ததவரென்றே கூறவேண்டுவதாகிறது. மற்றும் 11-ஆம் வீட்டில் இருப்பதாலுங் கூட பாவர்கள் 11-ஆம் வீட்டில் இருக்கும் காரணத்தால் நன்மையைத் தருவர் என்றே கூறலாம். இவை கோணாதிபன் திசை என்றும் கூற வேண்டியதாயிற்று. செவ்வாயைக் குறித்துக் கூறுகையில் 7-ஆம் வீடாகிய கேந்திராதியாகி, கோணமென்னும் 9-ல் நிற்கிறார். ஆயினும், மேற்படி செவ்வாய்க்கு பாவாதிபத்தியத்தில் ஒன்றான 12-ஆம் ஆதிபத்தியமும் இருந்துள்ளதால் மேற்படி சனி திசையில் செவ்வாய் புக்தியில் யோகத்தைத் தருவாரென நிச்சயித்துக் கூறமுடியாது.

ஆனதால் இச்செய்யுளில் கூறியவண்ணம் கேந்திராதிபதி கோணத்திலும், கோணாதிபதி கேந்திரத்தில் இருந்தும், அவர்கள் திசையோ புக்தியோ வருமாயின் அவர்கள் அளவிறந்த இராஜயோகத்தைக் கொடுப்பார் எனக் கூறிவிடுவது கூடாது. கேந்திராதிபத்தியமோ கோணாதிபத்தியமோ இருந்தாலும், பாவாதிபத்தியம் என்னும் 3-6-8-12-ஆம் ஆதிபத்தியம் வருவது கூடாதென்றே கூறவேண்டும். அப்படியாயினும் மேலான இராஜயோகத்தைக் கொடுப்பது அரிது. இவ்விதமாய் ஆராய்ந்து திசைபலன் கூறுவதே விசேஷ கடமையாகும்.

10-ஆம் அதிபன் திசையில் 9-ஆம் அதிபன் புக்தியோ அல்லது 9-ஆம் அதிபன் திசையில் 10-ஆம் அதிபன் புக்திக்கோ இவ்வித தோஷங்கள் பாதிக்கப்படாது. இதனை சிற்சில நூலாசிரியர்கள் சம்மதித்தும், சிலர் சம்மதிக்காதும் இருக்கின்றனர். அனுபவவாயிலாய் காணுமிடத்து மேற்படி இருவர்களின் திசைபுக்தி வருங்காலங்களில் அவர்களது சுய ஆதிபத்தியத்தை கவனிப்பதுடன், அவர் நின்ற க்ஷேத்திரம் பஞ்சபலம் பார்வை-சேர்க்கை முதலிய விசேஷங்களைக் கொடுப்பார் என்பதையும், அவ்வாறு கொடுப்பார் என்று ஏற்படுமாயின், அவர்கள் தரும் யோகத்தின் அளவையும் கூறுதல் நலம். திசைபுக்தியைக் கூறுங்கால் இவ்வாறு ஆராயாது ஸ்தூலமார்க்கமாய்க் கூறிய பலன்கள் குறித்த காலத்தில் நிகழாது என்பதை அனுபவவாயிலாக உள்ளவர்கள் அனேகமாய்ச் சம்மதித்துள்ளனர். 30

மாரகதிசாயோகபலன் வழுத்துகின்றது

அரசயோ கந்தனக் காரம்ப மாக
மரணமளிப் போரவர்பொ சிப்பில்—வரிசையினல்
மென்மேல் விளங்கு மிதுமுதல் பாவத்தார்
தன்மா பொசிப்புகளிற் றுன்.

(பொ-ரை) பிரதானமாய் இருக்கப்பட்ட மாரகருடைய திசாபுக்திகளில் இராஜயோகம் ஆரம்பித்தால் அதுமுதல் பாபக்கிரகங்களுடைய புத்திகளின் வரிசையினுல் அந்த இராஜயோகம் மேல்மேலாக விளங்கும் என்பதாம்.

(வி-ரை) யோககாரக திசையில் புக்திநாதருக்கு பாபத்துவத்தினுல் உண்டான தோஷமில்லை எனக்கொள்க. இங்கு இராஜயோகம் தரத்தகுந் தவர்களது திசையில் மாரகம் செய்யத் தகுந்தவர் புக்தியிலுங்கூட அளவில்லாத இராஜயோகம் உண்டு என்றனர். இதை கவனிக்குமிடத்து மாரகன் திசையில் யோககாரகன் புக்தியும், யோககாரகன் திசையில் மாராகதிபன் புக்தியும், இராஜயோகத்தையே தரும் என்று கூறவேண்டியதாயிற்று.

இவ்வாருன விஷயங்களைச் சோதிக்குமிடத்து பொதுவாய் ஓர் ஜாதகனுக்கு மாரகாதிபர் இருவர் அல்லது மூவர் உண்டாவர். இம்மூவரில் அல்லது இருவரில் எவர் மாரகம் செய்வார்? எவர் மாரகத்துக்குத் தகுந்த நோயைத் தருவார் என்பதை அறியும் மார்க்கங்களை முன்கூறிய 25-26-27-ஆம் செய்யுளில் நன்குவிளக்கிக் காட்டப்பட்டுள்ளன. ஆதலால் இங்கு அதனைக் கூறவேண்டுவது அவசியம் இல்லையென விடுத்தனம். நாம் ஆராய்ந்து அறியவேண்டுவது என்னவெனில்? யோகத்தைத் தருபவனே மாரகாதிபனுகவும், மாரகாதிபதியே யோகாதிபனுகவும் வருவது சகஜம். ஆதலால் இங்கு கூறிவருவது திசைப்பலனே ஆதலால் எவர் திசையாகிய யோகத்தைத்தருபவர் என்பதையே ஆராயவேண்டும். ஏனெனில்? 7-ஆம் அதிபன் மாரகாதிபன் என்று கூறுவகால் மேற்படி 7-ஆம் வீட்டோன் 9-ல் நிற்பதாயின் 9-ல் நின்ற கிரகம் யோகத்தைத் தரும் என்று சாஸ்திரமுள்ளதால் தனது ஆதிபத்தியப்படி யோகத்தையும், மாரகத்தையும் கொடுத்தே தீருவான் என்றே கூறவேண்டுவதாகிறது. அதிலும் யோகாதிபன் திசையில் மாரகாதிபன் புக்தி வருமேயாயின் அதிலும் மேம்பாடாகிய இராஜயோகத்தையே தருவான் என்றுங் கூறவேண்டுவதாகிறது. எவர் எவர்கள் எவ்வித யோகத்தைத் தருவார் என்று வினவின், அவை அவ்வவர்களுடைய காரக குணத்தைக்கொண்டே கூறவேண்டுவதாகும். உதாரணமாக இந்நூலாசிரியர் கொள்கைக்கேற்ப மற்றொரு நூலாசிரியரும்,

"தந்தைபதி திசையதனி லேழோன்புத்தி
தாரணியில் வருமென்ருல் தனிவாய்க்கேளு
பந்துஜனக் கூட்டுறவு மனேகமுண்டு
பாக்கியங்க ளனேகமுண்டு பவிசுமுண்டு
எந்தையிட கடாக்ஷத்தால் அரசன்போன்று
இவனுக்கு வாழ்க்கையுண்டு இடருமில்லை
விந்தைமலர் நண்பனைப்போல் தேயமெல்லாம்
விளங்குமிவன் கீர்த்திஎன்பார் விண்ணுளாரே"

என்று கூறியதாலும்,

"தேசுறு பத்தாமாதி திசையினில் ஐந்தோன்புத்தி
வீசிய வைந்தோன்புத்தி விளக்கமாய் வருமேயாயின்
பூசலும் ஞானமுண்டாய்ப் புண்ணியம் பலவுமுண்டாய்
ஓசைகொ ளிராஜயோகம் உண்டெனக் கூறுவாயே"

என்றபடி கேந்திர கோணதிபர்களின் திசைபுக்தி காலங்களில் அவர்கள் மாரகம் செய்வார் என்பது ஒருபுறம் இருக்க யோகத்தைத் தருவார் என்றே கூறியுள்ளனர். ஏனெனில்? யோககாரகர் திசையிலோ புக்தியிலோ அவர்

கள் மாரகாதியாய் இருந்தாலும், யோகத்தைக் கொடுக்கவொட்டாமல் தடுப்பது முடியாது என்னும் கருத்தேயாம். கீழ்வரும் செய்யுளால் ஒவ்வொரு திசாபுக்தியின் தன்மையை அறிக. 31

திசாயோகபலன் வழுத்துகின்றது

கூடிசுபர் யோகங் கொடுத்திடுவர் கூடாத
நீடி சுபர்பொசிப்பி னேராக—நாடிடுவாய்
காரகர்சே ராச்சுபர்கள் காணரச யோகபலன்
பாரிலுள்ளோர்க் கீவார் பரிந்து.

(பொ-ரை) பூமியிலுள்ளோர்க்கு யோககாரக சம்பந்தமுற்ற சுபக்கிரகங்கள் சுயபுக்திகளில் யோகபலனைக் கொடுப்பார்கள். அச்சம்பந்தமில்லாத சுபக்கிரகங்கள் சுயபுக்திகளில் சமபலனைக் கொடுப்பார்கள். அச்சம்பந்தப் படாத யோககாரகாள் சுயபுக்திகளில் யாவருங் காண்கிற இராஜயோகபலத்தைப் பரிவுடன் கொடுப்பார்களென்று அறிந்துக்கொள்வாய் என்பதாம்.

(வி-ரை) மூற்கூறப்பட்டவர்கள் சுயபுக்திகளில் வரிசையாகவும் சமமாகவும் பலனைக் கொடாதென்பதாயிற்று. இச்செய்யுளால் திசாநாதன் சுபராயினும் அந்தந்த லக்கினத்திற்கு யோககாரகர்கள் எனக்கூறிய கோட்கள் மேற்படி திசாநாதனுடன் கூடியிருக்கில், அவர் தன் சுயபுக்தியிலே எல்லா யோகத்தையும் கொடுத்துவிடுவார் எனவும், யோககாரகர்களுடன் கூடாத சுபகிரகங்களின் திசை தனது சுயபுக்தியில் சமபலனைக் கொடுப்பார் எனவும், திசாநாதர் எவராயினும் அவர் அந்த லக்கினத்திற்கு யோககாரகர்களெனில்? அவர்கள் தனது சுயபுக்தி ஆரம்பமுதலே இராஜயோகத்தைத் தருவார் என்றுங் கூறவேண்டியதாயிற்று.

முன்கூறிய 26-ஆம் செய்யுளில் எந்த கிரகமும் தன் சுயபுக்தியில் நல்லபலனைக் கொடான். அப்படிக் கொடுப்பானாயின் பின் புக்திகாலங்களில் நற்பலன் கொடான் என்றுங் கூறியது வியக்கத்தக்கதேயாகும். இவ்விரண்டு செய்யுட்களாலும் நாம் தெரிந்துகொள்ளவேண்டிய முக்கிய கருத்தாவது என்னவெனில்? ஒவ்வொரு திசாநாதனையும் எக்தெந்த காரணத்தால் தன் சுயபுக்தியில் பலனைக்கொடுப்பான். எக்தெந்த காரணத்தால் தன் சுயபுக்தி போக மற்றைய புக்திகளில் பலனைக் கொடுப்பான் என்பதை ஆராய்ந்தே திசைப்பலன் நிர்ணயிக்க வேண்டுவது அவசியம். திசாநாதன் யோககாரகனாயின் அவன் தனது சுயபுக்தியிலேயே இராஜயோகபலனைக் கொடுப்பான் என்றதால் தன் சுயபுக்தியில் அமோகமாகிய இராஜயோகபலனும் பிற்கால புக்திகளில் சமயோசித பலனுமாகக் கொடுப்பான் எனவுங் கொள்ள வேண்டியதாயிற்று.

மற்றும் யோககாரகர்களுடன் சம்மந்தப்பட்ட மற்றொருவர் திசையோ சாதாரண யோகத்தையே தரும். திசாநாதன் தினசரிக் கோட்களில் சுபனாகி அவர் திசை நடக்குங்கால் நன்மையும் தீமையும் இல்லாத சமபலனே கொடுப்பர் என்பது பொருந்தும். ஆனாலும் தன் சுயபுக்தி காலங்களில் விசேஷ இராஜயோகத்தைக் கொடுக்கும் கிரகமோ பிற்கால புக்திகளில் மேற்கூறியவாறு விசேஷ இராஜயோகபலனைத் தராமலும் கொடிய துன்பபலனைத் தராமலும், மத்திபபலனையே தரும் என்பதற்கு ஐயமில்லை. இவ்விஷயத்தைக் கீழ்வரும் செய்யுளாலுங் காணலாம்.

தனது சுயபுக்தியில் விசேஷ இராஜயோக பலனைத்தரும் கிரகம் எதுவெனில்? அந்தந்த லக்கினப்படி யோககாரகராய் வந்த திசை ஒன்றேயாகும்.

ஆதலால் அவ்வித கிரகங்களும் கூட தன் சுயபுக்தியில் விசேஷ இராஜ யோகபலனைக் கொடுப்பாரெனினும், பின்வரும் புக்தியில் அவ்வித இராஜ யோகபலனைக் கொடார் என்றே கருதவேண்டியதாகிறது. இந்நூலாசிரியரும் பின்வரும் புக்திகளை எதுங் குறிப்பிடவில்லை.

இவ்வாறு திசாநாதனைப்பற்றி ஆராயவேண்டியது என்றே திசைபுக்தி-அந்திரம்-சூக்ஷமம்-சித்திரம் உள்சித்திரம் என்னுமிவற்றை ஆராய்ந்துரைக்க வேண்டும் என்பது சோதிட நூலாசிரியர்களின் கருத்து. இதுவுமன்றி எந்த திசாநாதனையும் யோககாரகம்பெற்ற ஒருவரையன்றி மற்றையோர் திசைகளை முன்கூறிய 27-ஆம் செய்யுளின் விருத்தியுரையில் கூறியவண்ணம் ஆராய்ந்தே திசைபலன் கூறுவது முக்கிய கடமையாகும். 32

இதுவுமது

யோக மளிப்பவர்க ளொன்றுச் சுபர்தெசையில்
பாகமுறுந் தங்கள் பரும்பொசிப்பில்—யோகபலன்
கொஞ்சங் கொடுப்பரென்று கொண்டாற் குழற்கனிவாய்
நஞ்சமரும் வாள்விழியாய் நாடு.

(பொ-ரை) மேகம்போல் கூந்தலையுங் கொவ்வைக்கனிபோல் வாயினையும் விஷம்பொருந்திய வாள்போல் கண்களையு முடையவளே! யோககாரகக் கிரகங்கள் தங்களுடன் சம்பந்தமில்லாத சுபக்கிரகங்களுடைய திசையில் தங்கள் தங்கள் புக்திகளிலே அற்பயோக பலனைக் கொடுப்பாரென்று கூறுவாயாக என்பதாம்.

(வி-ரை) இச்செய்யுளில் முன்கூறிய 27-ஆம் செய்யுளில் கூறியவண்ணம் கூறியுள்ளனர். எப்படியெனில்? திசாநாதன் சுபனாகி இருந்தாலும் யோககாரகர்களுடன் சம்பந்தம் இல்லையேல் தங்கள் தங்கள் திசையின் சுய புக்தியில் அற்பயோகத்தையே தருவார் என்றதனாலேயாகும். எப்படியெனில்? யோககாரக சம்பந்தத்தினாலே மேற்படி திசாநாதன் தன் சுயபுக்தியில் பிரபல இராஜயோகபலனைக் கொடுப்பவனாகிறான். யோககாரகாள் சம்பந்தமில்லையேல் எவ்வித சுபக்கிரகமாயினும் தான சுபன் என்னும் வாசனைக்கேற்ப பூரண அசுபபலனைத் தாரான். அற்பமாகிய சுபபலனைக் கொடுப்பவனாகிறான. மற்றும் எவ்வித புக்தியில் தனது சுபாவமாகிய யோகத்தைத் தருவானெனில்? யோககாரகம் வாய்ந்தவர்களது புக்தியிலேயாகும். மற்றைய புக்திகள் அவரவர்கள் ஸ்தானபலத்திற்குத் தக்கபடியும், உத்தமது காரக குணத்திற்குத தக்கபடியாகவே பலன உண்டாகும்.

இவ்வாறு சோதிடப்பலனும், திசைப்பலனும் உரைப்பதே சாஸ்திர முறை. இதுவல்லாது சுக்கிரதிசை நடக்கிறதென்று சோதிடர்களிடம் சொல்லிவிட்டால் போதும். அவர்கள் கூறும் யோகவிசேஷங்களை தன் ஆயுள் முழுமையும் சொல்லிக்கொண்டே இருந்தாலும் முடியாது. கேது திசை நடக்கிறதெனக் கூறினாலோ சோதிடனுக்கு முகச்சுளிப்பே உண்டாகிறது. இவ்விதமான பொதுப்பலனால் உலக அனுபவம் கூறுவது எள்ளளவேனும நடவாது. ஏனெனில்? பாவாத்பாவ விசேஷங்களாலும் அவ்வவர்களுக்குரிய குணங்களாலும் பூரணசுபன என்று கூறிய கிரகமே பூரண பாபியாய் இருக்கும். பூரணபாவன் என்று நினைத்திருந்த கிரகமே பூரண சுபனாக இருககும. இது எவ்வாறெனின்? ஓர் திடசரீரம் அல்லது பருத்த சரீரத்தையுடைய ஒருவனைப் பார்த்து இவன் மிக்க பலவான் என்று கூறி

யதை யொக்கும். மேற்படி பருத்த சரீரமுடைய மனிதனே ஒரு துரும்பைத் தூக்கவும் சக்தியற்றவனும் இருக்கலாம். அல்லது தான குந்தியிருக்கும் இடத்தைவிட்டு எழுந்திருக்கவும் சக்தியற்றவனும் இருப்பான்.

இதைப்போன்ற ஓர் மெல்லிய அல்லது இளைத்த சரீரமுடைய ஒருவனைப் பார்த்து அவன் மிக்க பலயீனம் உடையவன் என்று நினைத்து அவனுடன் சண்டைக்கு செல்லுவது வழக்கம். ஆனல் மேற்படி இளைத்த சரீரமுடையவனே மிக்க வீரம் பொருந்தியவனக இருக்கலாம். ஆனதால் சண்டைக்குச் சென்றவர் கதி என்னவென்பதை யான் கூறவேண்டுவதில்லை. இவ்வாறன சக்தியை எவ்வாறு அறியலாமெனில்? மேற்படி இருவருடனும் கலந்து பலநாள் பழகினலன்றே அறியலாம். அதைப்போன்றே கிரகங்களுடைய சக்தியையும் பலநாள் பல காரணங்களையும் ஆராய்ந்தாலொழிய கிரக சக்தியை அறியமுடியாது. இதனலேயே கிரகபலம்-144 என்றும் இதனைச் செவ்வையாய் அறிந்தே பலனும், பலமும் கூறவேண்டுவதென முன்னேர் கூறிப்போயினர். 33

இதுவுமது

எழிலார் சுபர்வீட்டி லேந்திதரர் சேரா
தழியாவ ராக்க ளருந்தும்—கழியார்
பொசிப்பிற் கனுகூலம் பூண்டநல்ல யோக
தெசைப்பல னீவர் தெளிந்து.

(பொ-ரை) அழகிய சுபக்கிரகங்களுடைய வீட்டில் மற்றைக் கோளுடனேயும் சம்பந்தம் இல்லாதிருக்கிற அழியாத இராகு-கேதுக்கள் பெருமை பொருந்திய பொசிப்பில் இராஜயோகபலனைக் கொடுப்பார்கள் என்பதாம்.

(வி-ரை) இச்செய்யுளால் இராகு அல்லது கேது சுபகோட்களினது வீட்டிலிருந்து, வேறு எந்த கிரகங்களுடனும் சேராமல் தனித்திருப்பானேயாமானல அவர்கள் திசையில் அளவிறந்த யோகபலனைத் தருவார் என்றனர். இராகு கேதுக்களுக்கு மற்றைய கிரகங்களைப்போல் சுயக்ஷேத்திரம் இல்லை எனவும், அவர்கள் எந்த ராசியில் இருந்தார்களோ அந்த ராசியதிபனது பலத்தையே தருவார் என்றும் கூறியுள்ளனர். இராகுவுக்குரிய காரகம் என்னவெனில்? களவு, வெகுபேச்சு, நானுவித வேடத்தொழில், செப்பிடு வித்தை முதலான காரகங்களுக்கு இராகுவும், கபடத்தொழில் முதலியவைகளுக்குக் கேதுவே காரகன என குமாரசுவாமியம் கிரகசரித்திரப்படலம் 13-ஆம் கவியால் கூறியபடியும், இராகுவை யோககாரகன் என்றும் கூறிய படியால் இராகு சுபர் வீட்டிலிருககில் சுபபலனையும், பாபர் வீட்டிலிருக்கில் பாபபலனையுங் கொடுப்பார் எனது கூறவேண்டியதாயிற்று. இந்நூலாசிரியரும், இராகு கேது சுபர் வீட்டிலிருந்து மற்றும் வேறு கிரகசம்மந்தம் இலலாவிடில் யோகபலனைததருவார் என்றதால் வேறு கிரகம் சம்மந்தப்படுமாயின் மேற்படி திசைகள் பலன் தரமாட்டாதென்றே கூறவேண்டுவதாகிறது. இராகு எந்த வீட்டிலிருந்தாலும் அந்த க்ஷேத்திராதிபன் சுப பலததை அடைநதவனுயின அவன் திசையில் சுபபலனையும் பாப ஆதிபத்தியம் பெற்றவனுயின் பாப பலத்தையும் தவருமல் தருவார் என்று நிச்சயித்துக் கூறவேண்டியதாகிறது.

மற்றும் இராகு கேதுக்கள் கேந்திரங்களில் நிற்கில் சுபபலத்தைத் தருவார் என அநேக சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. இவை

திசைப்பலனுக்கேயன்றி பாவாதிபத்திய பலனுக்கல்லவென்றே கருதவேண்டியதாகிறது. இதனை முன்கூறிய செய்யுளிலும் விளக்கியுள்ளன. எப்படியெனில்?

இராகு கேது 1-4-ல் நின்றபலன்

"வாழுகின்ற நான்கொன்றில் பாம்புநிற்க
வழுத்துவோம் பலனெல்லாம் வகையாய்கேளு
சூழுகின்ற சுகங்குறையும் துயரம்மிஞ்சும்
சோதனையாய் பலகண்ட முண்டுபாரு
தாழுகின்ற சரீரமது இளைத்துக்காட்டும்
தனமதை தேடிமண்ணில் புதைத்துப்போவான்
பாழுடைய காரியத்தில் பிரியவானும்
பங்கமுளன் பலஜனங்கள் வெறுப்புளானே"

இராகு கேது 7-10-ல் நின்றபலன்

'தீங்கில்லா ஏழுபத்தில் பாம்புநின்றால்
திகைத்திடுவான் மனைவியினால் திண்ணமாகும்
பாங்கில்லான் களத்திரத்தால் பழிப்புமுள்ளான்
பலபேரை கூடுமந்த பவிஷுமுள்ளான்
வாங்கியதோர் தொழில்வகையும் நிலையில்லாதான்
வளமாக அடிமைசெய்யும் மன்னனுவான்
ஏங்கிவர்க்குப் பொருள்பலவும் உண்டானாலும்
இவனுக்குச் சுகமில்லை யென்றுவோதே'

என்றமையால் இராகு கேதுக்கள் கேந்திரங்களில் இருந்தாலும், அந்தந்த ஸ்தானாதிபர்களுக்கு துற்பலனும், அவனுடைய திசை நடக்கும் காலம் ஜாதகனுக்கு நற்பலனும் தருவான் என்றே கூறவேண்டும். அதிலும் தானிருந்த இடம் சுபன்வீடாகி வேறு கிரகங்களுடன் கூடி இருக்கின் அவன் திசையில் அளவிறந்த இராஜயோக பலனையே தருவார் என்றது மதிக்கத்தக்கதாகும். 34

இதுவுமது

அகத்தோர் தெசைக்கிறைவ ராகி லவரோ
டிகற்செறியா நல்லோர்பொ சிப்பில்—பகைப்பலனும்
சேருஞ் சுபர்பொசிப்பிற் செய்வா ரவர்க் கொத்தபலன்
காரகரிற் பாபபலன் காண்.

(பொ-ரை) பாபக்கிரகங்கள் திசாதிபதிகளானால் அவருடன் சம்பந்தமில்லாத சுபக்கிரகங்கள் புத்திகளிலே பாபபலனைக் கொடுப்பார்கள். சம்பந்தமுற்றிருக்கிற சுபக்கிரகங்களுடைய புத்திகளிலே திசாநாதனுக்கொத்த பலனும், புத்திநாதனுக்கொத்த பலனும் உண்டாம். யோககாரக கிரகங்களுடைய புத்திகளிலே மிகவும் பாபபலன்களைக் கொடுப்பார்கள் என்றறிக என்பதாம்.

(வி-ரை) திசாநாதன் பாபியானாலும் அவன் நிலையறிந்து சொல்வாயாக. இச்செய்யுளில் மூன்றுவித மார்க்கங்களைக் குறிப்பிட்டுள்ளனர். எப்படியெனில்?

1 பாபக்கிரகங்களுடைய திசை வந்தகாலத்தில் தன்னுடன் சேராத சுபர்களது புத்தியில் துற்பலன் உண்டாகும்.

2 பாபக்கிரகங்களது திசையில் தன்னுடன் கூடிய சுபக்கிரகங்களது புக்தியில் மேற்படி திசாநாதனுடைய ஆதிபத்தியப்படி ஏற்பட்ட பலனும் புக்திநாதனுக்குள்ள ஆதிபத்தியப்படிக்கு ஏற்பட்ட பலனும் கொடுப்பர்.

3 திசாநாதன் பாபியாகில் யோகத்தைத் தரத்தகுந்தவர்களது புக்தியில் கொடிய பாவபலனே கொடுப்பர் என்றனர். பாவர்களது திசையில் தன்னுடன் சேராத சுபர்கள் புக்தியில் நற்பலன் செய்யும் என்றதற்குக் காரணம் என்னவெனில்? பாவர்கள் பொதுவாய் பாவபலனையே செய்வர் என்றும், சுபர்கள் சுபபலனையே தருவார் என்றுங் கூறியுள்ளனர். ஆனதால் பாவபலனைச் செய்யவந்தவன் பாவியும், சுபபலனைச் செய்ய வருபவன் மேற்படி திசாநாதன் ஆக்கினைக்குக் கீழ்ப்பட்ட சுபனும் ஆனதால் பாபியின் ஆக்கினைக்குக் கீழ் சுபர்கள் எதையும் செய்யமுடியாது என்றே கூறவேண்டியதாயிற்று. பாவர்களது திசையில் மேற்படி பாபனாகிய திசாநாதனுடன் கூடிய சுபர்களது புக்தியில் சுபபலன் என்றமையால் திசாநாதன் பாபியாயினும் சம்மந்தப்பட்டவன் சுபனாதலால் மேற்படி பாபிக்குத் தன் குரூரகுணம் நீங்கி சுபத்துவமுண்டாகி தங்களுக்கு ஏற்பட்ட ஆதிபத்தியம் சுபபலனும் பாபக்ஷேத்திர ஆதிபத்தியம் பெறின் பாபபலனும் செய்வார் என்றும் கூறவேண்டுவதாயிற்று. இதற்கு ஆதிபத்தியபலமே முக்கியம் பாவர்களது திசையில் யோககாரகர்களது புக்தியில் பாவபலனே விளையும் என்றனர்.

பொதுவாய் சனி-இராகு-கேது என்னும் இம்மூவரையே பாவர்கள் என்று குறிப்பிடலாம். மேற்படி மூவர்களே யோகஸ்தானம் என்னும் 9-10-க்கு அதிபர்களாயினும் அல்லது 9-10-ல் நின்றாலும் அவர்களே திசாநாதனாகவரின் அவர்கள் திசையில் பாபபலன் செய்யும் என்று கூறமுடியாது. யோககாரகம் பெறாத பாவர்களது திசையில் யோககாரகாதிபத்தியம் பெற்ற பாவர்கள் புக்தியிலேயே பாவபலன் செய்யும் என்று கூறவியலும். ஏனெனில்? யோககாரகம் பெறாத பாவர்கள் பாபபலனைச் செய்ய முழுபலம் உடையவர்களாதலால் யோக காரகாதிபத்தியம் பெற்றவர்கள் சுபனாயினும், பாபனாயினும் அவர்களின் பலமானது மேற்படி பாபியின் திசைகாலங்களில் செல்லாது என்றேகூறவேண்டும். இதற்காகவே பண்டைய நூலாசிரியர்களும்,

"பாவர்கள் தன்திசையில் பாக்கியத்தோன் புத்தி
மேவாது தன் பலமும்" எனவும்,

"கொடியோர் திசையில் குலாவக்கேள்
கூறும் பதத்தோன் பாக்கியத்தோன்
வடிவாய் வரிலோ பலாபலன்கள்
வாரா தெனவே கூறிடுவாய்"

என்றுங் கூறியுள்ளனர். ஆனதால் இவ்வாறு பாவர்கள் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களது திசையில் யோககாரகனது புக்தியானது கட்டாயம் நற்பலனைச் செய்யாதெனத் தீர்மானிப்பதுடன நல்லபலனைச் செய்யாவிடினும், தீமையைச் செய்யாதவனு என்பதை தானிருந்த க்ஷேத்திரத்தாலும் பஞ்சபலத்தாலும் ஆராய்ந்து கூறுக. 35

மாரக திசாயோகபலன் வழுத்துகின்றது

மாரகன் றன்றெசையின் மன்னுஞ் சுபர்பொசிப்பில்
மாரகத்தைப் பண்ணுனிம் மானவர்க்கு—மாரகத்தைப்
பண்ணுவான் றன்றெசையில் பற்று வகத்தவர்கள்
துண்ணும் பொசிப்பிற் றுணிந்து.

(பொ-ரை) மனிதர்க்கு மாரகன் தன் திசையில் தன்னுடன் சம்பந்த முற்றிருக்கிற சுபக்கிரகங்களுடைய புக்திகளில் மாரகத்தைக் கொடான். தன்னுடன் சம்பந்தம் இல்லாமலிருக்கிற பாபக்கிரகங்களுடைய புக்தி களிலே துணிந்து கொல்வான் என்பதாம்.

(வி-ரை) மற்ற மாரகவிலக்கணம் அனைத்தும் முன் சொன்னபடியே கொள்கவென்க. இச்செய்யுளின் முக்கிய கருத்தாவது என்னவெனில்? திசாநாதன் மாரகாதியானாலும், மேற்படி திசையில் எந்த புக்தியில் கொல் வானெனில்? சுபர்களது புக்தியில் கட்டாயம் கொல்லான் எனவும், பாவர் களது புக்தியில் கட்டாயம் கொல்வான் எனவுங் கூறியுள்ளார். மாரகாதிபன் என்பதைத் தேர்ந்தெடுக்கும் விவரத்தை முன்கூறிய 21-22-23-ஆம் செய் யுளில் தெளிவாய் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. இங்கு மாரகன் திசையாயினும் பாவனது புக்தியிலேயே கொல்லும் என்றதால் எவர் பாவர் என்பதையே ஆராய்ந்துச் சொல்லவேண்டுவது அவசியம். இதிலும் இரண்டு வித சந்தேகம் உண்டாகலாம். எப்படியெனில்? தினசரிக் கோட்களில் பொதுவாய் சொல்லியபடி பாவனு? ஆதிபத்திய தோஷத்தால் பாவனு என்ற சந்தேகங் கொள்ளவேண்டிவரும்.

மற்றுமுள்ள பாவாத் பாவபலன்களுக்கு தோராயமாய் பாபன்-சுபன் என்றறிந்து பலன் கூறிவிட்டாலும், மாரக விஷயத்தைச் சோதிக்கையில் பலவித காரணத்தாலும் பாபனுனல் அன்றி மாரகம் செய்யான் என்பது திண்ணம். அவையாவன:—தினசரிக் கோட்களில் பாபியாயும், ஆதிபத்தி யத்தாலும், பஞ்சபலத்தாலும், சேர்க்கை பார்வை முதலியவற்ருலும், தான் இருக்கும் க்ஷேத்திரத்தாலும், பாவியாலுலன்றி கொல்வான் எனக் கூறுதற் கியலாது. இதற்கும் யோகபாவம் கூறுகைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. ஏனெனில்? மாரகம் செய்யும் கோட்களே யோகத்தைத் தரலாம் என்றதனுலேயாகும். இதற்குக் கீழ்க்கண்ட உதாரண சக்கரத்தை கவனிக்கவும்.

கு-சு சனி	புத கே	சூரி	
	இராசி		சந்
அங் லக்			
		ராகு	

மேற்கண்ட சக்கரத்திற்கு முதல் மாரகாதி சந்திரனும், இரண்டாம் மாரகாதி சனியுமாகும். முதல் மாரகாதியான சந்திரன் மாரகம் செய்யத் தகுந்த அளவு பலம்பெற்றிருக்கிருர். இதற்கு ஜனனகாலத்தில் எந்த திசை நடந்தாலும், சந்திரனது திசை எந்த வயதில் வந்தாலும், மேற்படி சந்திர னைத்தவிர வேறு கிரகங்கள் கொல்வதற்கு வழியில்லை. ஆனதால் சந்திரனே மாரகாதிபன் ஆயினும் மேற்படி திசையில் எந்த புக்தியில் மரணமாகும் என்பதை ஆராய்க.

பாவர்கள் எனக் கூறும் சனி-ராகு-கேதுக்களில் சனி ஜென்ம லக்கி னப்படி பாபஸ்தானமாகிய 3-ல் நின்ருலும், அவை சுபராசியும் சுபகிரகங்க ளுடனும் கூடியதோடு சந்திரனுக்கு பாக்கியம் பெற்ருன். இராகுவும்

சுபக்ஷேத்திரம் பெற்றதுடன் சுக்கிரனும் உச்சனுகினன். கேதுவோவெனில் தசமகேந்திரம் பெற்றுலும், தினசரிக் கோட்களில் பாபியும் தான் இருந்த இடமும் பாவி வீடாயும், பாவஸ்தானமாகிய 3·12-க்கு ஆதிபத்தியம்பெற்ற புதனுடன் கூடி இருபக்கமும் பாவர்களால் சூழ பெற்றதுடன் ஜென்ம லக்கினப்படி பாவஸ்தானம் என்று கூறும் க்ஷேத்திரீங்களில் 11-ஆம் இடமான பாவாதிபதி உச்சனுகி தனது சுயக்ஷேத்திரமும், கேதுநின்ற வீடுமாகியதை 4-ஆம் பார்வையால் நோக்குவதாலே மேற்படி திசையில்.கேது புக்தியே கொல்லும் என்று கூறலாம். சோதிடர்கள் இன்னும் பலவிதமாய் ஆராய்ந்து மாரகம் செய்பவன் இவனென நிலைத்துக் கூறுக. 36

சனி சுக்கிராள்பலன் கூறுகின்றது

பிருகுதிசை யிற்சனிதன் பேரா பொசிப்பில்
பெருகுசு சுபாபங்கள் பேணித்—தருகுவன்
அன்னவனு மப்படியே யாழ்ந்தறிவாய் நீர்சூழும்
இந்நிலத்தோர் யாவர்க்கு மென்று.

(பொ-ரை) கடல்சூழ்ந்த இப்பூமியிலுள்ளவர் யாவர்க்கும் சுக்கிரன் தன் திசையில் சனியின் பொசிப்பில் தனக்குண்டான பெரிதாகிய சுபாசுபபலன் களை விசேஷமாய்க் கொடுப்பன். அந்தச் சனியுந் தன் திசையில் சுக்கிர புத்தியில் தனக்குண்டான சுபாசுபபலன்களைக் கொடுப்பனென்று ஆலோசித் தறிவாய் என்பதாம்.

(வி-ரை) இங்கு திசைப்பலன் சொல்லுகையில் சனிக்கும் சுக்கிரனுக் கும் உள்ள பலாபலன்களைக் கூறியுள்ளார். எப்படியெனில்? சனிதிசையில் சுக்கிரனது புக்திகாலத்திலேயே மேற்படி சனிக்குடைய ஆதிபத்தியப்படி சுபனுயின் சுபபலத்தையும், பாபனுகின் பாபபலத்தையும் தருவர். இவ்வாறே சுக்கிரதிசையிலும் மேற்படி சுக்கிரன் சுபபலம் பெறில் சுபபலத்தையும், பாபபலம் பெறில் பாபபலத்தையும், சனி புக்தி நடக்கும்போது தருவார் என்பதேயாகும். இங்கு நாம் ஆராயவேண்டுவது என்னவெனில்? சனி பாபனுயினும் சுபனுயினும் தனது பாபபலத்தையோ சுபபலத்தையோ சுக்கிரன் புக்தியில்தான் கொடுப்பார் என்றதற்கும், சுக்கிரன் சுபனுயின் மேற்படி சுபபலத்தையும், பாபனுயின் மேற்படி பாவபலத்தையும், சனி புக்தி நடக்கும் காலத்திலேதான் கொடுப்பார் என்றதற்குக் காரணம் என்ன என்பதேயாகும். எதுப்ற்றி எனில்? சனி சுக்கிரர்களைக் குறித்து சோதிட நூற்களில் கூறப்பட்டதென்னவெனில்? சனி சுக்கிரர் என்னும் இருவரும் மற்றைய கோட்களைப்போல் எவ்வித ஆதிபத்தியமிருக்கினும், சமயோசித மாயும், தோராயமாயும், ஒருவித அளவுடனும், பற்பல காரணங்களால் உண் டாகும் பலம் - பலயீனம் முதலியவற்றுல் தாழ்ச்சி அடையத்தகுந்த கிரகங் கள் அல்லவென்றும், தத்தமது ஆதிபத்தியப்படியும், சுபபலத்தையோ, பாப பலத்தையோ கட்டாயமாய்‌ கொடுத்தே தீருவர் என்று சிறப்புபெறக் கூறிய தெனவேயாகும். ஆயினும், சனிதிசையில் சுக்கிரனையும், சுக்கிரதிசையில் சனியையுங் குறிப்பிடுவதற்குக் காரணம் என்னவெனில்? தமது இயற்கை பலங்களில் சனிக்குச் சமமாகிய பலம் சுக்கிரனுக்கும், சுக்கிரனுக்குச் சம மாகிய பலம் சனிக்குமே உண்டு. இதுவன்றி இவ்விருவரும் பரிபூரண சிநேகக் கோட்களால் ஆகும். இவ்விருவருக்குமுள்ள காரகபலங்கள் பின் வருமாறு, இவை, குமாரசுவாமியம் கிரகாதிபர் சரித்திரப்படலம் 13-ஆம் கவியில் உள்ளதாகும்.

சுக்கிரன் பட்டப்பெயர் கிரகம் பகற்காலமாதுரு, தாசி தாசாள் முதலானவர்கள், பசு-களத்திரம்-மித்திரம்-வாகனம்-பேரிகை முதலான வாத்தியம், சங்கீத நாட்டியம் முதலானவைகளிற் பிரியம், மாலை முதலானவை கொடி-டால் முதலானவை, நாவிதப்பிள்ளை நானாவித பரிமளாதி திரவியங்கள், கட்டில்-மெத்தை-சப்ரமஞ்சம் - வெண்சாமரை-போக போக்கியம் - அழகிய இளமை-மொச்சை-புளி-ஈயம்-தயிர்-பால்-அன்னம்-எப்போதும் விகட வினோதப்பரியாசம்-பிரசங்கப் பிரியம்-ஜனரக்ஷகம்-ஆசை-தேவப்பெண் லக்ஷ்மிதேவி என்பனவற்றிற்குக் காரகம் எனவும், சனிக்குரிய காரகம் என்னவெனில்? மரவேலை - களவு-தீர்க்காயுசு-ஆத்ம இம்சை - எருமை வர்க்கம் - சிறைப்படல்-நிசிகாலத்துப்பிதா - வெட்கமில்லாதவை - ரோகம் - வீண் வார்த்தை-துன்பம்-இரும்பு-ஆளடிமை-சாஸ்திரம் வாயாடித்தனம்-கடுகு-வயற்கலம் - நீலரத்தினம் முதலியவை, உளுந்து - அசுபகர்ப்பம்-சேவகா விருத்தி-எள்ளு - எண்ணை-முதலியவைகளுக்கெல்லாம் காரகனானதால் சனி சுக்கிரன் என்னும் இருவரும் சமமாகிய பலம் வாய்ந்தவர்கள் என்று கூறவேண்டியதாகிறது. மற்றும் நல்ல பலனைக் கொடுப்பதில் சுக்கிரதிசை என்றும், தீயபலனைக் கொடுப்பதில் சனிதிசை என்றும் கூறுவது சகஜம். ஆனாலும் இவ்விருவருள்ளும் சுபன் அசுபனாவதும், அசுபன் சுபனாவதும் சகஜம். ஆனதால், இவ்வாறான விஷயங்களை வெகுவாய் ஆராய்ந்து கூறுவது சோதிடர்களின் முக்கிய கடமையாகும். 37

கோட்களின் குணங்களைப் பகுத்தறிதல்

ஓரைதோறு முன்ன முரைத்தபடி கோட்குணங்கள்
சேர வரிசையதாய்ச் செப்பிடுவன்—காரகர்கட்
காம்புறுதோட் கண்டாற்சொக் கார்கூந்தற் காரிகையாய்
பாம்புறுநல் லல்குலினாய் பார்த்து.

(பொ-ரை) கருமை பொருந்திய கண்களையும் மூங்கில்போன்ற தோள்களையும் கற்கண்டிற்கு ஒப்பாகிய மொழிகளையும் மேகம்போன்ற அளகத்தையும் படம்போன்ற நிதம்பத்தையுமுடைய பெண்ணே! மேஷமுதல் பன்னிரண்டு பாவங்களும் முன்சொல்லியபடியே சூரியன் முதலான கிரகங்களுடைய சுபாசுப குணங்களை வரிசையாகத் தொகுத்துச் சொல்லுகிறேன் என்பதாம்.

(வி-ரை) இங்கு மேடமுதல் 12-இராசிகளுக்கும் உள்ள குணகுணத்தையும், சுபன்-பாபன்-மாரகன்-யோகன் என்னும் விஷயங்களையும் பின்வரும் செய்யுட்களால் கூறிவருவதை அறியலாம். அவையாவன:—12-இராசிகளுக்கும் நவகோட்கள் எந்தெந்த ராசியோனுக்கு சுபனாவர், எவர் பாபபலம் செய்யத்தக்கவர், எவர் மாரகம் செய்யத்தகுந்தவர் என்பதேயாகும். இதனைக் கீழ்வரும் செய்யுளால் தெரியலாமாயினும் இங்கு இராசிகள் உண்டாகிய காரணத்தைச் சிறிது விளக்குவாம். ஆகாயத்தில் நாம் குறித்த இடத்தை அறிந்துகொள்ளவே இராசிகள் உண்டாயின. அவையாவன:—ஆகாயத்தில் அந்தரமார்க்கமாய் பிரகாசிக்கும் கிரகங்கள் எந்த இடத்தில் சஞ்சரிக்கின்றன என்பதையும், இனிவருங் காலங்களில் எந்த இடத்தில் சஞ்சரிக்கும் என்பதைக் குறிப்பிடவே இராசிகள் என்றும், அந்தந்த இடங்களுக்குத் தகுந்தவாறு பெயர் ஏற்படுத்தப்பட்டது. அவையாவன:—பண்டையகாலத்து வானசாஸ்திரிகள் ஆகாயத்தின் விஸ்தீரணத்தை மொத்தமாய் 360-பாகையெனக் கொண்டாராயினும், அதற்குப் பன்னிரண்டுவித குணம் உண்டாயினமையால் அந்தந்த குணத்திற்குத் தகுந்த பெயரும் உண்டாயினவென்று

கூறலாம். இதற்கே இராசிகள் என்றும், அந்தந்த இராசிகளுக்குத் தகுந்த குணம் செய்கை முதலியவற்றைக் கொண்டும், ஆங்காங்கு சஞ்சரிக்கும் கிரகங்களைக்கொண்டும், உலகபலன்கூற இடமுண்டாயிற்று.

இவ்வாறு ஒவ்வோர் இராசிக்கும் ஒவ்வோர் குணமும், அதில் சஞ்சரிக்கத் தகுந்த கிரகங்களுக்கு ஒரு குணமும் உள்ளதனாலேயே அவ்வித கோட்கள் திருஷ்டி நம்மீது வீசும் காரணத்தால் நமக்கும் மற்றுமுள்ள ஜீவன் செடி கொடி முதலியவற்றிற்கும் பல்வேறு குணம் உண்டாவதாய் கூறவேண்டுவதாகிறது. ஆயினும் இராசிக்குள்ள குணமும், கிரகங்களுக்குள்ள குணமும் வெவ்வேறாகும். சோதிடர்களின் கடமை என்னவெனில்? இராசிக்குடைய குணத்தை முதலில் அறிந்துகொண்டு அந்த இராசியில் இவ்விதமான குணம் வாய்ந்த கிரகம் சேருமேயானால், மேற்படி இராசியின் குணம் என்ன ஆகும். கிரகத்தின் குணம் என்னவாகும் என்பதைக்கொண்டே உலக பலத்தையும் உலகத்தில் வாழத்தகுந்த மாந்தர்களது இன்பதுன்பங்களையுங் கூறுதற்கியலும். இராசியின் குணத்தைக்கொண்டோ அல்லது அதில் வாழும் கிரகத்தினது குணத்தைக்கொண்டோ பலன் சொல்லி விடுவலது கூடாது. முதன் முதலாய்,

1 ஜனனராசி எவை? அதற்குள்ள குணம் என்ன?

2 ஜனனராசிக்கு உடையவரது குணம் என்ன?

3 ஜனனராசி அதிபதி எந்த ராசியில் இருக்கிறார்?

4 ஜனன ராசியை யார் பார்த்தவர்?

5 ஜனனராசியில் எவர் சேர்ந்தவர்கள்?

6 ஜனனாதிபதி எக்தெந்த காரணத்தால் பலமடைந்தான்? (அல்லது) பலமிழந்தான்? என்பதையும் ஆராய்ந்தே லக்கினபலத்தையும் மற்றுமுள்ளவர்களது பலத்தையும் ஆராயவேண்டுவது அவசியம். இவ்விஷயங்களைக் கீழ் வருவனவற்றால் அறிக. 38

மேடவிராசிபலன் விளம்புகின்றது

மந்தனொடு மால்சுங்கன் மாபாவி நல்லவர்கள்
கொந்தலர்பூங் கோதாய் குருவிரவி—சந்ததமும்
தீயபலன் காரியொடு தேவபிரான் சேர்ந்தக்கால்
ஈயுமவ னோடொற்ற தே.

மாரகத்தா னப்பதியா மன்னுகின்ற பார்க்கவனும்
மாரகத்தைச் செய்யானெம் மானவர்க்கும்—மாரகத்தைச்
செய்வார் சனிமுன்னோர் செவ்வியமே டம்பிறந்தோர்க்
கிவ்வா றுரைப்பீ ரிருந்து.

(பொ-ரை) பூங்கொத்துகள் பொருந்திய அழகிய மாலையினையொத்த சாயலையுடையவளே! மேடராசியில் பிறந்தோர்க்கு சனி-புதன்-சுக்கிரன் இவர்கள் பாபிகள், குரு-சூரியன் இவர்கள் நல்லவர்கள், சனி சம்பந்த முற்றால், குரு எப்போதும் அவனுக்கொத்த பாபபலனைக் கொடுப்பன். இதற்கு உதாரணம்:—தன்ம கன்பப்பதிக டாமெட்டுடன்பதிறென் றின்றலைவனவது என்பதாம்-மாரகஸ்தானாதிபனாகிய சுக்கிரன் கொல்லான்-சனி முதலானவர்கள் கொல்வரென்று கூறுவாய் என்பதாம்.

(வி-ரை) இச்செய்யுளில் 'மந்தனொடு மால்சுங்கன் மாபாவி' என்றதால், சனி-புதன்-வெள்ளி என்னும் மூவரும் மகா பாவிகள் என்று கூறவேண்டிய தாயிற்று. ஏன் பாவிகள் என்றெனில்? சனிக்கு 11-ஆம் ஆதிபத்தியம் வந்த காரணத்தாலும், சுக்கிரனுக்கு இரண்டாம் ஆதிபத்தியமும், ஏழாம் ஆதிபத்தியம் வந்த தோஷத்தாலும், புதனுக்கு 3-6-ஆம் வீட்டாதிபத்தியத்தின் தோஷத்தாலும், இம்மூவரையும் பாவிகள் என்று கூறினர். சிற்சில நூற்களில் பாவர்களுக்கு பாவாதிபத்தியமாகிய 3-6-8-11-ஆம் ஆதிபத்தியம் வரில் அவர்கள் பாவாதிபர்களாதார் எனவும் கூறியுள்ளதை அறியலாம். சுக்கிரனுக்கோவெனில் 7-ஆம் ஆதிபத்தியமாகிய கேந்திர தோஷத்தால் மகா கொடியவனுகிறுன். ஆதலாலும், 2-ஆம் ஆதிபத்திய தோஷத்தாலும், இரண்டுக்கு சஷ்டமாதிபத்தியம் வந்தமையாலும், சுக்கிரனையும் பாவர் என்று கூறியுள்ளார். புதனுக்குரிய ஆதிபத்தியமோவெனில், இரண்டுமே மகா கொடியதாகிறது. மூன்றும் இடமென்பதைக் காட்டிலும் 6-ஆம் ஆதிபத்தியம் மகா கொடியதாகும்.

குரு-சூரியன் என்னும் இருவரையும் நல்லவர்கள் எனவும், இவ்விருவரும் ஒன்றுகூடில் பிரபல இராஜயோகம் உண்டாகும் என்றனர். இவையே பிரபலயோகம் என்பதாம். சூரியனுக்கு 5-ஆம் ஆதிபத்தியம் வந்த பலத்தாலும், குருவுக்கு 9-ஆம் ஆதிபத்திய பலத்தாலும, இவ்விருவரையும் யோகர் என்று குறிப்பிட்டனர். மற்றும் குருவுடன் சனி சம்மந்தப்படில் இராஜயோகம் என்பது தர்ம கர்ம யோகமாகும். குரு தனித்திருக்கின் தனக்குள்ள பொதுப்பலனைக் கட்டாயம் தருவான். சுக்கிரன் மாரகன் என்றது யாது காரணம்பற்றியெனில்? முதல் மாரகஸ்தானமான 7-ஆம் ஆதிபத்தியமும், இரண்டாம் மாரகாதிபத்தியமாகிய 2-ஆம் க்ஷேத்திராதிபத்தியமும் வந்த காரணத்தால் சுக்கிரனே கொல்வான் என்றனர். இதுவரையில் கூறிய மாரகயோக சுபர்களை ஜாதக அலங்கார நூலுடையார் கூறியது என்னவெனில்?

"தானுறு மேடத்தோர்க்குச் சனிபுகர் புந்திபாவர்
வானுறும் பரிதிதேவ வான்குரு சுபனும்என்றே
கானுறு மிவர்கள்கூட கடினமாம் பலன்களற்பம்
தேனுறுஞ் சுக்கிரனறன் திசையிற்றுன் மாரகங்கள்"

என்றதால் மேற்கூறிய விஷயங்களை ஆமோதித்தவராயினும், குரு சனியும் கூடில பிரபல இராஜயோகம் உண்டென்று கூறினரேயன்றி, கோணுதிபதிகள் இருவரும ஒன்றுகூடில் என்ன செய்வார் என்றதை விளக்கவில்லையாதலால் மேறபடி செய்யுளில் குரு சூரியன் என்னும் இருவரும் ஒன்றுகூடில் யோகத்தைத் தரமாட்டார் என்றது விரும்பத தக்கதாகும். மற்றும் சந்திரகாவியம் 48-வது செய்யுளின்படி,

"மேன்மேட லக்கினத்தை மேவிப் பிறக்கிலிந்து
பண்புகர்மாலும் சனியும் பாவி"

என்றதால், சந்திரன்-சுக்கிரன்-புதன் இம்மூவரும் பாவி என்றேற்படுகிறது. இந்நூலாசிரியர் சனியை பாவன் என்று குறிப்பிடவில்லை. இதுவன்றி குரு-செவ்வாய் இவ்விருவரையும் நல்லவர் எனவும் கூறினர். குருவும் சனியும கூடில் யோகங்கொடுப்பார் என்பது எல்லோரும் விரும்பத் தக்கதாகும். மற்றும் இந்நூலாசிரியர் சுக்கிரன கொல்வான் என்றனர். சந்திரகாவிய நூலாசிரியரோ சுக்கிரன் கொல்லான் என்றும், சனி-புதனே கொல்வான் என்பது

மதபேதமேயாகும். அனேகமாய் சாதக அலங்கார நூலாரும் சுக்கிரனே கொல்வான் என்பதைச் சம்மதித்துள்ளனர்.

39-40

இடபவிராசிபலன் இயம்புகின்றது

குருவெள்ளி யிந்துகொண் டாடாக் கொடியர்
மருவுசுபக் கோணமந்த னென்றாம்—திருவுருமா
யோகங்கொ டுப்பான் சனியொருவ னுமெனவே
ஆகுமெனப் பாவா யறி.

குருமுதலாய்க் கூறுகின்ற கோட்களே கொல்லும்
மருவினைய ராராயி னென்றுந்—தெரியும்
படியிடப வோரையினிற் பார்மிசையிற் றோன்றும்
முடியுடையோர் கட்கு மொழி.

(பொ-ரை) பிரபை போன்றவளே! குருவும் வெள்ளியும் சந்திரனும் பாபிகள், சனியும் இரவியும் நல்லவர்கள், சனி ஒருவனே சிறப்புப்பொருந்தி மேலான இராஜயோகங் கொடுப்போன், குரு முதலானவர் கொல்வரென இப்பலனை ஆராய்ந்து பார்க்கும்போது பூமியினகண் இடப விராசியில் பிறக்கின்ற பலத்தை கிரீடத்தையுடைய அரசர்க்குத் தெரியும்படி சொல்லுவாய் என்பதாம்.

(வி-ரை) குரு-சுக்கிரன்-சந்திரன்-இவர்களுடன் சம்பந்தப்பட்ட கிரகங்களை ஆராய்ந்து அவர்கள் நிலைகள் அறிந்து சொல்லத்தக்கதென்க. இடப ராசியில் பிறந்தவர்க்கு குரு - சந்திரன் - சுக்கிரன் இம்மூவரையும் பாவர் எனவும், சனி சூரியன் நல்லவர் எனவும், குருவே மாரகம் செய்வாரெனவும், சனி ஒருவரே மாரகம் செய்யத்தக்கவரெனவும் கூறியுள்ளனர். இந்நூல் ஆசிரியரது கருத்து என்னவெனில்? குருவுக்கு 8-11-ஆம் ஆதிபததியம் வந்தமையாலும், சந்திரனுக்கு 3-ஆம் ஆதிபத்தியம் வந்தமையாலும், சுக்கிரனுக்கு 6-ஆம் ஆதிபத்தியம் வந்தமையாலும் பாவர் எனவும், சனிக்குரிய 2-ஆதிபத்தியமும், 9-10-ஆனதால் தரும கருமாதிபதி யோகம் எனவும், குரு ஒருவனே கொல்வார் என்றமையால் 8-11-ஆம் ஆதிபத்தியம் குருவுக்கு வந்தமையாலும், சுபகோட்களுக்கு 3-6-8-11 என்னும் நான்கும் பூரண பாபத்துவத்தையே விளைவிக்கும் என்னும் சாஸ்திரம் இருப்பதாலும் கூறினார் எனக்கொள்க. இந்நூலாசிரியரின் கொள்கை இவ்வாறிருகக சாதக அலங்கார நூலார் கொள்கை என்னவெனில்,

"களமேரிஷபஞ் சென்மித்தோர் கரசன்புகர் சூரியன்மூவர்
உளவாம்பாவி கதிர்சனியு முயர்ந்தசுபனும் யோகங்கள்
வளமார் புகருந்தான் குடும்பமாரகத் தோனும்பாவி
புளகார் குதலையுறுங் கொங்கைபூவைக் குரலாரும்மானே"

என்றமையால் குரு-சுக்கிரன்-சூரியன்-பாவர் எனவும், சூரியனும் சனியும் சுபர்கள் எனவும், சுக்கிரன் மாரகாதிபன் எனவும், கூறியதை அறியலாம். இந்நூலாசிரியர் கொள்கையின்படி குரு கொல்பவரா? சுக்கிரன் கொல்பவரா? என்பதை ஆராயுமிடத்து, ஜென்மலக்கினாதிபதியே 6-ஆம் அதிபதியாக வரின் அவர் கொல்லார் ஏனெனில்? அவர் பாவன் அல்லவெனச் சிலரும் ரிடப லக்கினத்தோர்க்கு அட்டமாதி குருவானதால் லக்கினாதிக்குப் பகையான காரணத்தையொட்டி குருவே மாரகம் செய்வாரெனக் குறிப்பிட்டதாகும். இதுவன்றி யோககாரகர்களைக் கூறுமிடத்து எல்லோரைவிட

சனியே யோகத்தைத் தரத்தகுந்தவர் என்பதை இவ்விரு நூலாசிரியரும் சம்மதித்துள்ளனர். மற்றும் சந்திர காவியம் 50 - 51-ஆம் செய்யுளின் விவரம்:—

"தன்னிடப லக்கினத்தைச் சாரச் சனித்தவர்க்குப்
பன்னுமதி பொன்புகரும் பாவியாம்—மன்னிரவி
காரியுந்தா னல்லவர்கள் காண்சனியன் மாத்திரந்தான்
சாரரசர் யோகம் தரும்"

"தருகுருவும் செவ்வாயும் சார்ந்தமதியும்
வருமாரக ஞகவாட்டி—வெருவியிடக்
கொன்றிடுவர் புந்திகொல்வான் கூறுதிசைதன்னிலுந்தான்
நன்றறிவாய் சொன்னே நயந்து"

என்றமையால், ரிடப லக்கினத்தோர்க்கு சந்திரன்-சுக்கிரன்-குரு பாவர்கள் எனவும், சூரியன்-சனி என்னும் இருவரும நல்லவர்கள் எனவும், சனி ஒருவனே ராஜயோகம் கொடுக்கததகுந்தவன் எனவும், குரு - செவ்வாய்-சநதிரன் எனனும் மூவரும் மாரகாதிபன. எனினும புதன கொல்லான என்றனர். புதன கொல்லான் என்றது யாதுபற்றி எனின்? முதல் மாரகாதி செவ்வாயும், இரண்டாம் மாரகாதி புதனும் ஆயினும் புதனுக்கு 5-ஆம் கோணாதிபததியம் வந்தமையால் புதன் கொல்லான என்றும, முதல் மாரகாதிபததியமாகிய 7-ஆம் ஆதிபததியம் செவ்வாய்க்கு வநதமையாலும், குருவுக்கு 8-11-ஆம் ஆதிபதத்யம வந்தமையாலும், 3-ஆம் ஆதிபத்தியம சநதிரனுக்கு வந்தமையாலும், இம்மூவரில் ஒருவரே கொல்வார் எனபது கருத்து. இங்கு கூறிய மூவர்களின கொள்கையில எவை சிரேட்டம் எனின மாரகாதிகள் எனக கூறிய மூவரில் எவர் மாரகாதிபததியம செய்வதில் ஜெனமலககினப்படி பலம் பெறறிருக்கின்றனரோ அவரே செய்வார் எனறே தீமானம கூறவேண்டியதாகிறது. மற்றும் ஸ்திர லக்கினமாகிய ரிடபம-சிங்கம்-விருச்சிகம்-கும்பம் என்னும் மூன்று ராசிகளுக்கும் 3-8-க்கு அதிபர்களே மாரகாதிபர்களெனக் கூறுவது சில நூலாசிரியரின கொள்கையாகும்.

ரிடப லக்கினத்தோர்க்கு 3-ஆம் வீட்டோன் சந்திரனும், 8-ஆம் வீட்டோன குருவும் ஆகும். இலககினாதியான சுக்கிரனுக்கு சந்திரன பகைவன் என்பது சாஸ்திரக் கருத்து. மற்றும அஷ்டமாதியான குருவுக்குச் சுக்கிரன பகைவன் என்பதை முன்பே கூறியுள்ளேன. அதுபற்றியே சந்திரன்-குரு என்னும் இருவரையும் மாரகர் என்று குறிப்பிட்டனர்போலும். ஆனதால், மாரகாதிபர்கள் எனக் குறிப்பிட்ட கோட்களை மாரகம் செய்யும் பலததுடன் இருக்கின்றனரா? இல்லையா? என்பதை அறிந்து மாரகம செய்யும் பலத்தில் உள்ளவர்கள் எவர் எனபதை அறிந்து நிலைகூறுவது நலம. இதுவன்றி ரிடபலக்கினத்தோர்க்கு லக்கினாதிபதி சுக்கிரன் ஆனதுபற்றியும, மேற்படி சுக்கிரனுக்கு "நாடிய சுக்கிரர்க கிரவி நவிற் றிங்கள் பகையே" எனறபடி, சுக்கிரனுக்கு சூரியனும் சந்திரனும பகைவன் எனக் குறிப்பிட்ட காரணததாலும் சநதிரனே மாரகாதிபன எனவும் கூறினர் எனவுங் கூறவேண்டியதாகிறது.

மற்றும் ரிடபலக்கினத்தோர்க்கு லக்கினாதிபதி சுக்கிரன் ஆனதுபற்றி, மேற்படி சுக்கிரனுக்குப் பகைவர்களாகிய சூரியன-சநதிரன எனனும் இருவரும் மேறபடி சுககிரனுக்கு சூரியன்-சந்திரன் என்னும் இருவரும் எதிர்மாறான பலனையே செய்வார் என்றும் கூறலாம். எநத லக்கினததிற்கும் 9-ஆம் வீட்டோனும், 10-ஆம் வீட்டோனும பூரண யோகாதிபதி எனறபடி

9-10-ஆம் ஆதிபத்தியம் சனிக்கு வந்தமையால் சனி யோககாரகனும் புதன் 5-ஆம் ஆதிபத்தியம் பெற்றவனாயினும், சனியைப்போன்ற பூரண இராஜ யோகம் கொடுக்கத் தகுந்தவரல்ல என்பதும், எல்லா லக்கினத்திலும், ரிடபலக்கினத்தோர் பூரண இராஜயோகம் கொடுப்பார் எனவும் கூறினர். யாதுபற்றி எனின்? யோகாதிபத்தியங்களில் மிகச் சிறந்த க்ஷேத்திரம் 9-10-ஆதலாலும், இவ்விரண்டு க்ஷேத்திராதிபத்தியமும், சனிக்கு பூரண ஆதிபத்தியம் வந்தமையாலும் கூறினர் என்றே கூறவேண்டுவதாகிறது. மற்றுமுள்ள ரகஸ்யங்களைக் கீழ்வருவனவற்றால் காண்க. 41-42

மிதுனவிராசிபலன் கூறுகின்றது

சேய்சிவ னேடிரவி சேராக் கடுங்கொடியர்
ஆயுபுக ரோனொருவ னனகோள்—சேயிழையாய்
மந்தனொடு மந்திரியும் வண்மையுடன் கூடுமெனல்
நந்துமே டப்படியே நாடு.

(பொ-ரை) அழகுபொருந்திய பெண்பாவாய்! மிதுனராசியிற் பிறந்தவர்களுக்கு குஜன - குரு - சூரியன் என்னும் மூவரும் கொடிய பாவிகளாவர். சுக்கிரன் ஒருவனே சுபன். குருவும் சனியும் ஒன்றுகூடில், மேடராசியிற் பிறந்தோர்க்குக் கூறியவண்ணமாய் தமக்குத் தக்க காரகபலத்தைத் தவறாமல் தருவார் எனக் கூறுவாயாக என்பதாம்.

(வி-ரை) குரு - சேய் - இரவி என்னும் மூவரும் பாவர்கள் என்றனர். குருவுக்கு 7-10-ஆகிய கேந்திரம் வந்தமையால் சுபகோட்கள் கேந்திராதிபதிகளாகில் பாபியாவர் என்று கூறிய சாத்திர விதியைக்கொண்டு கூறியதாகும். செவ்வாய் என்னும் குஜனுக்கு 6-11-என்னும் கொடிய ஆதிபத்தியம் வந்தமையாலும், இவ்விருவரையும் மகா கொடியவர் என்று கூறினர். இதுவுமன்றி, சுக்கிரனையே யோககாரகன் என்றனர். என்னெனில்? கோணத்தில் ஒன்றான 5-ஆம் ராசியாதிபத்தியம் சுக்கிரனுக்கு வந்த காரணத்தாலும், லக்கினாதிபதியான புதனுக்கும் சுக்கிரனுக்கும் நட்பு ஆனதால் இராஜயோகம் தருபவன் என்றனர். மற்றும் மேடலக்கினத்திற்குக் கூறியபடி, குரு-சனி ஒன்றுகூடில் தத்தமது காரகத்திற் கேற்றபலனைக் தருவார் என்றனர். மேடலக்கினத்திற்கு 9-ஆம் வீட்டோன் குருவும், 10 ஆம் வீட்டோன் சனியும், ஆனதுபற்றியும், மிதுனலக்கினத்திற்கு 9-ஆம் வீட்டோன் சனியும், 10-ஆம் வீட்டோன் குருவும ஆனதுபற்றியும், இவ்விரு லக்கினங்களுக்கும் தருமகருமாதிபதி ஒன்றாயவரும காரணத்தாலும், மேடலக்கினத்திற்குக் கூறியபடி என்று உவமையாய்க் கூறியுள்ளனர். இவை இந்நூலாசிரியராகிய தாண்டவபூபதியாரின் கொள்கை. சாதக அலங்கார நூலுடையாரும் இவர் கூறிய சில விஷயங்களை ஆமோதித்தும் சில விஷயங்களை மறுத்தும கூறியுள்ளனர். எப்படியெனில்?

"மானேமிதுன லக்கினத்திற் காசன்செவ்வாய் கதிர்பாவி
தானேசுக்கிரன் சுபனுக்கு மதியுஞ்சனியு மற்பபலன்"

என்று கூறியதால், இந்நூலாசிரியர் கொள்கையின்படி சூரியன்-செவ்வாய்-குரு என்னும் மூவரும பாவி என்பதையும், சுக்கிரன் ஒருவனே யோக காரகன் என்றும் கூறியதை ஆமோதித்தார். குரு - சனி கூடில் தமது காரகப்படி பலனைத தருவார் என்பதை இந்நூலாசிரியர் கூறவில்லை. இதற்குக் காரணம் என்னவெனில்? பாக்கியாதிபத்தியம் பெற்ற சனி அஷ்டமாதிபத்தியம் பெற்றதாலும், குருவுக்கு இரண்டுவித கேந்திர தோஷத்தால்

பீடிக்கப்பட்டு கொடிய பாவியாகிய காரணத்தால் இவ்விருவரது விஷயமும் இங்கு கூறுமைக்குக் காரணம் எனக் கருதவேண்டியதாயிற்று.

இதனாலேயே சந்திரன் - சனி என்னும் இருவரும் அற்பபலனைத் தருவார் எனக் கூறியுள்ளார். அவையாவன:—பாக்கியாதிபதியே அஷ்டமாதியாய் வந்த காரணத்தால் சனியும், லக்கினாதியான புதனுக்குக் கொடிய பகைவன் சந்திரனானதாலும், மேற்படி சந்திரன் 2-ஆம் ஆதிபத்தியம் பெற்ற காரணத்தாலும் இவ்விருவரும் பூரணயோக பலனுக்கு ஆதிபத்தியம் உள்ளவர்கள் அல்லவென்றும், அற்பபலனையே கொடுக்கத் தக்கவர் என்றும் கூற வேண்டியதாயிற்று. இவ்வாறு ஒருவர்க்கொருவர் சிற்சில விஷயங்களை முரண்பாடாய்க் கூறியது அவ்வவர்களது மனோ ஆராய்ச்சியும் மதவேற்றுமையாகும். இன்னும் இதற்குள்ள சந்தேகங்களைப் பின்வரும் செய்யுளால் அறிக. 43

இதுவுமது

அசமர்த்த னிந்துகொல்கைக் காரகன் முதலாய்
அசமர்த்த ரல்லநிதா ராயில்—இசைபுற்
றிலங்கு மதிமுகத்தா யென்றறிமூன் றுகும்
நலங்கொளிரா சிக்கு நவில்.

(பொ-ரை) செவ்விதாகிய ஆபரணங்களையுடைய பெண்பாவாய்! துதியாதிபத்திய தோஷத்தையடைந்தவன் சந்திரனாயினும் மேற்படி சந்திரன் கொல்லான். மற்றுமெவர்கள் கொல்வாரெனில் (முன் 43-ஆம் செய்யுளிற் கூறியபடி) பாவர்கள் எனக் கூறப்பட்ட சூரியன்-செவ்வாய் குரு என்பவரே கொல்வாரென்று மிதுன லக்கினத்தோர்க்குக் கூறுவாயாக என்பதாம்.

(வி-ரை) குருவும் சனியும் தரும கருமாதிபதிகளாகையால் யோககாரகாள் வலியறிந்து சொல்கவெனக் கொள்க. இச்செய்யுளின் முக்கிய கருத்தாவது என்னவெனில்:—ஒவ்வொருவருக்கும் உண்டாகும் மாரகாதிபர்கள் இருவர். அதில் முதல் மாரகாதிபதி 7-ஆம் வீட்டோனும், இரண்டாம் மாரகாதி துதியாதியும் ஆகும். ஆனாலும் இந்நூலாசிரியர் கொள்கை முதல் மாரகாதிபதி கொல்லான் என்றும், இரண்டாம் மாரகாதிபதியே கொல்வான் என்று முன்கூறிய 22-ஆம் செய்யுளில் விளக்கியுள்ளார். ஆனதால் முதல் மாரகாதியைக்காட்டிலும் இரண்டாம்மாரகாதிபதி கொல்லுதற்கு பலமுள்ளவனாயினும்,மிதுன லக்கினத்தில் பிறந்தவர்களை சந்திரன் கொல்லான் என்பதே கருத்தாகும். இவை யாதுபற்றி எனின்? புதனுக்குச் சந்திரன் பகைவனாயினும், சந்திரனுக்கு புதன் பகைவன் அல்லன் என்பதுபற்றியே யாகும். மற்றும் எவர்தான் கொல்வாரெனில்? பாவர்கள் எனக் கூறிய சூரியன்-குஜன்-குரு என்னும் மூவரில் ஒருவரே கொல்வார் எனக் கூறவேண்டியதாயிற்று மற்றும் மிதுன ராசியானது உபயராசியானது பற்றியும், உபயராசிக்கு 7-11-ஆம் அதிபர்களே மாரகாதியெனக் கூறுதலால் மிதுனத்தோர்க்கு 7-ஆம் வீட்டோன் குருவும், 11-ஆம் வீட்டோன் செவ்வாயும் ஆனதால் இவ்விருவரில் எவர் பலம் பெற்றனரோ அவரே கொல்வார் எனவுங் கூறுவாராயினர். இந்நூலாசிரியர் கொள்கை இவ்வாறு இருக்க,

"வானோர்பாவர் திசையதனில் மன்னுமாரகம் என்னே
தேனேயனைய மதுரமொழிச் செவ்வாய்முருவல் சிறுநுதலாய்"

என்றதால், இந்நூலாசிரியரும் மிதுனத்தோர்க்கு பாவர்கள் என எவரைக் குறிப்பிட்டனரோ அவர்கள் திசையிலே மாரகம் செய்வார் எனப் பொது

வாய்க் கூறியுள்ளனரே யன்றி, பாவர்கள் மூவருள் எவர் செய்வார் என்பதை விரித்துக் கூறவில்லை. சந்திரகாவியம் 52-53-ஆம் செய்யுளின் விவரம்:—

"சொல்மிதுன லக்கினத்தில் தோய்ந்துப் பிறந்திடவே
புல்சேயும் பொன்இரவி பொல்லாதார்—நல்லவெள்ளி
தாளொருவன் நல்லன்சனி குருவுங் கூடியிடில்
மேனரச யோகமில்லை மீது"

"மீதுமதி கொல்லான்மீண்டு செவ்வா யாதித்தன்
வாதுகுரு மூவர்களும் மாரகமாய்—சேதமுறக்
கொல்லுவர்க ளென்றே குலவுகடல் சூழுலகில்
எல்லவருஞ் சொல்லா ரிசைந்து"

என்று கூறினமையால் இந்நூலாசிரியருடைய கொள்கையையும், சாதக அலங்கார நூலுடையார் கொள்கைக்கும், முரண்பாடின்றிச் சம்மதித்துக் கூறினரேயன்றி மாரகம் செய்யத்தகுந்தவர் எவர் என்பதை குறிப்பிடாது மூவர்களையுமே குறிப்பிட்டனர். ஆதலால் உபயலக்கினத்திற்கு 7-11-ஆம் ஆதிபர்கள் மாரகர் என்றபடியும் இந்நூலாசிரியர் கூறிய கொள்கையின் படியும், கூறிய குரு-செவ்வாய்-இரவி என்னும் மூவரில் சூரியனை விட்டு குரு செவ்வாய் இருவருள் முந்திய திசாநாதர் எவரோ அவரும், எவர் மாரகம் செய்யும் விதத்தால் பூரணபலமுள்ளவர்கள் ஆகிறார்களோ அவர்களுமே மாரகம் செய்யத்தகுந்தவர் எனக் குறிப்பிடவேண்டியதாகிறது. இவ்வாறு மாரகம் செய்பவர்களை இரண்டுபேராய்க் குறிப்பிட்டகாலத்து இவ்விருவரில் எவர் முந்தியவர், எவர் பிந்தியவர் என்பதை ஆராய்ந்தும் பலாபலங்களை ஆராய்ந்துக் கூறுவதே நலமாகும். 44

கடகவிராசிபலன் கூறுகின்றது

சுங்கனிந்து மைந்தனிவர் சூழாக் கொடுங்கோட்கள்
மங்கலன்மா வேந்தனிவர் மன்னுகின்ற—துங்கமுள்ள
நல்லோர்க ணல்லயோ கக்கிறைவ னுகுமவன்
சொல்லூறிற் பூசிதனுய்ச் சொல்.

(பொ-ரை) கடகவிராசியில் பிறந்தவர்களுக்குச் சுங்கனுகிய சுக்கிரனும், இந்துவாகிய சந்திரனும், மைந்தனுகிய சனி என்னும் மூவரும் கொடிய பாவிகளாவர். மங்கலனுகிய செவ்வாயும், வேந்தனுகிய குரு என்னும் இருவரும் யோககாரகர்கள். ஆயினும் செவ்வாய் ஒருவனே பிரபல யோக காரகராகும் என்பதாம்.

(வி-ரை) இச்செய்யுளால் கடகலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு புதன் சனி-சுக்கிரன் பாவர்கள் என்றனர். யாதுபற்றியெனின்? கடகலக்கினத்திற்கு கொடிய ஸ்தானங்களில் ஒன்ருன 11-ஆம் ஆதிபத்தியம் சுக்கிரனுக்கு வந்தமையால் சுக்கிரனைப் பாபி எனவும், மைந்தன் என்னும் சனி எல்லோர்க்கும் ஆயுள்காரகனும், கடகத்தோர்க்கு 8-ஆம் ஆதிபத்தியுமானதால் சனியையும் பாவர்கள் என்றனர். மற்றும் புதனைப் பாவன் என்றதற்குக் காரணம் என்னவெனில்? கடகலக்கினப்படி புதனுக்கு 3-12-ஆம் ஆதிபத்தியம் வந்தமையால் கூறப்பட்டதென்க. இதனை மற்றுமுள்ள நூலாசிரியர்களும் சம்மதித்துள்ளனர். அதனைப் பின்வருவனவற்றுல் அறிக.

கடகத்தோர்க்கு செவ்வாய் - குரு என்னும் இருவரையும் யோகர் எனவும், அதில் செவ்வாய் ஒருவனே பிரபலயோகம் தருவார் என்றும் கூறியுள்ளார். எப்படியெனில்? கடகலக்கினப்படி குருவுக்கு முதல் ஆதிபத்தியம் 6-ம், இரண்டாம் ஆதிபத்தியம் 9-ம் வந்தமையாலும், மேற்படி குருவை பூரண இராஜயோகம் தரத்தகுந்தவரெனக் குறிப்பிட முடியவில்லை. செவ்வாயோவெனில் கோணங்களில் ஒன்றான 5-ம் ஆதிபத்தியமும், கேந்திரங்களில் முக்கியமான 10-ஆம் இடத்திற்கு அதிபதியாய் வந்த காரணத்தால் செவ்வாயை பிரபல இராஜயோகம் தரத்தகுந்தவன் எனக் கூறவேண்டியதாயிற்று. சாதக அலங்கார நூலுடையார் கொள்கை என்னவெனில்?

"நுதலுங்கடகம் புகர்புந்தி நோய்செய்பாவர் குருசெவ்வாய்
இதமார்சுபனும் சேய்யோகம் இருக்கும்"

என்றதால் இந்நூலாசிரியரது கொள்கையை ஆமோதித்துள்ளதாகவே சொல்லவேண்டுவதாகிறது. சந்திர காவியத்தின் கருத்தும் இதற்கொப்பாகவே கூறியுள்ளனர். எப்படியெனில்?

"கர்க்கடக லக்கினத்தில் காணச் சனித்தவர்க்கு
சொற்புதனும் சுக்கிரனும் சொல்பாவி—நற்குருவும்
செல்சேயு நல்லவர்கள் சேய்குருவுங் கூடியிடில்
நல்யோகந் தந்திடுவர் நாடு"

என்றமையால் மேற்கூறிய இருவர்களது கொள்கைக்கும் இவை சில மாறுதலாகத் தோற்றுகிறது. எவையெனில்? முன்கூறிய இருவரும் சனி-புதன்-குரு என்னும் மூவரையும் பாவர் எனக் கூறியுள்ளார். இந்நூலாசிரியரோ சனியைப் பாவன் எனக் கூறவில்லை. யோகன் என்றும் கூறவில்லை. ஏனெனில்? கொடிய கோட்களுக்கு கேந்திராதிபத்தியம் தோஷம் விளைவிக்கக் கூடியதல்ல என்பதைப் பல சாஸ்திரங்களும் சம்மதித்திருப்பதால் மேற்படி சனிக்கு அஷ்டமாதிபத்தியம் வரினும், அவை பாதிக்காது என்பதே கருத்தாகும். இதுவன்றி இந்நூலாசிரியர் குரு செவ்வாய் கூடில் நல்ல மேலான ராஜயோகம் கொடுப்பார் என்றனர் யாதுபற்றி எனின்:—தர்ம கர்மாதியோசமானதால் இவ்வாறு கூறினர் எனக்கொள்க. மற்றும் சிலர் 6-ஆம் ஆதிபத்தியம் பெற்ற சுபக்கோளுக்கு எப்படிப்பட்ட சுபாதிபத்தியம் வரினும் அவர்கள் தீயபலனைச் செய்யார் என்று கூறலாமேயொழிய நற்பலன் செய்வார் என்றுகூற இயலாதென்பதேயாகும். 45

இதுவுமது

ஆதித்தன் கொல்லான்மற் றுரென்னுங் கொல்லுமவர்
சோதித் துரைக்கிலோ சுங்கன்மால்—தீதுற்றோர்
கண்டென்று கண்டோ ருவக்குஞ்சொற் காரிகையாய்
நண்டிலுதித் தோர்க்கு நவில்.

(பொ-ரை) கர்கண்டென்று கண்டோர்கள் உள்ளங் களிக்குஞ் சொற்களையுடைய பெண்பாவாய்! கடகலக்கினத்தில் பிறந்தோரை சூரியன் கொல்லான். மற்றும் எவர் கொல்வாரெனில்? சுக்கிரன் புதன் என்னும் இருவர்களே கொல்வார் எனவும் திண்ணமாய்க் கூறுவாயாக என்பதாம்.

(வி-ரை) சூரியன் துதியாதிபதியான போதிலுங் கொல்லான் என்க. இச்செய்யுளின் கருத்தாவது என்னவெனில்? சூரியன் துதியாதிபத்தியம்

பெற்றவனுயினும் கொல்லமாட்டார். சுக்கிரன்-புதன் என்னும் இருவர்களில் ஒருவரே கொல்லத் தகுந்தவர் என்பதாம். சாலக்கினத்தோர்க்கு 2-7-ஆம் இடமே மாரகத்தானம் என்பது பொதுவிதி. இந்த லக்கினத்திற்கு 2-ஆம் வீட்டோன் இரவியும், 7-ஆம் வீட்டோன் சனியும் ஆகும். இவ்விருவரையுமே மாரகாதிபதி எனக் கூருததற்குக் காரணம் என்னவெனில்? லக்கினுதியான சந்திரன் 2-ஆம் வீட்டோனுன சூரியனுக்கு நட்பு கிரகமான தினுலேயாகுமெனக் கருதவேண்டியதாகிறது.

சனியும் 7-ஆம் ஆதிபத்தியத்தால் மாரகாதிபத்தியம் பெற்றுன் எனினும், ஆயுள்ஸ்தானுதிபத்தியமாகிய 8-ஆம் ஆதிபத்தியமும் எல்லோர்க்கும் ஆயுள் காரகனுனதுபற்றியும் என்றே கூறவேண்டுவதாகிறது. இவ்விருவர்களையும் விட்டால் இந்த லக்கினத்திற்கு சுக்கிரன்-புதன் என்னும் இருவரையே பாபிகள் என்றும், மாரகாதிபத்தியம் செய்வார்கள் என்றும் கூறவேண்டுவதாகிறது. இந்நூலாசிரியரது கருத்து இவ்வாறிருக்க சாதக அலங்கார நூலுடையார் கருத்தோவெனில், "பரிதி மாரகனும்" என்றே கூறிமுடித்தனர். இதனுல் சூரியனே மாரகம் செய்யத் தகுந்தவன் என்றே கூறவேண்டுவதாயிற்று. இவ்விருவர் கருத்தும் இவ்வாறிருக்க,

"காடிரவி கொல்வான் நற்கவிமான் மாரகராய்
கூடிநின்று கொன்றிடுவர் கோபமதாய்—நீடுமவர்
தன்திசை யிலும்புத்தி தன்னிலுந் தப்பாது
பொன்னனையு யாதே புகல்"

என்றதால் இந்நூலாசிரியராகிய தாண்டவ மூர்த்தியின் கொள்கையின்படியே சூரியன் கொல்லான் என்றும், சுக்கிரன்-புதன் என்னும் இருவர்களில் ஒருவரே தன் திசையிலோ புக்தியிலோ கொல்வார் எனக் கூறியுள்ளனர்.

இவ்விருவரும் இரண்டுவிதமாய்க் கூறினமையால் எவை உண்மை? எவை பொய்? என்பதை ஆராயப்புகின், இரண்டு நூலோர் கொள்கையையும் சம்மதித்து இம்மூவருள் எவர் மாரகம் செய்யத் தகுந்தவர்? என்று கிரகஆராய்ச்சியால் ஆராய்ந்தே நிலைகூறுவது அவசியமாகும். எப்படியெனில்? தாண்டவமாலை, சந்திரகாவியம் என்னும் இருநூலின் கொள்கையின்படி சூரியன் மாரகம் செய்யான் என்றுலும், மேற்படி சூரியன் ஏகவீட்டுக்கு அதிகாரம் வாய்ந்தவன் ஆனதாலும் மேற்படி இரவி ஜென்மலக்கினத்திற்கு 2-7-என்னும் இடங்களிலிருந்து மற்றும் முறையே கூறிய சுக்கிரன்-புதன் இவர்கள் பஞ்சபலங்களால் மேன்மைபெற்று சந்திரன் இருந்த இராசிக்கு 6-8-12-முதலிய இடங்களில் நின்று தனது பரிபூரண மித்துருவால் பார்க்கப்படின் மேற்படி சூரியனே கொல்லத் தகுந்தவன் என்றுங் கூறலாம். ஆனதால் சோதிடர்கள் மாரகாதிகள் எனக் குறிப்பிட்ட கோட்களினது பலத்தை பலவாறு ஆராய்ச்சி செய்தே கூறவேண்டும். 46

சிங்கவிராசிபலன் கூறுகின்றது

புந்தியும் பார்க்கவனும் போற்றற் கரும்பாவி
செந்நிறத்த செவ்வாயே செம்மைக்கோள்—அந்நிறத்தாய்
யோகமுற்றுர் இப்பலனை யோரா தளித்திடுவார்
ஆகமதி யாரல் புகர்.

(பொ-ரை) சிவந்த நிறத்தினையுடைய பெண்பாவாய்! சிங்கராசியில் பிறந்தவர்களுக்குப் புந்தியாகிய புதனும், பார்க்கவனுகிய சுக்கிரனும், மகா

துன்பத்தைத் தாத்தருந்த கொடிய பாவிகள் எனவும், செம்மை நிறத்தை யுடைய செவ்வாய் ஒருவனே யோகத்தைத் தாத்தருந்தவன் எனவும், யோககாரகம் உடையவர்கள் கட்டாயம் யோகதனைத்தருவர். சுக்கிரன்-சந்திரன் என்னும் இவ்விருவரும் கொடியவர்கள் எனவுங் கூறுவாயாக என்பதாம்.

(வி-ரை) புதன்-சுக்கிரன் என்னும் இருவரும் சொல்வதற்கரிய பாவிகள் என்று கூறியுள்ளார். ஏனெனில்? புதன் 2-11-ஆம் ஆதிபத்தியம் பெற்றமை யால் கொடியபாவி எனவும், சுக்கிரன் 3-ஆம் ஆதிபத்தியம் வந்த தோஷத் தாலும், கேந்திராதி பத்தியத்தில் மிகப் பெரிதாகிய 10-ஆம் கேந்திரம் வந்த காரணத்தாலும், இவ்விருவரும் மகாபாவிகள் என்றனர். செவ்வாய் ஒருவனே யோகத்தைத் தாத்தருந்தவனும், செவ்வாயும் சுக்கிரனும் ஒன்று கூடில் மேற்படி இருவரும் யோககாரகம் வாய்ந்தவர்கள். ஆதலால், பிரமாதமான யோகத்தைத் தருவார்கள் எனவும் கூறினார். இதுவும் யாதுபற்றி எனின்? செவ்வாய் 9-ஆம் வீட்டுக்கு உடையவனும், சுக்கிரன் 10-ஆம் வீட்டுக்கு உடையவனுனது பற்றியும், 9-10-க்கு உடையவர்கள் பிரபல யோகத்தைத் தருவார் என்னும் கருத்துடன் கூறியதாகும். செவ்வாய் சுக்கிரன் என்னும் இருவரையே சிங்கலக்கினத்தோர்க்குப் பிரபல யோககாரகர் என்றதற்குப் பல காரணங்களும் கூறலாம். எப்படியெனில்? செவ்வாய் கேந்திரங்களில் ஒன்றுன 4-க்கும் கோணங்களில் ஒன்றுன 9-க்கும் அதிபதியாய் வந்த காரணத்தால் செவ்வாயை பிரபல யோகவான் என்றும், சுக்கிரனுக்கு 3-ஆம் ஆதிபத்தியமும், 10-ஆம் ஆதிபத்தியமும் வந்ததால் பாபியாகினும், தருமாதி யுடன் கருமாதி கூடில ராஜயோகம் உண்டு என்று சாத்திரங் கூறுதலால் செவ்வாயும் சுக்கிரனுங் கூடில் பிரபல ராஜயோகம் உண்டென்றுங் கூறினுர் என்று கருத்தாகும். இந்நூலாசிரியாது கருத்து இவ்வாறிருக்க சாதக அலங் கார நூலுடையார் கருத்து என்னவெனில்? "முதலேசிங்கம் புந்திபுகர் மோதும்பாவர் சேய்சுபனும்" என்றதால், இந்நூலாசிரியர் கூறியதைப் போலவே, புதனும் சுக்கிரனும் கொடிய பாவிகள் எனவும், செவ்வாய் ஒருவனே பூரண ராஜயோகத்திற்கு அதிகாரம் வாய்ந்தவர் எனவும் கூறி யுள்ளனர். சந்திரகாவிய நூலுடையார் கருத்தேதோவெனில்,

"சேர்ந்தசிங்க லக்கினத்தைச் சேர ஜனித்தவர்க்கு
ஏந்துசனி சுக்கிரனுமே பாவி—போந்தசெவ்வாய்
ஏறுமிரவி நல்லன் இன்புகர்சேய் கூடியிடில்
வீரிய யோகங்களுண்டாம் வேறு"

என்று கூறியதால், முன் இரண்டு நூற்களின் கருத்துக்கும், இந்நூலாசிரிய ரது கருத்துக்கும், சில விஷயம் மாறுபட்டுள்ளன. அவையாவன:—முன் கூறியவர் புதனும் சுக்கிரனும் பாவிகள் என்றனர். மேற்படி செய்யுளை நோக்குமிடத்துச் சனி-சுக்கிரன் பாவிகளும், செவ்வாயும் சூரியனும் நல்லவர் எனவும், சுக்கிரன் சேய்கூடில் ராஜயோகம் தரும் என்றும் கூறினுர். இந் நூலாசிரியர் கருத்து என்னவெனில்? மாரகஸ்தானம் பெற்ற 7-ஆம் ஆதிபத் தியம் பெற்ற சனி 6-ஆம் ஆதிபத்தியமும் பெற்ற காரணத்தால் சனியையும் ஒரு பாவன் என்றே கூறலாயினர். மற்றும் செவ்வாயை யோகன் என்றதும், செவ்வாயும் சுக்கிரனும் கூடில் பிரபல ராஜயோகம் என்றதும், எல்லா நூலிலும் சம்மதித்துள்ளனர். இச்செய்யுளில் பாபனேயும், யோகாதிபதியை மாத்திரமே கூறப்பட்டதாலும், மாரகாதியைக் கூறப்படாததாலும், மார காதியின் விவரத்தைப் பின்வரும் செய்யுளால் அறிக.

இதுவுமது

புந்தி முதலாய்ப்புகரும் பொல்லாரே பூமிசையோர்க்
கந்தமதாய்க் கொல்வா ரவர்வினையில்—பந்தமுற்றுர்
ஆமாகி லாயிழையா யார்கலிசூழ் வையகத்தில்
தாமான சிங்கத் தவர்.

(பொ-ரை) அழகுபொருந்திய பெண்பாவாய்! இப்பூமியின்கண் சிங்க லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு புதனும், சுக்கிரனும் பாபபலனை விளைவிக் கத்தகுந்தவராதலால் மேலேசொன்ன புதன் அல்லது சுக்கிரன்திசை வருங் காலத்தில் தானே இந்த ஜாதகனைக் கொல்லும் என நிச்சயமாய்க் கூறு வாயாக என்பதாம்.

(வி-ரை) செவ்வாய் ஒருவனே யோககாரகனுனபோதிலும், சதுர்த்த கேந்திராதிபதி சம்பந்தத்தினுல் தீயபலனைக் கொடுப்பார் என்றதாயிற்று. இச்செய்யுளால் சிங்கராசியில் ஜெனித்தவர்களை புதன்திசை அல்லது சுக்கிர திசையே கொல்லும் என்றனர். ஏனெனில்? ஸ்திரராசியில் பிறந்தவர் களுக்கு 3-ஆம் வீட்டதிபனும் 8-ஆம் வீட்டதிபனுமே கொல்லத் தகுந்தவர் எனக் கூறிய பொதுவிதிப்படி 3-ஆம் ஆதிபத்தியம் சுக்கிரனுக்கு வந்தமை யாலும், சிங்கலக்கினத்திற்கு ஆக்ஷிநாதனுகிய சூரியனுக்கு சுக்கிரன் ஒரு மாரகாதிபனுனதாலும், எல்லோருக்கும் பொது மாரகாதியும், இரண்டாம் பரியாயத்தின் மாரகஸ்தானம் அமைந்தவனும் புதனேயாதலால் புதனையும் மாரகாதியெனக் குறிப்பிட்டார்.

சோதிடர்கள் இவ்விரு மாரகாதிபர்களில் எந்த கோளின்திசை முந்தி யாகிறதோ? அந்த கிரகத்தின் பலாபலத்தை ஆராய்ந்து அவன் மாரகம் செய்யத்தக்க பலத்தில் இருக்கில் மாரகம் செய்வான் எனவும், மாரகம் செய்யத்தகாத பலத்தில் இருக்கில் அந்த திசையில் மாரகத்திற்குச் சமமான பிணி முதலியன உண்டாகி நீங்குமெனவுங் கூறுதல்வேண்டும். இந்நூல் ஆசிரியரின் கொள்கையை ஆமோதித்துக் கூறியதாயுள்ள சாதக அலங்கார நூலுடையார்,

"மதலை யோகம் பொன் வெள்ளி
மழைக் கோளுடன் மாரகன் மாலே"

என்றதால் மாரகம் செய்யத் தகுந்தவர் புதனும் சுக்கிரனுமாகும் என்ற தூடன் குருவும் சுக்கிரனும் ஒன்றுகூடில் மேலான இராஜயோகம் தரும் என்றனர். ஏனெனில்? பஞ்சம கோணுதிபதி குருவும், தசமகேந்திராதிபதி சுக்கிரனும் ஆனதுபற்றி கேந்திர கோணுதிபதிகள் ஒன்றுகூடில் பிரபல இராஜயோகமுண்டு என்னுங் கருத்தூடன கூறியதாகும். இவ்விரு நூலோர் ரின் கொள்கை இவ்வாறிருக்க சந்திரகாவியம் 57-ஆம் செய்யுளில்,

"வேறுபுதன் கொல்லான் விளைபுகர்மை கொன்றிடுவன்
கூறுமற்றப் பேர்கள்தான் கொல்லார்க ணேறிப்
பகுத்தறிந்து பார்த்து பதராமல் யார்க்கும்
வகுத்தறியு மின்னே மதித்து"

என்றதால் புதன் - சுக்கிரன் இவ்விருவரும் பாவர்களும், மாரகாதி யும் ஆயினும் புதன் கொல்லான் என்றும் சுக்கிரன் ஒருவனே கொல்வான் என்றும் கூறியுள்ளார். இந்நூலாசிரியரது கருத்தாவது என்னவெனில்?

லக்கினாதியான சூரியனுக்கு புதன் பகைவனல்லாததாலும், மாரகாதிபத்திய க்ஷேத்திரமாகிய இரண்டாம் க்ஷேத்திரத்துடன் 11-ஆம் ஆதிபத்தியமும் வந்தமையாலும் புதன் கொல்லான் எனவும், ஸ்திர லக்கினத்திற்கு 3-ஆம் வீட்டோன் மாரகாதிபன் ஆனதால் மூன்றும் வீடு சுக்கிரனுக்கு ஆதிபத்தியம் வந்ததாலும், லக்கினாதியான சூரியனுக்கு சுக்கிரன் கொடிய பகைவனானதாலும், சுக்கிரன் ஒருவனே கொல்லத் தகுந்தவன் எனவுங் கூறியுள்ளார். இவை மதவேற்றுமையாதலால் மேற்படி இருமாரகாதிபர்களில் எந்த கிரகம் கொல்லும் சக்தி வாய்ந்தது என்பதை ஆராய்ந்து மாரகாதிபனைக் கூறுக. 48

கன்னியிராசிபலன் கூறுகின்றது

செவ்வாயுஞ் செம்பொன்னுஞ் சேரா மதியுமிவர்
வெவ்வாயர் வெள்ளி விளம்புங்கால்—ஒவ்வுசுபன்
பார்க்கவனும் பங்கயமா வைரிமைந்தன் முனிவர்கள்
ஆர்ப்பொருமா யோகத்தா ராங்கு.

(பொ-ரை) கன்னி என்னும் இராசியிற் பிறந்தவர்களுக்கு செவ்வாயாகிய குஜனும், செம்பொன் என்று கூறும் குருவும் சந்திரனும் பாவர்கள் ஆவர். சுக்கிரன் ஒருவனே சுபன் எனவும், சுக்கிரன் புதன் என்னும் இருவர்களே யோகத்தைத் தரத்தகுந்தவர் என்றுங் கூறுவாயாக என்பதாம்.

(வி-ரை) "செவ்வாயுஞ் செம்பொன்னும் சேராமதியும் இவர் வெவ்வாயர்" என்றமையால் குஜன்-குரு-சந்திரன் என்னும் மூவரும் பாவர்கள் எனக் கூறவேண்டியதாயிற்று. இவை ஆராய்ச்சி மூலமாய்க் காணுமிடத்து கன்னி என்னும் ராசிக்கு குஜன் 3-8-என்னும் க்ஷேத்திரங்களுக்கு அதிகாரம் வாய்ந்தவன் ஆனதாலும், குருவுக்குள்ள ஆதிபத்தியம் 4-7-ஆனதால் மேற்படி குருவுக்கு கேந்திராதோஷம் உண்டாகியதோடு மாரகாதி பத்தியமும் வந்த காரணத்தாலும், சந்திரனுக்கு விரயாதிபத்தியம் வந்த காரணத்தாலும், இம்மூவரையும் பாவர்கள் எனக் குறிப்பிட்டனர். சுக்கிரன்-புதன் என்னும் இருவர்களே சுபன் என்றனர். ஏனெனில்? சுக்கிரனுக்கு 9-ஆம் ஆதிபத்தியமும், புதனுக்கு 10-ஆம் ஆதிபத்தியமும் வந்த காரணத்தைப்பற்றியும், கேந்திரகோணாதிபர்கள் சுபபலனைக் கொடுப்பார் என்ற சாஸ்திரக் கருத்தையொட்டியும் கூறியதாகும். மற்றும் சுக்கிரனுக்கு 2-ஆம் ஆதிபத்தியமும், புதனுக்குக் கேந்திராதிபத்தியமும் வந்த காரணத்தால் மேற்படி இருவரும் அவயோக காரகர்கள் எனக் கூறுவதற்கு இடமில்லை. ஏனெனில்? கேந்திரங்களில் முக்கிய பிரபல க்ஷேத்திரம் 10-ஆம் இடமானது பற்றியும், கோணத்தில் பிரபல க்ஷேத்திரம் 9-ஆம் இடமானது பற்றியும் என்க. இதுவன்றி யோக காரகர்கள் எனப் பெயர் பெற்ற புதன் சுக்கிரன் என்னும் இருவருக்கும் டகையில்லாததினாலே ஆகுமென்றும் கூற இடமுண்டு.

"மாதேகன்னி சேய்மதிபொன் மன்னும்பாவர் புதன்சுபனுகும்
காலேயோகம் புந்திபுகர்"

என்று கூறிய சாதக அலங்கார நூலுடையார் வசனப்படி கன்னியா விராசியிற் பிறந்தவர்களுக்கு குஜன்-மதி-குரு என்னும் மூவரும் பாவர்கள் என்றே கூறினர். இவை இந்நூலாசிரியர் கூறியதற்கும் இதற்கும் பொருத்தமாகவேயுள்ளன. மற்றும் யோகத்தைத் தருபவர் சுக்கிரனும் புதனுமாகும் என்பதும் இவ்விரண்டு நூலோர் கொள்கைக்கும் மாறுபடவில்லை. **சந்திரகாவிய நூலுடையார்** கொள்கையாவது என்னவெனில்?

"கன்னியா லக்கினத்திற் காணச் சனித்தவர்க்குப்
பன்னுகுரு சேய்மதியும் பாவியா—மன்னுசனி
வெள்ளியுந்தா னல்லவர்கள் விண்புகர் மாலுங்கூடிற்
றெள்ளாசர் யோகமுண்டாம் செப்பு"

என்று கூறினதால், பாவர்கள் குரு-குஜன் சந்திரன் என்பதால் மேற்கூறிய இருவர் விஷயங்களையும் ஆமோதித்துக் கூறியுள்ளார். சனி வெள்ளி என்னும் இருவரும் நல்லவர் என்றதாலும் சுக்கிரன் புதன் என்னும் இருவரும் ஒன்றுகூடில் ராஜயோகம் கொடுப்பார் என்று கூறினமையால், சனியையும் யோககாரகன் எனக் குறிப்பிட்டுள்ளனர். சனியையும் யோககாரகன் எனக் குறிப்பிட்டது யாதுபற்றி எனின்? மேற்படி சனிக்கு 5-ஆம் ஆதிபத்தியம் வந்த காரணத்தாலேயே கூறப்பட்டதெனக் கூறவேண்டியதாயிற்று. மற்றும், மாரகாதிபர்கள் எவர் என்பதைப் பின்வரும் செய்யுளால் காண்க. இங்கு கூறிய விஷயங்களை எல்லோரும் சம்மதித்து வியக்கத்
தக்கதேயாகும். 49

இதுவுமது

கொல்லான் பெரிய பிருகுகுச ஞதியர்கள்
எல்லாருங் கொல்லு மியல்புடையார்—நல்லாயென்
றெந்நாளுங் கூறுவா யேரிவைமீ துதித்து
மன்னு மவர்க்கு மகிழ்ந்து.

(பொ-ரை) அன்பிற் சிறந்த பெண்பாவாய்! கன்னியாவிராசியில் பிறந்த ஜாதகர்களைக் குறித்துக் கூறவேண்டுவது என்னவெனில்? மேற்படி ராசியிற் பிறந்தவர்களைச் சுக்கிரன் கொல்லான் எனவும், குஜன் - குரு- சந்திரன் என்று கூறப்பட்ட பாவர்களே கொல்வாரெனவும் கூறுவாயாக என்பதாம்.

(வி-ரை) சுக்கிரன் ஆதியாதிபதியாய் இருந்தாலும் கொல்லானென்று அறிக. இச்செய்யுளால் சுக்கிரன் கொல்லான் என்றனர். பாவர்களெனக் கூறிய கோட்கள் மூவரையும் விட்டு சுக்கிரனை மாத்திரம் கொல்லான் எனக் கூறிதற்குக் காரணம் என்னவெனில்? சுக்கிரனுக்கு வந்துள்ள ஆதிபத்தியங்களில் 2-ஆம் இடம் மாரகஸ்தானம் எனப் பெயர் பெறுவதால், மேற்படி மாரகஸ்தானத்திற்கு ஆதிபத்தியம் வாய்ந்தவனுயினும், 9-ஆம் ஆதிபத்தியமும் வந்த விசேஷத்தால் மேற்படி சுக்கிரன் கொல்லும் ஆதிபத்தியம் உள்ளவன் அல்லவென்பது இந்நூலாசிரியர் கருத்தாகும்.

மற்றும் எவர் கொல்வாரெனில்? மேற்கூறிய கன்னியாவிராசியில் பிறந்தவர்களுக்கு குஜனும், குருவும், சந்திரனும் பாவர்கள் என்றமையால் இம்மூவரே கொல்வார் எனவுங் கூறினர். ஆயினும், மேற்சொன்ன மூவருள் எவர் மாரகாதியெனில் மேற்படி கோட்களில் எவர் திசை முந்திய திசையோ அதுவே மாரகம் செய்யும் என்றும் கூறவேண்டியதாகிறது. சாதக அலங்கார நூலுடையார் கொள்கை என்னவெனில்? "கன்மாரகன் சுக்கிரன் பாவி" என்று கூறியமையால் சுக்கிரன் ஒருவரே கொல்வார் எனக் கூறினர். இந்நூலாசிரியர் சுக்கிரன் கொல்லான் எனவும், சாதக அலங்கார நூலுடையார் சுக்கிரன் கொல்வான் எனவுங் கூறியது வியக்கத்தக்கதாயினும், இவ்விரண்டினுள் எது பொருத்தமானது என்பதையே யாம் ஆராய வேண்டியதாகும். உபய லக்கினங்களுக்குப் பொதுமாரகர்கள் எவரெனில்? 7-11-க்குடையவர்களேயாகும். ஆனதால் 7-ஆம் வீட்டோனை குருவும்,

11-ஆம் வீட்டோன் சந்திரனுமே மாரகாதியெனக் குறிப்பிடவேண்டிய தாயிற்று. சந்திரகாவிய நூலுடையார் கருத்தாவது என்னவெனில்?

"செப்புபுகர் புந்திகொல்லான் சேர்ந்தசெவ்வாய் சந்திரனு
ஒப்புகுரு வோடுடன் மூவர்—தப்பாமற்
கொல்லுவர்கள் கண்டாய் குலவுமிதன் குறிப்பை
யொல்லையினிற் சொல்வா யுகந்து"

என்று கூறியதால் சுக்கிரன்-புதன் இவ்விருவரும் கொல்லார் எனவும், செவ்வாய்-சந்திரன்-குரு என்னும் மூவரே கொல்லத் தகுந்த மாரகாதிபர்க ளெனக் கூறுதலால், குரு - சந்திரன் என்னும் இருவர்களே பூரணமாய் கொல்லத் தகுந்தவர் எனக் கூறவேண்டியதாயிற்று.

ஆனதால் குரு-சந்திரன் என்னும் இருவரும் முழுமாரகாதிபர் எனவும் மற்றையோர் கால் மாரகன், அரை மாரகன், முக்கால் மாரகன் எனவுங் கொண்டு அவ்வவர்களது திசையில் கெண்டாதிகெண்டம் செய்யும் எனவும், முக்கிய மாரகாதிாயன குரு - சந்திரன் என்னும் இருவருள் முந்திய திசாதிபன் எவர் என்பதையும், பிந்திய திசாதிபன் எவர் என்பதையும் ஆராய்ந்து எவர் பலம் உள்ளவர்களோ அவர் திசையில் மாரகம் கூறுக. இவ்வாறு கூறுவதே சோதிடர்களின் கடமை. 50

துலாவிராசிபலன் கூறுகின்றது

குருவிரவி சேய்கொடியர் கூறு சனிபுந்தி
மருவு நலமுடையார் மண்ணில்—திருமருவும்
யோகத்தா ரிந்துமே யச்சுதனு மொண்ணுதன்மீ
தாகு மளகத்தா யறி.

(பொ-ரை) அழகு பொருந்திய கூந்தலையுடைய பெண்பாவாய்! துலா விராசியில் பிறந்தவர்களுக்கு குரு-சூரியன்-செவ்வாய் என்னும் மூவரும் பாவகர்கள் ஆவர். சனி-புதன் என்னும் இருவரும் சுபர்கள் எனவும், சந்திரன் புதன் என்னும் இருவரும் ராஜயோகத்தைக் கொடுக்கத்தகுந்தவர் எனவுங் கூறுவாயாக என்பதாம்.

(வி-ரை) சூரியன்-செவ்வாய்-குரு என்னும் மூவரும் பாபர் என்றனர். துலாராசியில் பிறந்தவர்களுக்கு சூரியன் 11-ஆம் ஆதிபதியானதாலும், குரு 3-6-க்கு அதிகாரம் வாய்ந்தவன் ஆனதாலும், செவ்வாயாகிய குஜன் இரு மாரகாதிபத்தியம் என்னும் 2-7-க்கு அதிகாரம் வாய்ந்ததாலும், இம்மூவரையும் பாவர் என்றனர். சனியும்-புதனும் நல்லவர் என்றனர். அவை யாவன:—சனி 4-5-க்கு உடையவரானதால் பொதுவாய் யோகன் என்றும், புதனுக்கு பாக்கியாதிபத்தியம் வந்த காரணத்தாலும், சுபர் என்று கூறப் பட்டனவாயினும், சந்திரன்-புதன் என்னும் இருவரும் ஒன்றுகூடில் பிரபல யோககாரகர் எனவுங் கூறினர். இவை தரும கருமாதியோகம் எனப்படும். ஆனாலும் சந்திரனும் புதனும் ஒன்று கூடினால்தான் பிரபலயோகமே ஒழிய தனித்தனியே யிருக்கின் அவ்வாறு பிரபல யோகமெனக் கூறமுடியாது. ஆனாலும், சமயோகத்தையாவது கொடுத்தே தீரவேண்டும். தருமாதியும் கருமாதியும் கூடில் பிரபல யோகமென்பது எல்லா லக்கினங்களுக்கும் பொருந்தும். இவை ஒருவாறிருக்க சாதக அலங்கார நூலுடையார் கருத் தாவது என்னவெனில்?

"போலாந் துலாத்திற் சேய்பரிதி குருவும்பாவர் சனிபுதனும்
மேலாம் சுபர்கள் மதிபுந்தி யோகன்மாரகன் சேயே"

என்றதால், அங்காரகன்-சூரியன்-குரு என்னும் மூவரும் பாவர்கள் எனவும், சனியும் புதனும் சுபர்கள் எனவும், சந்திரன்-புதன் என்னும் இவர்கள் ஒன்றுகூடில் பிரபலயோகம் உண்டெனவும், செவ்வாய் ஒருவனே மாரகம் செய்யத்தகுந்தவன் எனவுங் கூறினர். இவர் கூறியதற்கும், **சாதக அலங்கார நூலுடையார்** கொள்கைக்கும் எவ்விதமான மாறுதலும் இல்லை என்றே கூறவேண்டியதாயிற்று. **சந்திரகாவிய நூலுடையார்** கருத்து என்னவெனில்?

"துலையிற் பிறந்தார்க்குச் சூரியன்சேய் பொன்னும்
சொலும்பாவி புந்திசனி சுங்கன்நிலை சுபர்கள்
புந்திமதியுங் கூடீற் போராசர் யோகமுண்டாம்
வந்தசெவ்வாய் கொல்லான் வளைந்து"

என்றதாலும், இந்நூலாசிரியர் கருத்தை யொட்டியே கூறியதெனக் கூறவேண்டுவதாயிற்று. பொதுவாய் துலா லக்கினத்தோர்க்கு சந்திரன் புதன் என்னும் இவ்விருவரும் ஒன்று கூடினுமொழிய தனித்தனியே நின்றால் சமயோசித பலாபலனே உண்டாகும் என்பதைப் பல நூலாசிரியர்களும் கூறியுள்ளனர். இதுவன்றி மாரகம் செய்பவர் எவர் என்பதை **சந்திரகாவிய நூலுடையார்** மாத்திரம் செவ்வாய் கொல்லான் எனக் கூறினர். இதன் விவரங்களைப் பின்வரும் செய்யுளால் நன்கு ஆராய்ந்து அறியலாம். 51

இதுவுமது

சேய்கொல்லான் சீவன்முன் னவர்களேகொல்வர்
தேயு மதியனைய செந்நுதலாய்—ஆயும்
அறிவினோ ரெல்லா மளந்தறி கோலின்
குறியாகு மென்றுநீ கூறு.

(பொ-ரை) செம்மை பொருந்திய நுதலினையுடைய பெண்பாவாய்! துலாலக்கினத்தில் பிறந்தவர்களை முதல் மாரகாதியும், இரண்டாம் மாரகாதியுமான செவ்வாய் கொல்லான் எனவும், மற்றும் எவர்கள் கொல்வாரெனில், கொடியவர் எனக் கூறும் குரு - சூரியன் என்னும் இருவரே கொல்வார் எனவும் நிச்சயித்துக் கூறுவாயாக என்பதாம்.

(வி-ரை) செவ்வாய் துதிய சப்தமாதிபதியாய் இருந்தபோதிலுங் கொல்லான். இந்நூலாசிரியர் கொள்கையாவது என்னவெனில்? பாவர்கள் எனக் கூறிய சூரியன்-குரு-செவ்வாய் என்னும் மூவரில் செவ்வாய் கொல்லான் என்றும், மற்றும் இருவரே கொல்வார் என்பதும் கருத்தாகும். **சந்திரகாவிய நூலுடையாரும்** செவ்வாய் கொல்லான் என்றனர். செவ்வாய்க்கு இருமாரகாதிபத்தியம் வந்தமையாலும் இருமாரகாதிபத்தியம் ஓர் கிரகமாயின் அவை கொல்லத்தகுந்தது அல்லவென்பதும் பல நூலாசிரியர்களின் கருத்து. மற்றும் சரலக்கினத்திற்கு 2-7-ஆம் அதிபர்களே மாரகர் எனக்கூறிய பொதுவிதிப்படி நோக்குமளவில் செவ்வாய் கொல்லத்தகுந்தவன் எனவும், இரண்டு மாரகாதிபத்தியமும் ஒரே கிரகத்திற்கு வந்தமையால் கொல்லான் எனவும் கூறுவதால் மேற்படி செவ்வாயை விட்டு மற்றைய இரண்டு கோட்களே மாரகம் செய்வார் எனவுங் கூறவேண்டியதாயிற்று.

சாதக அலங்கார நூலாசிரியரும் மாரகன் செய்யத் தகுந்தவன் செவ்வாயே ஆகுமெனக் கூறினர். சந்திரகாவிய நூலாசிரியர்,

"வளர்ந்தகுரு சூரியனும் வன்மா ரகனய்
களங்கமறக் கொல்லுவர்கள் கண்டாய்—விளங்கியிடு
சூதளவு மென்முலையாய் சோராம விந்தவகை
போத வறிந்தே புகல்"

துலாலக்கினத்தில் பிறந்தவர்களை செவ்வாய் கட்டாயமாய்க் கொல்லான் என்றும், குரு - சூரியன் என்னும் இருவரே கொல்லத் தகுந்தவர் எனவுங் கூறவேண்டுவதாகிறது. துலாலக்கினத்திற்கு அதிகாரியாகிய சுக்கிரனுக்கு சூரியன் கொடிய பகைவன் என்பதை முன்பே கூறியுள்ளேன். ஆனதால் சூரியனும் மாரகம் செய்யலாம். குரு சுபனயினும் கொடிய ஆதிபத்தியம்பெற்ற காரணத்தால் கொடியவனனமையால் குருவும் கொல்லத் தகுந்தவர் என்றே கூறலாம். ஆனதால் மேற்படி குரு-சூரியன் முதலியவர்கள் ஜென்மலக்கினத்திற்கு 6-8-12-ஆம் இடத்திலாவது, 2-7-ஆம் ராசியிலாவது நின்றும், சந்திர லக்கினத்திற்கு 2-3-6-7-8 12-முதலிய க்ஷேத்திரங்களில் இருந்தாலும் அவர்கள் திசையில் கட்டாயம் மாரகம் செய்வான் என்பது திண்ணம். மேஷம்-துலாம் என்னும் இரண்டு லக்கினங்களுக்கும் இருமாரகாதிபர்களும் ஏக கிரகமானதால் அவர்கள் கொல்லத் தகுந்தவர்கள் அல்லவென்பது சாஸ்திரக் கருத்து. 52

விருச்சிகராசிபலன் கூறுகின்றது

புந்தியுஞ் சேயும் புகரும்பொல் லாக்கொடியர்
இந்து வொருத்தனே யேந்திழையாய்—சந்ததமும்
நல்லனிஞ் ஞால நலனளிப்போன் ஞாயிறுடன்
அல்லவனு மாக வறி.

(பொ-ரை) அழகு பொருந்திய பெண்பாவாய்! விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு புதன்-அங்காரகன்-சுக்கிரன் என்னும் இம்மூவரும் கொடிய பாவிகளாவர். மற்றும் சந்திரன் ஒருவனே யோகன். சூரியன்-சந்திரன் என்னும் இருவரும் யோககாரகர்கள் என்றும் கூறுவாயாக என்பதாம்.

(வி-ரை) விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு செவ்வாய்-புதன்-சுக்கிரன் என்னும் மூவரும் பாவர்கள் என்றனர். புதனுக்கு 8-11-ஆம் ஆதிபத்தியம் வந்தமையால் புதனைக் கொடியவன் என்றும், செவ்வாய்க்கு லக்கினாதிபத்தியத்துடன் 6-ஆம் ஆதிபத்தியமும் வந்த காரணத்தால் செவ்வாயைக் கொடியவன் என்றும், சுக்கிரனுக்கு 7-வது கேந்திரதோஷம் வந்ததுடன் முதல் மாரகாதி ஆனதாலும், விரயாதிபத்தியம் என்னும் 12-ஆம் ஆதிபத்தியம் வந்தமையாலும், சுக்கிரனைக் கொடியவன் என்றனர். இதனை சாதக அலங்கார நூலாசிரியரும் சம்மதித்து இருக்கின்றனர். எப்படியெனில்?

"ஏய தேள்புதன் சேயும் பளிங்கே
இயன்றபாவர் இந்துசுபன்"

என்றதால், விருச்சிகராசியில் பிறந்தவர்களுக்கு புதன்-செவ்வாய்-சுக்கிரன் என்னும் மூவரும் பாபன் என்றும், சந்திரன் ஒருவனே சுபன் எனவும் கூறினர். சந்திரனைச் சுபன் எனக் கூறியதற்குக் காரணம். சந்திரனுக்கு 9 ஆம் ஆதிபத்தியம் மாத்திரம் தனித்துவந்த காரணத்தாலே ஆகுமென்று

கூறவேண்டியதாயிற்று. **சந்திரகாவிய நூலாசிரியர்** கொள்கையாவது என்னவெனில்?

> "தேளிற் பிறந்தார்க்குச் சேய்புகர்மான் மைபாவி
> நாளுமதி பொன்னிரவி நல்லவரா—நீளிரவி
> சந்திரனுங் கூடியிடிற் றூரரசர் யோகமுண்டாஞ்
> சொந்தகுரு காரிகொல்லான் சொல்"

எனக் கூறியதால், மேற்கூறிய இருநூலாசிரியரது கருத்தை யொட்டியே கூறினர் எனக் கூறவேண்டியதாகிறது. சூரியனும் சந்திரனும் ஒன்றுகூடில் மேலான ராஜயோகம் என்றது ஒருமை கருமாதியோகம் என்று கூறவேண்டிய தாயிற்று. இதுகாறும் கூறிவந்த முறைப்படி **சாதக அலங்காரம் சந்திர காவியம்** என்னும் இருநூலாரும் இந்த நூலின் கருத்தை யொட்டியே கூறியதாகும். மற்றும் பல நூலாசிரியரும் இதனையே ஆமோதித்திருக்கின் றனர். இவை ஒருபுறம் இருக்க, பாவர்களெனக் குறிப்பிட்டவர்களோ, சுபர்கள் எனக் குறிப்பிட்டவர்களோ, தனது பாவபலத்தையோ, சுபபலத் தையோ எக்காலத்தில் செய்வாரெனில், தத்தமது திசை காலத்திலேயே செய்வார் எனக் கூறலாம். இவை எல்லா லக்கினங்களுக்கும் பொதுவாய்க் கூறியதேயாகும். கீழ் வருவனவற்றால் யோகம் முதலியவற்றைக் கூறுவார். 53

இதுவுமது

> குருவென்ப வன்கொல்லான் கோதாய்கொல் வோர்கள்
> மருவுபுதன் முதலோர் மன்னும்—திருவலியர்
> என்றுரைப்பாய் தேட்பிறந்தோ ரெல்லார்க்கு மிப்படியே
> குன்றெனவே கூறு முலை.

(பொ-ரை) ஆபரணங்களையும், மலைபோன்ற கொங்கைகளையுமுடைய பெண்பாவாய்! விருச்சிகராசியிற் பிறந்தவர்களை குரு கொல்லமாட்டான். மற்றும் எவர்கள் கொல்வாரெனில், பாவர்கள் என்று கூறிய குரு-புதன்-சுக்கிரன்-குஜன் என்னும் நால்வருள் குருவைத்தவிர புதன்-சுக்கிரன்-குஜன் என்னும் மூவரே கொல்லுவதில் மிக்க பலமுடையவர் என்று விருச்சிகராசியில் பிறந் தோர்க்குக் கூறுவாயாக என்பதாம்.

(வி-ரை) விருச்சிகராசியில் பிறந்தோர்க்கு குரு-புதன்-செவ்வாய் என்னும் மூவரும் பாவராயினும், குரு மாத்திரம் கொல்லான் என்றும், செவ்வாய் புதன் என்னும் இருவர்களில் ஒருவரே கொல்வார் எனவுங் கூறினர். **சாதக அலங்கார நூலுடையார்** "தொடர்ந்தகுருவே மாரகனும்" என்றதால், குரு ஒருவனே கொல்வான் என்றே ஏற்படுகிறது. இவ்விரண்டு பேதாபேதங்களையும் ஆராயுமிடத்து, இவை மதவேற்றுமை என்றே கூற வேண்டியதாகிறது. இந்நூலாசிரியரான தாண்டவமூர்த்தியின் கொள்கை யாவது என்னவெனில்? இரண்டாம் பரியாயமாகிய துவித மாரகாதிபதிக்கு சுபத்தானமாகிய 5-ஆம் ஆதிபத்தியமும் வந்தமையால் குரு கொல்லத்தகுந்த வன் அல்லவென்பது கருத்து. **சாதக அலங்கார நூலார்** கொள்கையாவது என்னவெனில்? முதல் மாரகாதி என்னும் 7-ஆம் வீட்டவரான சுக்கிரனைக் காட்டிலும் குருவே பலமுடையவன் ஆதலால், குருவுக்கு கோணாதிபத்தியம் வந்தாலும், யோகத்தைத் தருவானேயல்லது கொல்லாமல் விடமாட்டான் என்பதேயாகும். இவ்விரு நூலாசிரியர் கொள்கையும் இவ்வாறிருக்க **சந்திர காவிய நூலார்** கொள்கையாவது என்னவெனில்?

"சொல்புதனும் செவ்வாயும் சுக்கிரனு மாரகமாய்
வல்லிரவி கொன்றிடுவர் வஞ்சகமாய்—நல்மயிலே
இந்தவரலாறு மிதனிலையுமே யறிந்து
புந்தியினுட் கொள்வாய் புகழ்ந்து"

என்று கூறியதால்; இவரும் குரு கொல்லான் என்றே கூறியதுடன் மற்று முள்ள பாவர்களே கொல்லத்தகுந்தவர் என்று கூறினர். இதுவன்றி, பாவர் மாரகர் என்று குறிப்பிட்ட கோட்களில் எவர் மாரகம் செய்வதில் பலப்பட்டு இருக்கின்றனரோ அவரையே கொல்வார் என்று கூறுவாய் என்றமையால் பாவர்கள் என்று கூறிய குஜன்-புதன்-சுக்கிரன் என்னும் மூவருள் எவர்கள் 3-8-ல் நின்று ஆக்ஷி உச்சமபெற்று பலிப்பட்டனரோ அவர்கள் திசையிலும் ஜெனம லக்கினததிற்கு 6-8-12 என்னும் மறைவு ஸ்தானங்களில் இருந்து பலம பெற்றனரோ அவர்கள் திசையும் சந்திர லக்கினத்திற்கு 2-12-ல் எந்த கிரகம் நின்றனவோ அவர் திசையும் மாரகம் செய்யுமெனக் கூறலாம். இவ்வாறு ஆராய்ச்சி செய்யாவிடில் மாரகாதிகள் மூன்றுபேரில் எவர் செய்வார் என்பதை எவரும் திட்டமாய்க் கூறமுடியாது 54

தனுவிராசிபலன் கூறுகின்றது

ஒருவன் புகர்பொல்லா னெஞ்சே யிரவி
மருவுநலர் யோகரென மன்னுந்—திருவுடையோர்
பார்க்கவனும் புந்தியென்று பாம்பே ரகலல்குல்
சீர்க்கமலச் சேயிழையாய் செப்பு.

(பொ-ரை) அரவப்படம்போன்ற அல்குலையும் சிறப்புபெற்ற தாமரை மலரினகண் வீற்றிராநின்ற இலக்குமியைப்போன்ற அழகையும் உடைய பெண்பாவாய்! தனுசுராசியிற் பிறந்தவர்களுக்கு சுக்கிரன ஒருவனே பாவி யாவன். சூரியன்-புதன என்னும் இருவருமே யோகத்தைத் தாத்தகுந்த சுபர்கள் என்றும கூறுவாயாக என்பதாம.

(வி-ரை) இச் செய்யுளால் தனுசுராசியில் பிறந்தவர்களுக்கு சுக்கிரன் ஒருவனே பாபி என்றனர். யாதுகாரணத்தாலென குரு சுக்கிரர்களுக்கு கேந்திராதிபத்திய தோஷம் வெகுவாய் பாதிக்கப்படும் எனக் கூறியதாலும், தனுசுராசியில் பிறந்தவர்க்கு சுக்கிரன் 6-ஆம் வீட்டு தோஷம் அடைந்த துடன் லாபாதிபத்தியமும் பெற்ற காரணததால் சுக்கிரனே கொடியபாபி என்றனர். செவ்வாய்-சூரியன் என்னும் இருவரும் சுபர் என்றனர். சூரிய னுக்கு 9-ஆம் ஆதிபத்திய விசேஷத்தால் சூரியனே சுபன் என்று கூற வேண்டியதாயிற்று. புதனும்-சூரியனும் ஒன்றுகூடில் பிரபல ராஜயோகம் கொடுப்பர் என்றனர். மறறும் சூரியன்-செவ்வாய் என்னும் இருவரே சுபர் என்றனர்.

செவ்வாய்-சூரியன் என்னும் இருவரையும் சுபர் என்று கூறியது பொருததமானதேயாகும். ஏனெனில்? செவ்வாய்க்கு 5-ஆம் ஆதிபத்தியமும, சூரியனுக்கு 9-ஆம் ஆதிபத்தியமும் வந்த விசேஷத்தால் இவ்விருவரும ஒன்றுகூடில் பிரபல ராஜயோகம உண்டாகும். இதனைப் பல்வேறு நூலா சிரியர்களும் சம்மதித்துள்ளனர். எப்படியெனில்?

"ஆய தனுசில் புகர்பாவி
யாரல் பருதி சுபனுகும்"

என்ற சாதக அலங்கார நூலாசிரியர் கொள்கையின்படியாகும். புதனையும் சுபன என்று இநூலாசிரியராகிய தாண்டவமூர்த்தியவர்கள் கூறியபடியே

மற்றுமுள்ளோரும் கூறியுள்ளனர். இதனைப் பின்வரும் 56-ஆம் செய்யுளில் காணலாம். மற்றும் சந்திரகாவிய நூலார் கருத்தாவது என்னவெனில்?

"தனுசிற் பிறந்தவர்க்கு தண்புகர் பொன்பாவி
சனி செவ்வாய் சூரியன் மூன்நல்லர்"

என்றமையால், சுக்கிரன்-குரு என்னும் இருவரையும் பாவர்கள் எனவும், சனி-சூரியன்-செவ்வாய் என்னும் மூவரையும் சுபர் எனவுங் கூறியுள்ளார். இந்நூலாசிரியர் செவ்வாய்-சூரியன் என்னும் இருவரை மாத்திரம் சுபர் என்றும் கூறினர். சந்திரகாவிய நூலாசிரியர் சனியையும் சுபன் என்றனர். இது யாது காரணத்தாலெனில்? லக்கினாதியான குருவுக்கும், தனுதியான சனிக்கும் பகை இல்லாத காரணத்தாலும், நன்மை தீமை என்னும் பலாபலங்களில் இருவரும் ஏகபலம் உடையவர் ஆதலாலும் இவ்வாறு கூறினர் எனக்கொள்க. புதனைச் சுபன் என்று கூறியது யாது காரணத்தால் எனில்? 7-10-என்னும் கேந்திரதோஷம் அடைந்தவனாயினும் பாக்கியாதியான சூரியனுடன் ராஜ்ஜியாதியான புதன் சம்பந்தப்படின், ராஜயோகம் தரும் என்ற முறைப்படி இவ்விருவரும் ஒன்றுகூடில் தரும கருமயோகமுண்டாகும் என்னும் கருத்துடன் கூறியதாகும். பொதுவாய் செவ்வாய்-சூரியன் என்னும் இரு கோணாதிபதிகள் கூடினும், சூரியன்-புதன் ஒன்று கூடினும், பிரபல ராஜயோகம் உண்டென்றே கூறவேண்டிய தாகும். 55

இதுவுமது

கதிரவன்சே யாகிவளர் காரிகொல்லான் கொல்வர்
மதிநுதலாய் வெள்ளிமுன்னோர் மன்னும்—திதியுடைய
பாபிகளென் றோர்ந்திப் படிமிசையி லெந்நாளும்
சாபமதி லுற்றவர்க்குச் சாற்று.

(பொ-ரை) சந்திரனையொத்த அழகிய வதனத்தையுடைய பெண் பாவாய்! சூரியனும் செவ்வாயும் சுபபலனைத் தரத்தகுந்தவராவார். மற்றும் சனி ஒருவனே கொல்லான். மற்றும் எவர்கள் கொல்லாரெனில்? பாபி எனக் கூறிய சுக்கிரன் ஒருவனே கொல்வான் எனவுங் கூறுவாயாக என்பதாம்.

(வி-ரை) சனி துதியாதிபதியாய் இருந்தபோதிலும் கொல்லான் என்றறிக. இந்நூலாசிரியர் சனி ஒருவன் கொல்லான் என்றனர், ஏனெனில்? இரண்டாம் பரியாய ஆயுள் ஸ்தானாதியான சனி மாரகஸ்தானமான 2-ஆம் வீட்டுக்கும் அதிகாரியாய் வந்ததாலும், லக்கினாதியான குருவுக்கும் சனிக்கும் பகையில்லாததாலும், இவ்வாறு கூறினர் எனக்கொள்க. மற்றும் சுக்கிரன் ஒருவனே கொல்வான் எனத் தீர்மானித்துள்ளனர். யாது காரணத்தால் எனில் உபயராசிக்கு 7-11-ஆம் இடத்தவன் மாரகாதி எனவும் 11-ஆம் வீட்டோன் பலன் கொடான் என்றுங் கூறியதாலேயாகும்.

இதனை சாதக அலங்கார நூலார் சம்மதிக்கவில்லை. எக்காரணத்தாலெனில்? தாம் கூறிய 752-ஆம் செய்யுளில் 4-ஆம் அடியில்,

"நேய யோகம் புந்தி புகர்
நீண்ட சனியும் மாரகனே"

என்று கூறியதால் சனி ஒருவனே மாரகம் செய்யத் தகுந்தவனென ஏற்படுகிறது. இதுவன்றி, சுக்கிரனையும் யோககாரகன் என்று கூறியுள்ளனர்.

இவ்விருவர் கொள்கையும் இவ்வாறிருக்க, சந்திரகாவிய நூலாசிரியர் கருத்து என்னவெனில்?

"சனிமதியுங் கொல்லான் புகர்புதனுங் கொல்லுவர்மால்
சூரியனும் மொல்லையினிற் கூடிலுண்டாம் யோகம்"

என்றமையால், சனி-புதன் என்னும் இருவரே கொல்லத் தகுந்தவரென வும், சூரியன் புதன் கூடில் யோகம் உண்டென்வுங் கூறியதாய் உரை கொள்ளவேண்டியதாகிறது. சந்திரகாவிய நூலுடையார் கருத்தாவது என்னவெனில்? ஒவ்வோர் லக்கினங்களுக்கும் பொதுவிதியாய்க் கூறியபடி 2-7-ஆம் இடத்தவர்கள் மாரகாதி என்று கூறியதையே நிலைப்படுத்தி யுள்ளனர். லக்கினாதியான குருவுக்கு புதன்-சுக்கிரன் என்னும் இருவரும் பகைவராயினும் குருவினது பலத்தைக்காட்டிலும் புதன் பலம்குறைந்தவன் எனவும், குருவுக்குச் சமமானம் பலமுடையவன சுக்கிரனேயாதலால் தனுசு லக்கினத்தவரைச் சுக்கிரன் கொல்லலாம் எனக் கருத்து கொள்ளவேண்டிய தாகிறது.

இதுவன்றி உபய லக்கினத்தில் பிறந்தவர்களை 2-11-ஆம் இடத்தவன் திசை கொல்லலாம் என்னும் சாஸ்திரமிருப்பதால் இரண்டாமிடத்தவன் சனியும் 11-ஆம் இடத்தவன் சுக்கிரனும் ஆனதுபற்றி சனிதிசையில் மார கத்திற்குச் சமமான பிணையையும் சுக்கிரதிசையில் கட்டாயம் மாரகமும் செய்யலாம். மேற்படி சனியும் 11-ல் உச்சம் பெற்றிருக்கில், சனியும் மாரகம் செய்யலாம் என்பது சாஸ்திரங்களின கருத்து. ஆனதால் சோதி டர்கள் முனசெய்யுட்களில் கூறியவண்ணமே சனி புதன்-சுக்கிரன் என்னும் மூவருள் முழு மாரகன் சுக்கிரன் எனவும், ஏனையோர் கால் மாரகன்; அரை மாரகன், முக்கால் மாரகன் எனவுங் கூறுவது நலம். மற்றும் ஸ்தான பேதாபேதங்களாலுங் கூறுக. 56

மகாவிராசிபலன் கூறுகின்றது

ஆரல்பொன் னிந்துபொல்லா ரானவர்சுங் கன்புந்தி
வீரமிகு யோகபரன் வெள்ளியே—காரனைய
கூந்தன் மடமானே கும்பிகொல் லானென்றே
ஆய்ந்துணர்ந்தோர் தாமுரைத்தா ராம்.

(பொ-ரை) மேகத்துக்கொப்பாய்க் கறுத்து நீண்டு வளர்ந்துள்ள கூந்தலை யுடைய பெண்பாவாய்! மகரர்ாசியில் பிறந்தவர்களுக்கு சந்திரன்-செவ்வாய்-குரு என்னும் மூவர்களும் பாவர்களாவர். சுக்கிரன்-புதன் என்னும் இரு வரும் பூரண சுபராகும. சுக்கிரன் ஒருவனே யோககாரகன். இதுவன்றி மகாராசியில் பிறந்தவர்களைச் சனி கொல்லான் எனவும் திண்ணமாய்க் கூறுக வென்று எல்லாம் அறிந்த மேதாவிகள் கூறினர் என்பதாம்.

(வி-ரை) சந்திரன்-செவ்வாய்-குரு என்னும் மூவரும் பாவர்களும் பாவர் கள் என்றனர். செவ்வாய் மகாராசிக்கு 11-ஆம் இடத்ததிகாரம் பெற்ற துடன் லக்கினாதிக்கும பகைவன் ஆனதுபற்றியும், இவ்விருவரையும் பகை வனும் பாவியுமாவன என்று கூறியதுடன் குரு கொடிய ஸ்தானங்களான 3-12-க்கு அதிகாரனாய் வந்ததுடன் குருவுக்குக் கொடிய ஆதிபத்தியம் வந்த காரணததால் மகா பாவியானான எனனும் கருத்துடன் இம்மூவரையும் பாவர்கள் என்றனர். சுக்கிரன்-புதன் என்னும் இருவரையும் சுபன் என்றனர். ஏனெனில்? சுக்கிரனுக்கு கோணாதிபததியமாகிய 5-ஆமிடத்தவனாகிய புத னுக்கு 9ஆம் ஆதிபததியமும் வாய்ந்த விசேஷத்ால் இவ்விருவரையும்

சுபன் என்று கூறவேண்டியதாயிற்று. இதுவன்றி சுக்கிரனே பூரண யோக காரகர்கள் எனறது யாதுபற்றியெனின்? மேற்படி சுக்கிரனுக்கு 5-10-க்கு ஆதிபத்தியம் வாய்ந்த விசேஷமேயாகும்.

இவை இவ்வாறிருக்க சனி கொல்லான் என்றது ஜென்ம லக்கினாதி பதியே சனியாகி மேற்படி சனிக்கே இரண்டாம் பரியாயமான துவித மாரகாதிபத்தியம்வரினும் மேற்படி சனி கொல்லான் என்பது இந்நூலா சிரியர் கருதது. சாதக அலங்கார நூலுடையார் கருத்தாவது என்ன வெனில்?

"மாகஞ்சுறுவிற் குருசெவ்வாய் மதியும்பாவர் புகர்புந்தி
ஆகுஞ்சுபரா மாயோக மருளும் சுக்கிரன்"

என்றதால் இந்நூலாசிரியர் கொள்கைக்கும் சாதக அலங்கார நூலார் கொள்கைக்கும எவ்வித பேதமும் இல்லையென்றே கூறவேண்டியதாகிறது. சந்திரகாவிய நூலுடையாரோ எனில்,

"தாய்மகர லக்கினந்தான் சேர்ந்தப் பிறந்தவர்க்கு
கேய்விளங்குஞ் சந்திரனு மேகுருவும்—தீய்பாவி
வெள்ளி செவவாய நல்லன்"

என்றமையால் பாவர்கள் என்று கூறிய மூவரையும் மேற்கூறிய இரண்டு நூலாசிரியரும் கூறியதையே கூறினர். ஆயினும யோகம் தருபவர்களில் செவ்வாயையும் யோகன எனக் கூறினர். சந்திரகாவியநூலார் கொள்கை என்னவெனில்? மகர லக்கினததிறகு செவவாய் உச்சன ஆனதாலும் ஆதி பத்தியத்தில செவ்வாய்ககு சதுர்தத கேந்திராதிபததியம வநததாலும், இவ்வாறு கூறினர் எனக கருதது கொள்ளவேணடியதாகிறது. மற்றும் மாரகாதிபர்களையும் பிரபல யோககாரகர்களையும் கீழ்வரும் செய்யுளால் அறிக. இவ்வாறு ஒருவருக்கொருவர் மாறுபாடாய்க கூறியுள்ளது யாது காரணததாலெனில்? அவவவர்களுடைய மனோ அபிப்பிராயமும் மதவேற் றுமையுமாகும். இச்சந்தேகங்களைப் பினவரும செய்யுள்களால அறிக. 57

இதுவுமது

சேய்முதலாய் முன்னமே செப்புமவ ரேகொல்வர்
வாய்ந்த மகரமதில் வந்துதித்துக்—காய்நதிபெற
வாழுமவர்க் கென்றே வகுத்துரைத்தா ரென்றுமிகச்
சூழ்ந்துமட மாமயிலே சொல்.

(பொ-ரை) அழகிய மயிலைப்போன்ற நடையையுடைய பெண்பாவாய்! மகர விராசியில் பிறந்தவர்களை பாவாகள் எனறு கூறிய செவ்வாய்-குரு-சந்திரன என்னும இவர்களே கொல்லத்தகுந்தவர் என்று சாஸ்திரங்களை அறிந்த மேதாவிகள் கூறுவர் என்பதாம.

(வி-ரை) சனி ஆதியாதிபதியாய் இருந்தாலும் மாரகத்தைக்கொடான். முன்கூறிய 57-ஆம செய்யுளில் மகராசியில் பிறந்தவர்களை சனி கொல் லான என்று கூறினரே யொழிய எவர் கொல்வார் எனக் கூறாததுபற்றி இச்செய்யுளில் குரு-சந்திரன்-செவ்வாய் முதலியவர் கொல்வார் எனறு மூன்று கிரகங்களைக் குறிததனர். எந்த லக்கினத்திற்கு பொது மாரகாதியும், முதல் மாரகாதிபருமாகிய 7-ஆம் வீட்டவர் சந்திரனானதால், சந்திரனை

மாரகாதி என்றும், 2-ஆம் பரியாயமாகிய ஆயுள்ஸ்தானமென்னும், 3-ஆம் ஆதிபத்தியம் குருவுக்குக் கிடைத்தும், மேற்படி குருவுக்கு 12-ஆம் ஆதிபத்தியமும் வந்தமையால் குருவையும் மாரகாதி என்றும், லக்கினாதியான சனிக்குப் பகைவனாயும், மகரராசிக்கு 11-ஆம் ஆதிபத்தியமும் பெற்றவன் செவ்வாயும் ஆனதால் இம்மூவரையும் கொல்லத்தகுந்தவர் எனக் குறிப்பிட்டனர். ஆயினும் இம்மூவரில் எவர் கொல்வார் என்பதைக் கூறவில்லை. **சாதக அலங்கார நூலுடையவரோ** எனில், தாம் கூறிய 753-ஆம் செய்யுளில் இரண்டாம் அடியின் கடைசியில் மாரகன் சுன் என்றமையால் சனியே மாரகன் என்று அர்த்தம் கொள்ளவேண்டியதாகிறது. இந்நூலாசிரியராகிய **தாண்டவபூபதி** சனி மாரகன் செய்யான் என்றும், சாதக அலங்கார நூலுடையவர் சனியே மாரகம் செய்வான் என்றுங் கூறியதால், இவ்விரண்டுள் எது நிச்சயம். இவர் என் இவ்வாறு கூறவேண்டுமெனின்? சரலக்கினத்தோர்க்கு 2-7-ஆம் ஸ்தானாதிபர்கள் மாரகம் செய்வார் என்றும், இந்நூலாசிரியராகிய **தாண்டவபூபதி** தாம் கூறிய 22-ஆம் செய்யுளில் 7-ஆம் இடத்தவனைவிட இரண்டாமிடத்தவனே மாரகம் செய்வதில் பலம் உடையவன் எனவுங் கூறியிருத்தலாலும், இவ்வாறு கூறினார் என்று கருத்து கொள்ள வேண்டியதாகிறது. **சந்திரகாவிய நூலுடையவரும்** இந்நூலாசிரியரான தாண்டவபூபதி கூறிய கருத்தையே ஆமோதித்துள்ளனர் எவ்வாறெனின்? தாம்கூறிய 65-66-ஆம் செய்யுளில்,

"காரிகொல்லான் விள்ளமதியுங் குருவுமேல்" எனவும்,

"மேலிருவருங் கொல்வர் வெள்ளிபுதன் கூடியிடிற்
கோல்யோக மெல்லாம் கொடுத்திடுவர்"

என்றமையால், சனி கொல்லான் எனவும் சந்திரன்-குரு என்னும் இருவருள் ஒருவரே கொல்வாரெனவுங் கூறியுள்ளனர். ஆதலால் சோதிடர்கள் கவனிக்கவேண்டியது என்னவெனில்? சரலக்கினத்திற்கு 2-7-ஆம் இடத்தவர்கள் மாரகாதியானதாலும், இரண்டாம் வீட்டவனான சனி லக்கினாதியானதால் சனி கொல்லான் என்றும், தன் திசையில் மாரகத்திற்குச் சமமான பிணி முதலியவற்றையே செய்வான் என்றும், சந்திரன் முதல் மாரகாதியானதாலும், லக்கினாதியான சனிக்கு கொடிய பகைவனானதாலும், மேற்படி சந்திரனே கொல்ல பலமுடையவன் என்றும் கூறுவதுடன் ராசி சக்கரப்படி மேற்படி சந்திரனிருக்கும் தாராதரத்தால் இதனை நிலைகூற வேண்டுவது கடமையாகும். இதுவன்றி, குருவையும் மாரகாதிபன் என்று கூறியதால் மேற்படி குரு நிற்கும் வண்மையாலும், மேற்படி குரு மாரகன் செய்வான் அல்லது மாரகத்திற்குத் தகுந்த பிணி செய்வான் என்பதை ஆராய்ந்து கூறுதல் நலம். இவ்வாறு ஆராய்ந்து கூறுவிடில் எவர் மாரகம் செய்வார் என்று நிச்சயிப்பது கடினம். 58

தும்பவிராசிபலன் கூறுகின்றது

பொன் மதிசேய் பொல்லார் புகரொருவ னேபுனிதன்
நன்னயஞ்சேர் யோக நயந்தளிப்போன்—கன்னனிகர்
ஆனமொழி மாதே யசுரர் தமக்கென்றும்
ஞான நிலையுரைப்போ னன்கு.

(பொ - ரை) சருக்கரைபோன்ற தித்திப்பாகிய மொழிகளையுடைய பெண்பாவாய்! கும்பராசியில் பிறந்தவர்களுக்கு பொன்னாகிய குருவும், மதி

யாகிய சந்திரனும், செவ்வாயாகிய அங்காரகன் என்னும் மூவரும் பொல்லா ரென்னும் பாவிகளும், சுக்கிரன் ஒருவனே சுபன். மேற்படி சுக்கிரன் ஒருவனே யோகத்தைத் தரவல்லவன் என்றுங் கூறுவாயாக என்பதாம்.

(வி ரை) கும்பலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு குரு-சந்திரன்-செவ்வாய் என்னும் மூவரும் பாவர் என்றனர் யாதுகாரணத்தாலெனின்? துதியாதி பத்தியமும், லாபாதிபத்தியமும் குருவுக்கு வந்ததாலும், குரு - சுக்கிரர் என்னும் இருவருக்கும் 2-11-ஆம் ஆதிபத்தியம்வரில் மகா பாவிகள் என்று கூறும் சாஸ்திரங்கள் பல உண்டாதலால் குருவை பாபி என்றனர். செவ் வாயோவெனில், ஜென்மாதியான சனிக்குப் பகைவனும், திருதியாதிபத் தியம் பெற்ற குரூரத்துவத்தால் செவ்வாயைப் பாவன் எனவும், சஷ்டமாதி பத்தியம் சந்திரனுக்குக் கிடைத்ததாலும், மேற்படி சந்திரனும் லக்கினாதி யான சனிக்குப் பகைவனுனதுபற்றியே பாவன் என்று கூறியதாய்க் கருத்து கொள்ளவேண்டியதாகிறது.

இதுவன்றி சுக்கிரன் ஒருவனையே சுபன் என்றும், யோகமளிப்பவ னென்றுங் கூறியுள்ளனர். யாதுபற்றியெனின்? சுக்கிரன் சுக பாக்கியாதி யானதால் என்க. இவை நிற்க, **சாதக அலங்கார நூலுடையவரோ** எனில்,

"பாகார்கும்பக் குருமதிசேய் பாவர்சுக்கிரன் சுபனுகும்
தாகார்யோகம் பளிங்குபுதன்"

என்றதால் மேற்படி லக்கினத்தில் பாவர்களை குரு - சந்திரன் - செவ்வாய் என்னும் மூவர் என்பதைச் சம்மதித்தும் யோகம் தருபவர் புதன்-சுக்கிரன் என்னும் இருவருமாகும் என்று கூறியுள்ளனர். புதனையும் யோகம் கொடுப் பவன் என்று கூறியது யாதுகாரணத்தாலெனில்? மகர லக்கினத்திற்கு புதன் 5 ஆம் ஆதிபதியானதால் என்றே கூறவேண்டியதாயிற்று.

இந்நூலாசிரியராகிய **தாண்டவ பூபதி** புதனை யோககாரகன் எனக் கூறுவதற்குக் காரணம் என்னவெனில்? மேற்படி புதனுக்கு 5-ஆம் ஆதி பத்தியம் வந்ததுடன் அட்டமாதி பத்தியமும் வந்த காரணத்தாலேயாகும். நிற்க **சந்திரகாவிய நூலுடையார்** கருத்தாவது என்னவெனில்?

"கும்ப விலக்கினத்திற் கூடிப் பிறந்தவர்க்குப்
பம்புகுரு சேய்பாவி பண்பிரவி—விம்புபுகர்
புந்திசனி நல்லன் புகர்சேயுங் கூடியிடிற்
றந்தரசர் யோகந் தரும்"

என்றதால் கும்பராசியில் பிறந்தவர்க்கு குரு - செவ்வாய் பாவன் எனவும், சுக்கிரன்-புதன்-சனி என்னும் மூவரும் சுபன் எனவும், சுக்கிரன்-செவ்வாய் என்னும் இருவரும் ஒன்றுகூடில் பிரபல யோகம் தருவார் எனவுங் கூற வேண்டியதாயிற்று.

இவ்வாறு பலநூலாராய்ச்சியாய்க் காணுமிடத்து குருவையும், செவ்வா யையும் பூரண பாவர் என்றும், சுக்கிரன் ஒருவனே பூரண சுபன் என்றும், ஏனையோர் தங்கள் திசையில் மத்திம பலனையும், அதமபலனையுமே தருவார் எனவுங் கூறவேண்டியதாகிறது. சுக்கிரன்-புதன் என்னும் இருவரும் ஒன்று கூடில் பிரபலயோகம் என்றது தரும கருமாதியோகம் எனப்படும். இவை இந்த லக்கினத்திற்கு மாத்திரமல்லாது எல்லா லக்கினங்களுக்கும் பொது வாய்க் கூறியதேயாகும். எந்த லக்கினமாயினும், 9-10-க்கு உடையவர்கள்

ஒன்றுகூடில் பிரபல ராஜயோகம் தருவார் என்பது பொதுவிதி. இதனை ஒவ்வொரு செய்யுளிலும் காணலாம். மற்றும் கும்பலக்கினத்தவரை மாரகம் செய்யுங் கோட்கள் எவரென்பதைக் கீழ்வரும் செய்யுளால் அறிக. 59

இதுவுமது

வேந்தனென்போன் கொல்லான் வெறிகமழ்பூங் கோதேகொல்வார்
ஆய்ந்துணரி லாரன்முன் னனவரே—தேய்ந்துரையாய்
வேலைபுடை சூழுலகில் வெம்புகுடந் தன்னில்
சாலவுதித் தோர்க்கென்று சாற்று.

(பொ-ரை) வாசனை நிறைந்த புட்பமாலைகளை அணிந்திரானின்ற பெண் பாவாய்! கும்பராசியில் பிறந்தவர்களை குரு கொல்லமாட்டான். மற்றும் எவர் கொல்வாரெனில்? பாவர்கள் எனக்கூறிய சந்திரன்-செவ்வாய் என்னும் இருவரில் ஒருவரே கொல்வார் என நிச்சயமாய்க் கூறுவாயாக என்பதாம்.

(வி-ரை) குரு துதியாதிபதியாய் இருந்தபோதிலும் மாரகத்தைக் கொடான் என்பதாம். இச்செய்யுளால் கும்ப லக்கினத்தில் பிறந்தவர்களுக்குப் பாவர்களான சந்திரன் - செவ்வாய் - குரு என்னும் மூவருள் குரு மாத்திரம் கொல்லான் என்றும், மற்றும் இருவருள் ஒருவர் கொல்வார் என்றனர். அவையாவன:—குரு நீங்கலாக மற்றும் இருவருள் எவர் மாரகம் செய்வதில் பலமுள்ளவர்க ளாகிறார்களோ அவர்களே கொல்வார் என்றனர். செவ்வாய் 3-10-க்குடையவரும் சந்திரன் 6-ஆம் பாவாதியும் ஆவரென முன்பே கூறியுள்ளேன். கும்பம் என்பது ஸ்திரராசியாதலாலும் மேற்படி கும்பத்திற்கு மாரகாதிபர்கள் 3-8-ஆம் அதிபர்களே மாரகாதிபர்கள் எனக் கூறியிருத்தலாலும், 3-ஆம் வீட்டோன் செவ்வாயானதுபற்றியும் இந்நூலாசிரியரும் செவ்வாய் முதலான பாவர்கள் கொல்வார் எனப் பொதுவாய்க் கூறியுள்ளனர்.

சாதக அலங்கார நூலுடையாரும், "தள்ளுமாசன் முன்பாவி" என்று பொதுவாய் குருவையும் புதனையும் பாவி என்று கூறியதுடன் புதன் கொல்லலாம் என சந்தேகமாகவேகூறி முடித்தனர். புதன் மாரகம் செய்யலாம் எனக் கூறியதும், மேற்சொன்னபடி புதனுக்கு அட்டம பாவாதிபத்தியம் வந்ததாலேயாகும். **சந்திரகாவிய நூலுடையாரோ** எனில்,

"தருகுருவுமே கொல்லான் சந்திரனும் சேயும்
வெருவியிடக் கொல்வார் மிக்காய்—வருவிவரம்
கண்டு பிலனுய் கருத்திலறிந் தேயுரையும்
கண்டுமொழி நல்லாய் கசிந்து.

என்று கூறியுள்ளனர். இதனல் சந்திரன்-செவ்வாய் என்னும் இருவரே கொல்லத் தகுந்தவர்கள் ஆதலால் இவ்விருவருள் எவர் கொல்வார் என்பதை கிரக ஆராய்ச்சியால் ஆராய்ந்தறிந்து கூறுக என்றே முடித்தனர். ஆதலால் மேற்கூறிய இருவருள் மாரகஸ்தானத்தில் சம்பந்தப்பட்ட கிரகம் எது வென்பதையும், மாரகாதியுடன் கூடிய கிரகம் எதுவென்தையும், மாரகாதியின் பார்வை அங்கிசபலம் முதலியவற்றால் மேற்படி பலத்தை அடைந்த கிரகம் எதுவென்பதையும் நன்கு ஆராய்ந்து மேற்படி விஷயத்தை நிலை கூறுவது நலம். ஏனெனில்? நமது முன்னோர் ஆயுள் நிர்ணயம் செய்யும் மார்க்கங்களை எவ்வாறு கூறினரெனில்?

"ஓதுமிது வல்லா லுதய விலக்கினமு
மீதோரா லக்கினமு மேன்மையுள்ள—சீதமதி
செல்லு மிலக்கினமும் தேர்ந்த வயதுகளை
மெல்லவே நிச்சயித்து விள்" என்று கூறியதாலும்,

"விதியற்று போனபேர்க்கு மதியத்தைப் பார்த்துச்சொல்லு
மதியற்று போனபேர்க்குச் சனியதைப் பார்த்துச்சொல்லு"

எனவுங் கூறியுள்ளனராதலால், மூதன்முதலாக ஜென்ம லக்கினத்தாலும் இரண்டாவது ஓரா லக்கினத்தாலும், மூன்றாவது சந்திர லக்கினத்தாலும், நான்காவது சந்திரன் இருக்கும் தாராதாத்தாலுமே ஆயுள் விஷயங்களை நிர்ணயிக்க வேண்டுவது கடமையாகும். இதுவன்றி அட்டகவர்க்கம் கால சக்கிரம் முதலியவற்றாலும் ஆயுள் விஷயங்களை ஆராய்வது நலம். இதனது விரிவான விஷயங்களை எம்மால் வெளியிடப்பட்ட சோதிடக் களஞ்சிய விருத்தியுரையில் இன்னும் தெளிவாய்க் காணலாம். 60

மீனவிராசியின்பலன் கூறுகின்றது

காரிபுகர் வெய்யோன்மால் காணுக் கடுங்கொடியர்
ஆரலோ டிந்துவிவ ரானவரே—சேர்ந்தக்கால்
செய்யோன் குருவிவரே செல்வமளிக் கும்பெரியோர்
ஐய நுனி நூலிடையா யாய்ந்து.

(பொ-ரை) எவரும் காணுதற்கரிய நூல்போன்ற இடையினையுடைய பெண்பாவாய்! மீனராசியில் பிறந்தவர்களுக்கு சனி - சுக்கிரன் - சூரியன்- புதன் என்னும் நால்வரும் கொடிய பாவர்களாவார்கள். செவ்வாய்-சந்திரன் என்னும் இருவரும் சுபராவார். மற்றும் செவ்வாய்-குரு என்னும் இருவரும் ஒன்றுகூடில் பிரபல இராஜயோகத்தைத் தருவார் என்று நிச்சயமாய்க் கூறுவாயாக என்பதாம்.

(வி-ரை) மீனராசியில் பிறந்தவர்களுக்கு சனி-சூரியன்-புதன்-சுக்கிரன் என்னும் நால்வரையும் பாபி என்றனர். ஏனெனில்? புதனுக்கு இரண்டு கேந்திரம் வந்த தோஷத்தால் பாவியானான் எனவும், சூரியன் சஷ்டமாதி பத்திய தோஷத்தால் பாவியானான் என்றும், சனி விரயாதிபத்தியம் வந்த தோஷத்தால் பாவியானான் என்றும், சுக்கிரன் திருதிய அட்டமாதிபத்தியம் பெற்ற தோஷத்தால் பாவியானான் எனவுங் கூறலாம். 3-6-8 12- என்னும் நான்கு க்ஷேத்திரங்களும் கொடியதிலும் மகா கொடிய க்ஷேத்திரம் என்பதை எல்லா நூற்களும் சம்மதிக்கும். அதுவுமன்றி, கேந்திராதிபத்தியம் சுபகோட்களுக்கு உண்டாயின் அவை மகா பாபம் என்பதாலும், மீனராசியில் பிறந்தவர்களுக்கு புதன் 4-7-க்குடையவன் ஆனதால் புதனையும் பாவன் எனக் கூறுவாராயினர். செவ்வாய் - சந்திரன் என்னும் இருவரையும் சுபன் என்றனர். ஏனெனில்? சந்திரன் பஞ்சம கோணாதிபதியும் செவ்வாய் பாக்கியம் என்னும் 9-ஆம் கோணாதிபதியும் ஆனதுபற்றி என்க. குரு- செவ்வாய் ஒன்றுகூடில் யோகம் என்றது தருமகருமாதியோகம் எனப்படும்.

இவை இந்த லக்கினத்திற்கு மாத்திரமன்று எல்லா லக்கினங்களுக்கும் தருமகருமாதி யோகம் கூறியதுபோன்றே இந்த லக்கினத்திற்கும் கூறியுள்ளார். இவை இவ்வாறிருக்க, சாதக அலங்காரநூலுடையார் மீனராசியில் பிறந்தவர்களைக் குறித்துக் கூறியதென்னவெனில்?

"பாவிமீனங் காரிபுதன் பளிங்குசூரியன் பாவியரே
மேவும்செவ்வாய் மதிசுபராம் விளங்குயோகங் குருவால்"

என்று கூறியதால் இந்நூலாசிரியர் கொள்கைக்கு எவ்வித மாறுதலுமின்றி சம்மதித்தே கூறியுள்ளார். ஆயினும் சந்திரகாவிய நூலுடையார் கருத்தாவது என்னவெனில்?

"மீனவி லக்கினந்தான் மேலாய் பிறந்தவர்க்குச்
சுனசனி புந்திபுகர் சூரியன்பொன்—ஊனமுடன்
பாவியாஞ் சேய்மதியும் பண்புடைய நல்லவர்கள்
கோவுகுரு செவ்வாயுங் கூடில்"

என்றமையால் முன்கூறிய இருவர்களது கொள்கையினையும் ஆமோதித்தவரேயாயினும் குருவையும் பாவர் என்றனர். ஏனெனில்?

"கண்டத் ததிபாராம் கேந்திரத்திற் காரிகையாய்
மண்டுகுரு வெள்ளி மாபாவி"

என்றதால் குரு ஜென்ம லக்கினாதிபதியாயினும் 10-ஆம் ஆதிபத்தியமும் வந்த பெருந்தோஷத்தால் மகா பாவி என்றனர். மற்றும் பலநூலாசிரியர்களது கொள்கையாவது, மீனலக்கினத்தில் மற்றெல்லோரைவிட குருவே கொடிய பாவி என்பது கருத்து. கீழ்வரும் செய்யுளால் மாரகம் செய்பவரைக் கூறுவார். 61

இதுவுமது

பூசுதன்கொல் லான்கொல்வார் போந்தசனி முதலாந்
தேசுபெறும் பாவரென்று தேர்ந்துரைப்பாய்—காசினியில்
கட்கரிய மென்று கதித்துவளர் மீனத்தின்
உட்பிறப்போர்க் கெண்ணுதலா யோர்ந்து.

(பொ-ரை) ஒளிபொருந்திய நெற்றியினையுடைய பெண்பாவாய்! மீனராசியில் பிறந்தவர்களை பூசுதனாகிய செவ்வாய் கொல்லான். மற்றும் எவர்கள் கொல்வார்களெனில், பாவர்கள் எனக்கூறிய சனி முதலானவர்களே கொல்லத்தகுந்தவர்கள் என நிச்சயித்துக் கூறுக என்பதாம்.

(வி-ரை) செவ்வாய் ஆதியாதிபதியாய் இருந்தபோதிலுங் கொல்வான் கிரகங்களுடைய வலுமையை யூகித்துச் சொல்லுவா யெனக. மீன லக்கினமாகிய உபயராசிக்கு 7-11-க்கு உடையவர்கள் மாரகர்கள் என்பது பொது விதியாயினும், இந்நூலாசிரியர் மீனராசியில் பிறந்தவர்களை செவ்வாய் கொல்லான் என்றும், மற்றும் முறையே கூறிய சனி முதலிய பாவர்களே கொல்வர் எனக் கூறியதாலும், மீனராசிக்கு சனி-புதன்-சுக்கிரன்-சூரியன் என்னும் நால்வர்களும் பாவகர்கள் என்றதாலும், மேற்படி நால்வருள் புதனுக்கு 7-ஆம் ஆதிபத்தியமும், சனிக்கு 11-ஆம் ஆதிபத்தியமும் வருவதாலும், இவ்விருவரும் முழு மாரகர் எனவும், சுக்கிரன்-சூரியன் என்னும் இருவரும் தாமிருக்கும் க்ஷேத்திரம் மாரக ஸ்தானமாக இருந்தாலன்றி மாரகம செய்யாரெனவும் கூறவேண்டும்.

இந்நூலாசிரியரும் நான்கு கோட்களையும் மாரகாதிபர்கள் எனக் குறிப்பிட்டதால், எவர் கொல்வார்? எவர் கொல்லார்? என்பதை மேற்படி நால்வருள் எவர் மாரகஸ்தானத்தில் அல்லது கொடிய க்ஷேத்திரங்களில் பலம் பெற்றுள்

எனரோ அவர்களே கொல்வாரென நிச்சயித்துக் கூறுவதுடன் சந்திர லக்கினம், ஓராலக்கினம், அம்சாலக்கினம் முதலியவற்றையும் அனுசரித்துக் கூறுதல்வேண்டும். இந்நூலாசிரியரும் சனி முதலானவர் கொல்வார் என்று கூறியதால் சனியே முழுமாரகன் எனவும், மற்ற கோட்கள் தானிருக்கும் க்ஷேத்திரபலத்தால் கொல்லும் சக்தி வாய்ந்தவராவார் என்பதே கருத்தா கிறது. இது நிற்க, சாதக அலங்கார நூலாசிரியரும்,

"தாவுமாரகன் சேயென்றே சாற்றுந்துவாதச லக்கினத்தை
ஆவலறிந்தே சுபாசுபங்க ளறிந்துக்கூறப் பண்பாமே"

என்றதால், செவ்வாய் மாரகனுயினும், கிரக வரிசையால் எவர் கொல்வார் எவர் கொல்வார் என்பதை நிச்சயித்துக்கொள்க என்றே முடிவு செய்தனர். சந்திரகாவிய நூலாசிரியரோ எனில்,

"நாடுசெவ்வாய் கொல்லான் நவிசனியோ டுடுபுகர்
பானுபுதன் கொல்வார்கள் பைம்பாகி ஞேடளவும்
தேனுமொழி மாதே தெரி"

என்றதால், செவ்வாய் மாரகாதியெனப் பெயர் வாய்ந்தவனுயினும் கொல் லான். மற்றும் எவர்கள் கொல்வார்களெனில்? சனி-சூரியன்-புதன்-சுக்கிரன் முதலிய பேர்களே கொல்வாரெனக் கூறியிருத்தலால் மாரகாதிபர்களை முன் கூறியவண்ணம் கிரக ஆராய்ச்சியாலேயே அறிந்து கூறுதல் வேண்டும். செவ்வாய் கொல்லான் என்றதற்குக் காரணம் என்னவெனில்? மாரக ஸ்தானங்களில் ஒன்ருகிய 2-ஆம் ஆதிபத்தியம் செவ்வாய்க்கு இருக்கினும், 9-ஆம் ஆதிபத்தியமும வந்ததால் மேற்படி செவ்வாய் மாரகம் செய்யும் பலம நீங்கி யோகம்தரும் பலமுடையவன் ஆகிருன் என்பதே இதன் முக்கிய கருத்து. இதுவரையில் கூறிவந்த மாரகர் யோகர் சுபர் பாவர் என்பதை அந்தந்த லக்கினங்களுக்குச் சொல்லியபடி திட்டமாய்த் தெரிந்து கிரக ஆராய்ச்சியால் நிலைகூறுவது நலம். 62

சுபாசுபர்களைப் பொதுவிற் கூறுகின்றது

நல்லார்போல் லார்களென்று நாடி நவிலாத
எல்லாரு மிவ்வுலகோர்க் கேந்திழையாய்—சொல்கின்ற
தானமதற் குந்தம்மைச் சார்ந்தக வாசத்திற்
கானுகுலமா யீவராய்ந்து.

(பொ-ரை) ஆபரணங்களை அணிந்தவளே! பூமியிலுள்ளவர்கட்குச் சுபா சுபர்களென்று குறித்துச் சொல்லாத எல்லாக் கோட்களும் எல்லாருஞ் சொல்லுகின்ற தங்கள் தானத்துக்குஞ் சுபாளுடன் பிறர் சம்பந்தமுற்றிருக் கிறதற்கும் அனுகூலமாய் பலன்களைக் கொடுப்பார்களென்று ஆராய்ந்து சொல்வாயாக என்பதாம்.

(வி-ரை) சுபர்கள் பாபசம்பந்தப்பட்டுத் துஸ்தானங்களிலாவது மாரக ஸ்தானங்களிலாவது இருந்தால் பாபபலனைக் கொடுப்பார்கள்; பாபிகள் சுப சம்பந்தப்பட்டுக் கேந்திர திரிகோணங்களில் இருந்தால் சுபபலனைக் கொடுப் பார்களென்க. சுபர்கள் பாவர்கள் சம்பந்தமோ, பாவஸ்தானமோ பெற் றிருந்தால் பாவபலனே கொடுப்பார் என்றனர். ஏனெனில், சுபனுடன் பாவர் சேர்ந்தாலும், பாவராசியில் இருக்கினும், மேற்படி சுபகோளினது நற்குணம் நீங்கி துற்குணம் உண்டாகுங் காரணத்தால் துற்பலனையே தருவார் என்பது

எல்லா சாஸ்திரங்களாலும் கூறப்பட்டுள்ளன. இங்கு சுபர்கள் என்று கூறியதும் பாவர் என்று கூறியதும் தினசரிப்படி கூறிய சுபனையும் பாவனையுங் குறிக்குமேயொழிய, ஆதிபத்தியத்தால் சுபன் பாவனாவதையும், பாவன் சுபனாவதையுங் குறித்துக கூறவில்லை என்பதறிக.

“பாரதனிற் சுக்கிரனும் பண்டேவர் தங்குருவும்
மாரககேந் திராதிபதி யானக்கால்—தேர்மிகவும்
பாவியவர் பின்னும் புகர்புதி பாவியலாற்
றேய்மதியும் பாவியாந் தோ”

என்றமையால், சுபர்களெனக் கூறும் குரு சுக்கிரன் என்னும் இருவரும் மாரகாதிபதியாய் வந்தாலும், கேந்திராதிபதியாய் வந்தாலும், கொடிய பாவனவன். மற்றும் தேய்பிறைச் சந்திரனும் புதனும்கூட பாவியாவர் என்றனர். இதனல், சுபகோட்கள் பாவர் சமபந்தப்படினும், கொடிய க்ஷேத்திரம் பெறினும், மகா கொடியவராவர் என்று திண்ணமாய்க் கூறவேண்டியதாகிறது. பாவர்கள் சுபசம்பந்தப்பட்டாலும், சுபருடன் கூடினலும், சுபபலனைத் தருவார் என்றனர். இதற்கும முன்கூறிய சுபகோளானது எவ்வாறு பாவா சேர்க்கையாலும், க்ஷேத்திரத்தாலும், பாவராகின்றனரோ அவ்வாறே பாவர்கள் சுபர் சம்பந்தத்தாலும், சுபக்ஷேத்திரத்தாலும், சுபராகின்றனர் என்றே கூறவேண்டியதாகும். அவையாவன:—சுபருடன் பாவர் கூடில் மேற்படி சுபர் தரவேண்டிய பலனை பாவர்கள் தருவார் என்பதேயாகும்.

“தேறுமது பாவிகளில் சேய்கேந்தி ராதிபனய்
ஆறிலவன் நல்லன் அல்லாமல்—வீறுசனி
நல்லன் அதைவிட்டால் நன்கிரவி தானுஞ்சேய்
வல்லகோ ணேசனெனின் மாண்பு”

என்று கூறியதால், கொடியோர்கள் எனக்கூறும் சூரியன்-செவ்வாய் சனி இவர்களில கேந்திர ஆதிபத்தியம செவ்வாய்க்குவரில் சுபனவன். அதிலும் சனிக்கு கேந்திராதிபத்தியம்வரில் செவ்வாயைவிட நல்லவன். செவ்வாய் சனியைவிட சூரியனுக்கு கேந்திரம்வரில் மேற்சொன்ன இருவரிலும் மேலான சுபன என்றும, செவ்வாய்க்கு கோணதிபத்தியம்வரில பூரண சுபன் என்றுங் கூறியுள்ளதால், சுபன் பாவனவனும், பாவன் சுபனவனும் சகஜமாகலின பொதுபபலன் சொல்லும்போதும், பாவாத பாவலன் சொல்லும்போதும், இவ்வாருன விஷயங்களை ஆராய்ந்து கூறுவது முக்கியம். இதனலேயே சுபர் பாவபலனையும், பாவா சுபபலனையும் தம் தமது திசையில் தருவர். 63

ஸ்தானபலன் பகர்கின்றது

புத்திரதா ராதிகளைப் போற்றுகின்ற பாவத்திற்
கொத்தசுபக்கோட் டெசையி லொன்பொசிப்பிற்—புத்திரர்தா
ரம்முதலாய்ப் பேரளிப்ப ராயிழையா யார்கலிசூழ்
அம்புவி வாழு மவர்க்கு.

(பொ-ரை) ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை யுடையவளே! கடல் சூழ்ந்த பூமியிலுள்ளவர்களுக்குப் புத்திரகளத்திர தான முதலான ஸ்தானத்துக்கொதத சுபக்கிரகங்களுடைய திசாபுக்திகளிற் புத்திர தாராதி சுபபலன்களை பெறும்படி கொடுப்பார்கள் என்பதாம்.

(வி-ரை) புத்திரதாராதி ஸ்தானங்களுக்கொத்த சுபாவது அத்தானாதி பதிகளும் காரகாளுந்தான். இச்செய்யுளால் புத்திரரையும், களத்திரத்தையும் கொடுக்கத் தகுந்த கோட்கள் அந்தந்த ஸ்தானாதிபதியும் காரகனுமேயாவர் என்றனர். அவையாவன:—புத்திரனைக் கொடுப்பவனோ, கெடுப்பவனோ, 5-ஆம் வீட்டவனும் குருவும் எனவும், களத்திரத்தைக் கொடுப்பவனோ, கெடுப்பவனோ 7-ஆம் வீட்டவனும் சுக்கிரனும் எனப்படும். ஆதலால் புத்திர விஷயத்தை இங்கு கவனிப்போம். பொதுவிதியாவது என்னவெனில் 5-ல் இரவி நிற்கில் பிதாவுக்கு தோஷம் செய்யும். சந்திரன் - புதன் நிற்கில் தாய்க்கு தோஷம் செய்யும். குரு நிற்கில் பிதுர்வர்க்கத்தவருக்கு தோஷம் செய்யும். சனி நிற்கில் அந்த ஜாதகனுக்கே தோஷம் செய்யும். செவ்வாய் நிற்கில் தாய் மாமன் என்னும் அம்மானுக்கு தோஷம் செய்யும். இராகு-கேது நிற்கில் புத்திராளுக்கு தோஷம் என்பதாம். பொதுவாய் எல்லா சோதிடர்களும் 5-ல் இராகு அல்லது கேது நிற்கில் புத்திரதோஷம் உண்டென்று கூறிவிடுவதும், புத்திரர் பிறந்தாலும் மரிப்பார் என்பது சகஜம் ஆயினும் பிறப்பதும் மரிப்பதும் சகஜம். ஆதலால் இருப்பது எத்தனை என்பதையும் புத்திரர் நிலைத்திருப்பாரா? இல்லையா? என்பதையும் ஆராய்ந்து முடிவு செய்வதே சோதிடர்கள் கடமை. ஆதலால் அவ்வாறான விஷயங்களை இங்கு ஆராயப்புகுவாம்.

மேற்கூறிய செய்யுளில் 5-ஆம் வீட்டவனும் குருவுமே புத்திரர்களைக் கொடுக்கவோ, கெடுக்கவோ ஆதிபத்தியம் உள்ளவர்கள் என்றபடி 5-ஆம் வீட்டவனும் குருவும் பல காரணத்தால் பலவீனனாகில் புத்திரர் இல்லை எனவும், மேற்படி இருவரும் பல காரணத்தால் பலம்பெற்றிருக்கில் புத்திரர் உண்டென்றும் கூறுவதே கடமையாகும். இங்கு பலமடைவது எப்படி? பலம் இழப்பது எப்படி? என்பதைக் கூறுவாம். புத்திராதிபனாகிய 5-ஆம் வீட்டோன் புத்திரஸ்தானத்திற்கு 4-7-10 என்னும் க்ஷேத்திரமாகவோ ஜென்ம லக்கினத்திற்கு 5-9-2-11 என்னும் இடத்திலோ நின்றும், புத்திர காரகனாகிய குருவும் மேற்கூறியவாறே 2-5-9-11 முதலிய இடங்களில் ஆக்ஷி உச்சம்-நட்பு-சமம் முதலியவற்றால் பலம் பெற்றிருக்க அந்த ஜாதகனுக்குப் புத்திரருண்டு.

முன்கூறிய 5-ஆம் வீட்டதிபன் தன்னுடைய ஸ்தானத்திற்கு 3-6-8-12 முதலிய க்ஷேத்திரங்களில் இருந்தாலும், ஜென்ம லக்கினத்திற்கும் மேற்சொன்னவாறு 3-6-8-12-ல் நின்று நீச்சம்-பகை-அஸ்தமயம்-மூடம்-கொடியோர் பார்வை-சேர்க்கை முதலிய காரணங்களால் பலவீனம் பெற்றும், புத்திரகாரகனாகிய குரு ஜென்மலக்கினத்திற்கு, 6-8-12-ல் நீச்சம்-பகை-மூடம்பெற்றும், புதன வெள்ளி இவர்களுடன கூடியும் இருந்தால் அந்த ஜாதகனுக்குப் புத்திரர் இல்லை. இவை பொதுவிதியேயாகும். 5-ல் இராகு அல்லது கேதுநின்று ஐந்தாம் வீட்டோன் தன் சுயக்ஷேத்திரத்திற்கோ, அல்லது ஜென்ம லக்கினத்திற்கோ, கேந்திர கோணங்களால் பலம்பெற்று முன் சொன்னபடி குருவும் பலம் பெற்றிருக்கில், சர்ப்பமிருந்த தோஷத்தால் முதலில் சில புத்திரர்கள் நாசமாயினும் கரும புத்திரர் உண்டு. 5-ஆம் வீட்டோன் மேற்கூறிய வண்ணம் பலம்பெற்றாலும், 5-ஆம் வீட்டவனுக்கு பகைவன் எவனோ அவனுடன் கூடி, சனி-செவ்வாய்-ராகு-கேது இவர்களுடன் கூடினாலும், பார்த்தாலும், அந்த ஜாதகனுக்குப் புத்திரர்கள் பிறப்பாராயினும், உடனுக்குடன் மரித்துப்போம்.

மேற்கூறியவண்ணம் 5-ஆம் வீட்டோன் பலம் பெற்றும், சேர்க்கை பார்வை முதலிய காரணத்தால் பலமிழந்திருந்தால் புத்திரர்கள் பிறந்து

இறந்துபோவார் என்றாலும், புத்திர காரகனாகிய குரு கோணாதிபதியாகி கேந்திரத்தில் இருந்தாலும், கேந்திராதிபதியாகி கோணத்திலும் இருந்தால் அவனுக்கு கருமபுத்திரனுண்டு. 5-ஆம் வீட்டுக்குடையோன் 6-8-12-ல் நின்று சுபகோட்கள் நோக்கமின்றி இருந்தால் அவனுக்குக் கருவுற்பத்தியே இல்லை. 5-க்குடையோனும் இராகுவுங்கூடி 8-ல் நின்றாலும், கேதுடன் கூடினாலும், அந்த ஜாதகனுக்கு புத்திர உற்பவம் இல்லை என்றாலும், தத்து புத்திரர்கள் உண்டாவர். 5-ஆம் வீட்டோன் மேற்கூறிய வண்ணம் இராகு கேதுடன்கூடி எட்டில் இருந்தாலும் புத்திரகாரகனாகிய குரு 7 9-ஆம் அதிபதியாகி 10-ல் இருந்தால் அந்த ஜாதகனது விருத்தகாலத்தில் கருமபுத்திரன் பிறப்பான். 5-ஆம் வீட்டோன் மேற்கூறியபடி பல காரணத்தால் பலவீனப்பட்டாலும், 9-ஆம் வீட்டோன் 10ல் நின்றும் குரு கேந்திர கோணங்களில் ஆக்ஷி உச்சம்பெற்று இருந்தால் அந்த ஜாதகனுக்கு பல புத்திரர்கள் பிறந்து இறந்தாலும் கருமஞ்செய்ய ஒரு புத்திரன் நிலைப்பான். 5-ஆம் வீட்டோன் எந்த கிரகமாயினும், மிதுனம்-கன்னி என்னும் இடங்களில் தனித்து நிற்கின், அந்த ஜாதகன் மலடனாவான். சுபர்களின் பார்வை சேர்க்கை முதலியன உள்ளதாயின், பிறந்து இறந்துபோம். மற்றும் விஷயங்களை எம்மால் வெளியிட்டுள்ள **சோதிடக் களஞ்சியம்** விருத்தியுரையில் தெளிவாய் காணலாம்.

களத்திர விஷயமாய் 7-ஆம் வீட்டுக்குடையவனைக் கொண்டும், களத்திர காரகனாகிய சுக்கிரனைக்கொண்டும், தெரிந்துக்கொள்ள வேண்டுமெனக் கூறியபடி 7-ஆம் வீட்டுக்குடைய கிரகம் எவை?, அந்த கிரகம் எந்த காரகத்தைச் சேர்ந்ததோ அந்த வழியில் இந்த ஜாதகனுக்கு களத்திரம் வரும். எப்படியெனில்? சூரியனாகில் பிதுர்வகையிலும், சந்திரனாகில் மாதுருவகையிலும், செவ்வாயாகில் சகோதர வகையிலும், புதனாகில் அம்மான் வகையிலும், குருவாகில் பழைய பந்துவிலும், சுக்கிரனாகில் சுயபந்துவிலும், சனியாகில் நூதன பந்துவிலும் கிடைக்கும். இவை பொது விதியாகும். மற்றும் களத்திரத்தின் நிறத்தைச் சொல்லவேண்டுவதெனில், சூரியனாகில் சிவந்த நிறமும், சந்திரனாகில் வெண்மை நிறமும், செவ்வாயாகில் சிவந்த நிறமும், புதன்-சனியாகில் கறுத்த நிறமும், குருவாகில் பொன் நிறமும், சுக்கிரனாகில் சமநிறமும் உடைய பெண் கிடைப்பாள்.

மற்றும் குணாதிசயங்களைக் கூறுமிடத்து, 7-ஆம் வீட்டோன், சூரியனாகில் வாயாடி, சந்திரனாகில் பொறுமையுடையவள் பத்தினி, செவ்வாயாகில் எல்லோருக்கும் நல்லவள், புதனாகில் தந்திரவதி, குருவாகில் சத்தியமும் பக்தியும் உடையவள், சுக்கிரனாகில் ரூபவதியும் சமயதந்திரமும் அறிந்தவள், சனியாகில் துன்மார்க்கி என்றுங் கூறுக. 7-ஆம் வீட்டோன் எத்தனை கிரகங்களுடன் கூடினானோ அத்தனை விவாகம் செய்துக்கொள்வன். 7-ஆம் வீட்டோன் பல கிரகங்களுடன் கூடினாலும், தான் இருப்பது ஆக்ஷிவீடாயின் விவாகம் ஒன்றேயாகும். 7-ஆம் வீட்டோன் எந்த கிரகமாயினும், ஜென்ம லக்கினத்திற்கு 3-6-8-12-ல் நிற்க அவனுக்குக் கிடைக்கும் களத்திரத்தால் இவனுக்கு எவ்வித சுகமும் இல்லை. 7-ஆம் வீட்டோன் எந்த கிரகமாயினும், ஜென்மலக்கினத்திற்காவது, சந்திர லக்கினத்திற்காவது, கேந்திரகோணங்களில் பலம் பெற அவனுக்குக் கிடைக்கும் மனைவியால் எல்லா பாக்கியமும் உண்டு. 7-ஆம் வீட்டோன் ஜென்ம லக்கினத்திற்கு 3-6-8-12-ல் நின்று பகைபெற்றும், பகைவருடன் கூடியுமிருந்து இராகு கேதுவால் பார்க்கப் பட்டால் அவனுக்கு விவாகமில்லை. ஆயினும் நீச்ச ஸ்திரீபோகம் செய்வான் என்பதாம்.

இதுவுமது

கோட்சாரங் கொண்டு குறிப்பதல்லான் மானவர்தம்
நாட்பலனன் ஞன்முகனை யன்றியே—வாட்கண்ணாய்
ஆர்வல்லார் கூறுவதற் கார்வல்லார் கேட்பதற்கே
யார்வல்லா ராராய்வ தற்கு.

(பொ-ரை) வாள்போலும் கண்களை யுடையவளே! மனிதர்களுக்குத் தினபலன் சொல்வதற்குச் சோதிட நூல் வல்லவர்கள் கிரகசாரங்களைக் கொண்டு யுக்தியாகச் சொல்லிக் காண்பிப்பார்களேயன்றித் தாரதன்மியங்களைப் பிறிவினையாய்ச் சொல்லவேண்டுமென்றால் பிரமதேவன் ஒருவனைத் தவிர சொல்வதற்கும், கேட்பதற்கும், ஆராய்வதற்கும், யார் வல்லவர்? என்பதாம்.

(வி-ரை) இச் செய்யுளின் முதலில் "கோட்சாரங் கொண்டு" என்றதால் கிரகங்களிருக்கும் பலாபலத்தைக்கொண்டு, என்று குறிப்பிடவேண்டியதாயிற்று. மற்றும் இச் செய்யுளினது முக்கிய கருத்தாவது என்னவெனில்? அவ்வவர்களுடைய ஜாதக கிரகத்தின் இடம் பலம் முதலியவற்றை தெள்ளிதாய் அறிந்து அவரவர்களுக்கு உண்டாகும் காலபலன்களையும், பலங்களையும் தோராயமாய் அல்லது தாரதம்மியமாய் கூறலாமே யொழிய, இன்னின்னவை நடக்கும் என்பதை முன்னதாய் அறிந்தவர் பிரம்மதேவரைத் தவிர வேறு எவராலும் கூறுதற்கரிது என்பதேயாகும்.

சோதிடம் கேட்டு நன்மை யடைந்தவரும், நன்மை யடையாதாரும் இதைச் சம்மதித்தே தீருவர். உதாரணமாக சோதிடத்தால் நன்மை யடைந்தவருங்கூட நான் எனது ஜாதகத்தைப் பார்த்தேன். சோதிடர் எனது வயது 19-3-26-ல் தாய் மறிப்பாள் என்றனர். ஆயினும் 19-3-10-ல் தாய் உயிர் விட்டாள் என்றே கூறுவர். இதனால் சோதிடம் பிசகில்லை ஆயினும் சோதிடம் சொல்வோர் மேற்படி கோட்சாரம் என்பதை சரியாய் அறியவில்லை என்று கூறவேண்டுவதாகிறது. இதனாலேயே இந்நூலாசிரியரும் பிறருக்குச் சொல்லும் வரும்வினைகளைத் தோராயமாய் அறியலாமே யன்றி, நிச்சயமாய் அறிபவர் பிரம்மனைத் தவிர வேறில்லை என்றனர். ஏனெனில், மேற்படி கிரகங்களினது பலத்தைத் தெள்ளற எவராலும் அறியமுடியாது. ஆயினும் தோராயமாய் அறியலாம் என்பதே கருத்தாகும். கிரகங்களானது ஆகாயத்தில் அந்தரமாய் நின்று பிரகாசிக்கும் தன்மையுடையது. ஆதலால் மேற்படி கிரகங்களுக்கு ஓர்வித அந்தர சக்தியுண்டு என்பதை எவரும் மறுக்கமுடியாது.

மேற்படி அந்தர சக்தியானது பல காரணத்தால் கண் இமைகொட்டும் நேரத்தில் தன் சக்தி மாறலாம். அது எவ்வாறெனில் எனின்? தன்னைப் போன்று அந்தரத்தில் நின்று பிரகாசிக்கத்தகுந்த கிரகங்கள் நாம் குறித்த கிரகம் இருக்குமிடத்திற்கு வருவதாலும், நெடுந்தூரமிருந்தாலும், ஒருவரது ஆக்ருஷ்ண சக்தி ஒருவர்மீது வீசுவதாலும், பூமியானது சுழலும் தன்மை உடையதாதலால் பூமியினது இயற்கை சக்தியும், செயற்கையாய் மாறுவதாலும், அப்போதைக்கப்போது கிரகங்களது சக்தி மாறிக்கொண்டேவரும் என்பது விளங்குகிறது. மற்றும் மேற்படி கிரகங்களது ஆக்ருஷ்ண சக்தியும், மேற்படி கிரகத்திற்குள்ள இயற்கை சக்தியும், பல காரணத்தாலுண்டாகும் செயற்கை சக்தியையும், கணித சாஸ்திரத்தால் அறியலாம். ஆயினும்,

மேற்படி கிரகசக்தியை அறிந்த பலர் பலவித அபிப்பிராயப்படுவர். எப்படி எனில்? சூரியனுடைய சுயகுணத்தையும் பிற்காலங்களில் பல மாறுதல்களால் ஏற்பட்ட செயற்கை குணத்தையும் அறிந்தபின் நாம் இருக்கும் பூமியினது சுழற்சியின் மாறுதலால் ஏற்பட்ட செயற்கை குணத்தையும் அறிந்த பலர் பல அபிப்பிராயப்படலாம். ஏனெனில்? அவரவர்களது யுக்தி புத்திக்கு எட்டியவாறு பல அபிப்பிராயங்களைக் கூறலாம். இவர்களது அபிப்பிராயம் பலவாறுயினும் அவர்களது அபிப்பிராயம் ஏற்றக்குறைவாய் இருக்கலாமே யொழிய நிச்சயமாய் இராது. ஏனெனில்? இதனைப் புத்தகவாயிலாய் எழுதி வைத்ததில்லை. எழுதிவைத்தவரும் மேற்சொன்னவாறு தன் அறிவிற்கு ஏற்றவாறு ஆராய்ச்சி செய்து எழுதிவைத்ததே யொழிய மேற்படி கோட்களை நேரில் கண்டுபேசி எழுதிவைத்ததல்ல. தேவர்களுக்கூட மேற்படி கிரகங்களது சக்தியை அறிய முடியவில்லையெனில், நம்போன்றோர் அறிவது மிக்க கடினமேயாகும்.

தேவர்களுக்கூட கிரகங்களது சக்தியைத் தனது அனுபவத்தால் ஏறக்குறைய அறிந்தாராயினும், பிற்கால மாறுதல்களால் இவ்வாறு மாறலாம் என்றே பலர் பல கருத்துடன் தேவசபையில் கூறியதாய் சாஸ்திரங்களில் கூறியுள்ளன. உதாரணமாக ரிஷிக்கூட்டங்களில் மிக்க சிறப்பு பெற்ற வசிஷ்டரிஷியும், விஸ்வாமித்திரரும், இந்த கிரகங்களது சக்தியை தேவ சபையின்முன் விசாரிக்கையில் இவ்விருவரும் ஒருவர்க்கொருவர் முரண்பாடாகக் கூறியதாயும், இதனைக் கேட்டிருந்த தேவேந்திரரும், மற்றையோரும் உங்கள் இருவருள் எவர் கூறியது நிச்சயமெனக் கேட்டதாயும், இதனை ஈசனே அறிவன் என்றுகூறி மேற்படி இருவரும் ஈசனிடம் சென்று தங்கள் தங்கள் கருத்தைக் கூறியதாயும், மேற்படி ஈசன் இவ்விருவருங் கூறியதைக் கேட்டு, எவை உண்மை என்பதைக் கூறியதாயும், அதன் பிறகே மேற்படி இருவரும் தேவசபையில் ஈசன் கூறியதைக்கூறி யாங்கள் இருவருங் கூறிய விஷயங்களில் இவை சரி, இவை சரியல்லவென்று கூறிப் பின்பு சமாதான மடைந்ததாயும், சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வாறு இவர்கள் தர்க்கம் செய்த சோதிட சாஸ்திரத்துள் கொஞ்சபாகமே வசிஷ்ட விஸ்வாமித்திரர் தர்க்கம் என்றும், கௌசிக சிந்தாமணி என்றும், வசிஷ்ட சிந்தாமணி என்றும் வெளிவந்துள்ளன. இவை ஒருபுறம் இருக்க, சேர சோழபாண்டிய காலத்தில் பாண்டிய அரசரிடமிருந்த சோதிட பண்டிதர்களில் ஒருவர் ஓர்நாள் அவரிடம் சென்று இன்னும் சிலகாலத்துள் நம் நாட்டிற்குப் பஞ்சம் வரும் என்று கூறியதாயும், அதற்கு அரசன் நம் நாட்டில் பஞ்சமவரக் காரணமென்ன? என் செங்கோலால் என்ன பழுதடைந்தனவென்று வினவும் போது அரசே! தங்கள் செங்கோலில் எக்குறைவும் இல்லையாயினும், ஆகாயத்தை நோக்கியவிடத்து,

"காலமங்கதிலு ரோகணியிற் கதிரவன் புகுத
வாலவெவ் வரவடுத்த வீருவாவினு மழன்று
கோலவெஞ் சுடர்தண் சுடரிரண்டும் வாய்க்கொள்ள
ஞாலமைந்தனும் வெள்ளியும் இகல்பட நடந்தார்"

ஓ அரசனே! செவ்வாயும் வெள்ளியும் வக்கிரித்தார், ரோகணியில் சனி பிரவேசித்தது ஆனதால் பஞ்சம் உண்டாகும் என்று கூறிய 15-நாளில் சூரிய சந்திர கிரகணங்கள் உண்டாகியது. ஆனதால் பாண்டிய நாடானது காலையில் பனி பெய்வதும், உச்சி காலத்தில் மேகங்கள்கூடி அருக்கனை மறைப்பதும், மாலையில் மேகங்கள் மறைந்துபோய் மழையில்லாது போயின வென்றும், இதனால் பாண்டிய நாடானது அளவில்லாப் பஞ்சத்துக்காளாகி

வறுமைமேலிட்டு உண்ணவும், உடுக்கவும் வகையின்றி வருந்தியதால், தாய் தந்தையர்களே தம் மக்களைத் தின்றனர் எனவும், அளவில்லாத் துன்பத்திற் காளானார்கள் என்றும், பண்டைய சாஸ்திரங்கள் கூறுவதை அறியலாம்.

ஆனதால் கிரகங்களது சக்தியை எவராலும் மாற்றமுடியாது என்றும், மேற்படி கிரகங்களது சக்தியை எவராலும் நிச்சயமாய் அறியமுடியாது என்றும், சுருதிவாயிலாக அந்தந்த கிரகங்களினது சக்தியை அறிந்து தன் யுக்தியால் அதனைப் பரிசீலனை செய்தும், அனுபவத்தால் ஏறக்குறைய பிறருக்குச் சொல்லவும் முடியும் என்று கூறவேண்டியதாகிறது. அப்படிக்கின்றி, ஸ்நானம் செய்யும்போது பொருளின்மீது ஆசையும், கரை ஏறியபோது என்ன போஜனம் கிடைக்கிறதோ என்ற விசாரமும், பூஜை செய்யும்போது மனைவி மக்களைப்பற்றிய விசாரமும், வாசிக்கையில் பலவித விசாரமுமாக இருந்தால் இந்த சோதிடசாஸ்திரத்தை யல்லாது வேறு எந்த விஷயங்களையும் அறியமுடியாது. அப்படி அறிந்தவர்களானாலும், அப்படிப்பட்டவர்களிடம் கேட்டுக்கொண்ட சாஸ்திரமும், குருடன் வைகுந்தத்திற்கு வழி காட்டியதற்கு ஒப்பாகும். மற்றெல்லா சாஸ்திரங்களுக்கும் வழிகாட்டியா யிருப்பது இந்த சோதிட சாஸ்திரமேயாகும். இதனாலே சோதிடனுக்குரிய விதி என்ன என்பதை விளக்கிய பல அறிஞர்களுள் ஒருவர் கூறியதாவது.

“சொல்லருங் குலத்துவந்தோன் சுருதிகள் பலவுமாய்ந்தோன்
எல்லையில் லாதபக்தி யீசனாரிடத்து முள்ளோன்
தொல்லையு மில்லானாளும் துற்செய்கை தானுமில்லான்
கல்லெனும் நெஞ்சமுள்ளோன் கனபொரு ளாசையில்லான்”

இதுவுமது

“செயமொடு வீரம்ஆண்மை தீரமும் கோபமில்லான்
நயமுளோன் கள்காமத்தை நாளினும் நினைக்காதானும்
உயர்வுசேர் கணிதம்சொல்ல உரியவ னாகுமென்று
தயவுள முனிவர்சித்தர் தாமுரைத்தனர் அன்றோளே”

என்றபடி, நற்குலத்தில் பிறந்தவரும் பல சாஸ்திரங்களை ஆராய்ந்து எந்நாளும் ஈசனிடம் நீங்காத பக்திபூண்டு தொல்லையில்லாமலும், துற்சன நேசமில்லாமலும், பச்சாபாதமின்றி (சமயத்திற்கு ஏற்றவாறுரையாது) கல்நெஞ்சமுடையவரும், பொருளாசை இல்லாதவரும் ஜெயமடையவேண்டும் என்ற வீரம், ஆண்மை, தீரம், உச்சாகத்துடன் எவர் என்ன கேட்கினும் கோபமின்றி பதிலுரைக்கத் தக்கவர்களே சோதிட சாஸ்திரத்திற் குரியவர். அப்படிப்பட்ட உத்தமர்களிடத்திலேயே சோதிடம் கேட்கவேண்டும். மேற் சொன்ன குணமில்லாதவர் சோதிடத்திலுள்ள எந்த விஷயமும் அறிய முடியாது. மேற்படி குணம் அமைந்தவர்களோ இன்றைக்கு இன்னவை நடக்கும் என்று கூறுவிடினும், இக்காலம் இன்னவை நடக்கலாம் என்று
வது கூறமுடியும். இதனையே நம் நூலாசிரியரும் கூறிப் போந்தனர். 65

இதுவுமது

* ஒப்பற்றயோகத் துடனே பிறந்தோர்க்கும்
தப்புசுபர் யோகதிசை தானிலையேல்—எப்பயனும்
கொத்தலருஞ் செங்குங் குமப்பூப் பொதிசுமக்கும்
கத்தபத்தை யொப்பரவர் காண்.

(பொ-ரை) அவரவர்களது கிரக அடைவியால் ஒப்பற்ற யோகம் உண்டாக கிரகம் அமைந்திருந்தாலும், மேற்படி யோகத்தைத்தரும் கிரகங்களின் திசை வரவில்லையானல் யோகத்துடன் பிறந்தும் என்ன பயன்? அவர்கள் எதற்கு ஒப்பாவார்களெனில், வாசனை நிறைந்த குங்குமப்பூவின் பொதியை சுமந்துசெல்லும் கழுதைக்கு ஒப்பானவர்களேயாகும். ஏனெனில்? யோகத்தைத் தரத்தகுந்தவர்களது திசை வாராததாலென்க என்பதாம்.

(வி-ரை) குங்குமப்பூப் பொதியை சுமந்துசெல்லும் கழுதையானது அதன் வாசனையைக்கண்டு இதனைச் சாப்பிட வேண்டும் என்னும் எண்ணம் இருந்தாலும் கிடைக்கப்போவதில்லை. அதுபோல யோகத்தில் பிறந்தாலும், யோகத்தைத் தருபவன் திசை வாராததால் இவன் அனுபவிக்கப்போவதில்லை. ஆயினும், கழுதையானது மேற்படி குங்குமப்பூ தம் முதுகில்தானே இருக்கிறது சாப்பிடுவோம் சாப்பிடுவோம் என்ற நினைப்புடன் கடைசியில் தானே இறந்துபோவதைப்போல் யோகத்தில் பிறந்தவன் யோகத்தை அடையலாம் என்ற எண்ணத்துடன் பலவித முயற்சிசெய்தும், யோகத்தைத் தருபவன் திசையில்லாததால் தனக்குள்ள யோகத்தை அடையமுடியாமல் கடைசியில் மரணம் அடைகிருன். நாய் ஓர் தேங்காயைத் தூக்கிக்கொண்டு இதை உடைத்துத் தின்னலாம் எனத் தன் வாயால் மேற்படி தேங்காயின்மேல் இருக்கும் மட்டைகளைக் கடிக்கும். ஆயினும் மேற்படி முழுத்தேங்காயைக் கடிக்கவும் முடியாது, உடைக்கவும் முடியாது, ஆனல் அதன் ஆசை விடுவதில்லை. இதைப்போலவே யோகத்தில் பிறந்தவன், தேங்காயைப்பற்றிய நாய் அடைந்த ஆசையைப்போல் ஆசைப்படுவானுயினும் மேற்படி நாயானது மேற்படி தேங்காயை உடைத்து சாப்பிட முடியாததுபோல் தானும் மேற்படி யோகத்தை அடையமுடியாதவன் ஆகிருன். ஆயினும் ஆசை விட்டபாடில்லை. ஒருவனுக்கு பிரபலயோகத்தைத் தரத்தக்கபடி கிரகம் அமைந்திருக்கினும், அந்த கிரகத்தினது திசை இவன் ஆயுள் முடியும் வரையில் வருவதில்லை; என்ன செய்வான் பாபம். சோதிடர்கள் சொல்வதோ அளவில்லை.

"ஆமேடம் எருதுசுரு நண்டுகன்னி
ஐந்திடத்தில் கருநாகம் அமர்ந்திருக்கில்
பூமேடைத் தனிற்றுயிலும் ராஜயோகம்"

என்ற பாட்டை பாடிவிடுகின்றனர். கேட்பவர் பிரம்மானந்தத்தில் மூழ்கினவராய் அந்த யோகத்தையும் ஜோதிஷர் கூறிய அந்தஸ்தையும் அடையபடும்பாடு சொல்லமுடியாது. கடன் வாங்கியாவது பிரபல வியாபாரத்தை ஆரம்பித்து விடுகின்றனர். என்னபலன்? திசை யிருந்தால்தானே கிட்டும். சோதிடர்கள் அந்த திசை வருகிறதா, வந்திருக்கிறதா, வந்து போய்விட்டதா என்று சொல்வதுமில்லை. கடைசியில் எவ்வித சுகத்தையும் அடைய முடியாது இலவங்காத்த கிளிபோல் ஆகின்றனர். முடிவில் மரணமாகின்றனர். ஆனதால் சோதிடர்களின் கடமையாவது என்னவெனில்? யோகத்தில் பிறந்தவனுயினும், யோகத்தைத் தருபவன் திசை வருகிறதா? இல்லையா? என்பதையும், யோகதிசை வரும் என்றே ஏற்படுமாயின் எந்த வயதில் வருகிறது? என்பதை ஆராய்ந்து சொல்லவேண்டுவதாகும். யோகத்தில் பிறக்காதார்க்குக் கவலையில்லை. அந்தந்த திசாநாதன் குணத்தின்படி ஸ்தானபேதப்படியும் நடந்தே தீரும். யோகம் உண்டு என்று ஏற்படின் எந்த வயதில் என்பதை ஆராயவேண்டும்? ஆனல் அவன் ஆயுள் முடிவதற்குள் மேற்படி யோகத்தைத் தருபவர் திசை வரவில்லையேல் அந்தந்தத் திசைக்கேற்றவாறு நல்லோர்

திசையில் நற்பலனும், தீயோர் திசையில் தீப்பலன் உண்டாகும் என்பது திண்ணம். இவ்விவரத்தையே கீழ்வரும் செய்யுளாலும் விளக்குவார். 65

இதுவுமது

போகமதி லுற்பவித்து மோங்கும் பயனின்றித்
தாகமிக வுற்றிருப்பார் தாரணிக்குள்—வாகான
காஸ்மீர கண்டக் கழுதைகளென் செய்யுமவர்
தேசுதெசை சேரா விடில்.

(பொ-ரை) மேற்கூறியபடி யோகத்தில் பிறந்தவர்களுக்கு மேற்படி யோககாரகன் திசை வரவில்லையேல் அவர்கள் எவ்வாறு இருப்பாரெனில், யோகத்தையடைய ஆசையுள்ளவர்களாய் அலைந்து அலைந்தும் அடைய முடியாமற் போவார். இவை எதற்கு ஒப்பாகுமெனில்? காஸ்மீரதேசத்தில் பிறந்த கழுதைக்கு ஒப்பாவர் என்பதாம்.

(வி-ரை) "கழுதையாய்ப் பிறந்தாலும் காஸ்மீரகண்டத்தில் பிறக்க வேண்டும்" என்பது பழமொழி. ஏன்? மேற்படி தேசம் ஓர் புண்ணியதேசம். புண்ணிய நதிகள் பல உள்ளது, புண்ணியர்கள் அநேகர், புண்ணிய புருஷரான சிவபிரான் திருக்கோலங்கொண்டிருக்கும் திவ்விய க்ஷேத்திரம். அந்த தேயத்தை அல்லது அந்த க்ஷேத்திரத்தில் பிறப்பவர், பூர்வத்தில் புண்ணியம் செய்தவர்களே பிறப்பார்களாம். ஏனெனில்? மேற்படி புண்ணிய நதியில் மூழ்குவதும், புண்ணிய புருஷரான விஸ்வேசரை தரிசிப்பதும் புண்ணிய புருஷர்களான உத்தமர்களது சவகாசமும் வேண்டும் என்றால் அவை பூர்வ புண்ணியந்தானே. ஆனல் அப்படிப்பட்ட புண்ணியதேசத்தில் பிறந்த கழுதைக்கும் மோக்ஷமுண்டாகி அடுத்த ஜன்மம் தனது சாபம் நீங்க ஓர் புண்ணிய ஆத்துமாவாய் ஆறு அறிவுடைய மனிதனய்ப் பிறந்து அந்த ஜன்மத்திலாவது, புண்ணியத்தைச் சம்பாதித்து மோக்ஷமடையும் என்பது சாஸ்திரம். ஆனல் இந்த ஜன்மத்தில் ஒன்றுமில்லை. என்ன? காசியில் ஸ்நானம் செய்யப்போவதும் இல்லை, விஸ்வேசரை தரிசிக்கப்போவதுமில்லை, உத்தமர்களிடம் சென்று பேசப்போவதுமில்லை, குட்டிச்சுவரை விடப் போவதுமில்லை. ஆனதால், அவை காஸ்மீரத்தில் பிறந்தும், அந்த ஜன்மத்தில் மோக்ஷமடையப்போவதில்லை என்று ஏற்படுகிறது. அதைப்போன்று யோகத்தில் பிறந்தும், அந்த யோகத்தை அடைய முடியாதவனக மறிப்பதால் அவர்களே காஸ்மீரத்தில் பிறந்த கழுதைகளுக்கு உவமையாய்க் கூறினர் என்க. 66

ஆதித்தன் முன்னு யறைந்தோ ரகத்தவரேல்
மீதுற்று லாயபயன் வேறேது—காதகத்தில்
கைவந்தார் மீதுற்றால் யாதளிப்பார் காசினியில்
மெய்வந்தார்க் காமதைநீ வேண்டு.

(பொ-ரை) பூமியின்கண் சூரியன் முதலாகச் சொல்லாநின்ற கிரகங்களெல்லாம் பாபிகளாய்விட்டால் அவர்கள் உச்சம், ஆட்சி, நட்பு முதலாகிய பலன்களை அடைந்திருந்தால் வரும் பயனென்ன என்பதைச் சொல்லுகையில், கைதேர்ந்தவர்கள் பலவான்களாய் இருந்தால், எந்தப் பலத்தைக் கொடுப்பார்களோ அந்தப்பலன் சரீரமுடையவர்களுக்கு உண்டாகும் அதை நீ சொல்லுவாயாக என்பதாம்.

(வி-ரை) இச்செய்யுளால் ஆக்ஷி உச்சம்பெற்ற கோட்களது பலம் என்ன என்பதையும் அதன் விருத்தாந்தமும ... ...ளா. எவ்வாறெனில்? ...தேர்ந்த வேலைக்காரனுக்கு பலமும உள்ளதாயி... தன் வேலை... ...வ்வாறு முடிப்பான்? எவர் உதவியும் இன்றி தன் பல... எவ்வ... ...வா அவ்வாறு முடிப்பான். அதைப்போன்றே ஆக்ஷி உச்சம்... ...ட்கள், தான் நற் க்ஷேத்திரம் பெரின் நற்பலனும், துற்க்ஷேத்தி... ...ரின் துற்பலனும் தவாறது தருவர் என்பதே கருத்தாகும்.

ஆக்ஷி என்பது ஒருபலமும், உச்சம் என்பது ஒன்றேகால் பலமும் ஆகும் என்பது ஜோதிட சாஸ்திரங்களின் முடி... கருத்து. உதாரணமாக பல முடைய சரீரவான் இடம்பொருளும் உண்...ல அவன் எக்காரியத்தையும் பிறர் உதவியின்றி தன் பலத்திற்குத் தக்கவாறு முடிப்பான். பலம் இல்லா தவனிடம பொருளிருந்தும் அவன பிறர் உதவியால் முடிக்கலாமேயன்றி தன சுயேச்சையாய் முடிப்பது அரிது. அதைப்போன்றே பாவத்தாலும, தனது சுபாவத்தாலும், சுபத்துவகுணமுடைய கிரகப்பலததாலும் மேன்மை பெற்றிருக்கில் அந்த கிரகம் எவர் உதவியும் இன்றி, நற்பலனைச் செய்யும். சுபாவததாலும், ஆதிபததியத்தாலும கொடியதாயுள்ள கிரகம் உச்சமாக அல்லது ஆக்ஷியாக இருக்கில், தனது சுபாவத்திற்கும, குணத்திற்கும ஏற்றவாறு துற்பலனைத் தருவார் எனபதே கருததாகும். இதனாலேயே சுபகோட்கள் அல்லது சுப ஆதிபத்தியம் பெற்ற கோளானது ஆக்ஷி உச்சம பெறின் விசேஷ சுபபலனைத தரும எனவும், ஆதிபததியததாலும, குணத தாலும தீமையை அடைந்த கோளானது ஆக்ஷி உச்சம்பெறின் கட்டாயமாய் தீப்பலனையே தருவார் என்பதை சாஸ்திர மேதாவிகள் பலமுறை வற்புறுத் திக் கூறியுள்ளனர்.

1 உதாரணமாக ஒன்ரும் இடத்தோன் ஆக்ஷி உச்சம் பெறின் ஜாதக னுக்கு ஆயுள் செல்வம் ஓங்கும்.

2 இரண்டாம் வீட்டோன் ஆக்ஷி உச்சம் பெறின் தனவிருத்தி, குடும்ப விருத்தி உண்டாகும்.

3 மூன்ரும் வீட்டோன் ஆக்ஷி உச்சம் பெறின் சகோதர விருத்தியும், பிறர் உதவியும போகவல்லவனுமாவன்.

4 நான்காம் வீட்டோன் ஆக்ஷி உச்சம் பெறில் மாதுருவிருத்தி, சுக விருத்தி உண்டாகும்.

5 ஐந்தாம் வீட்டோன் ஆக்ஷி உச்சம் பெறின் மாதுல விருத்தி, புத்திர விருத்தி உண்டாகும்.

6 ஆரும் வீட்டோன் ஆக்ஷி உச்சம் பெறில் ரோகவிருத்தி, சத்துரு விருத்தி, கடன் விருத்தி உண்டு.

7 ஏழாம் வீட்டோன் ஆக்ஷி உச்சம் பெறில் களத்திரவிருத்தி உண் டாகும்.

8 எட்டாம் வீட்டோன் ஆக்ஷி உச்சம் பெறின் ஆயுள் விருத்தி, கொடிய பகை, கொடிய வியாதி உண்டாகும்.

9 ஒன்பதாம் வீட்டோன் ஆக்ஷி உச்சம் பெறின் பிதுர்விருத்தி, பாக்கிய விருத்தி உண்டாகும்.

10 பத்தாம் வீட்டோன் ஆக்ஷி உச்சம் பெறில் தொழில் விருத்தி, வியபார விருத்தி உண்டாகும்.

11 பதி[illegible] வீட்டோன் ஆக்ஷி உச்சம் பெறில் லாபவிருத்தி, ஜேஷ்டன் விருத்[illegible]கும்.

12 பன்னிர[illegible]வீட்டோன் ஆக்ஷி உச்சம் பெறில் விரயம் அதிகமும், சயனம் உண்[illegible]

இவ்வாறே எந்த ரா[illegible]யில் ஆக்ஷி உச்சம் பெற்ற கோட்கள் உள்ளனவோ அவ்வாறு பிரித்துக் கூறலாம். இதனை முன்கூறிய (64) ஆம் செய்யுளிலும் நன்கு விளக்கிக் காட்டப்பட்டு உள்ளன. ஆக்ஷி உச்சம் பெற்ற கோட்களின் விதியாவது என்னவெனில்? தான் எந்த ஆதிபத்தியம் பெற்றார்களோ அந்த விதிக்கும் எந்த க்ஷேத்திரம் பெற்றார்களோ அந்த பொது விதிக்கும் பூரணபலம் பெற்றனர் என்பது கருத்தாகும். மற்றுமுள்ள விவரங்களை முன்கூறிய செய்யுட்களால் விளக்கியுள்ளன. 67

இதுவுமது

கோவிந்த தீக்ஷதர்தங் கொள்கையினாற் செப்புகின்ற
மாவிந்த நூலின் வழக்கறிந்து—தேவின்
தருப்போற்றும் பிண்டியன் செல்வன்சீர் கூறி
வருபவனப் பாவையன் வந்து.

(பொ-ரை) தெய்வீகமாய் இருக்கிற கற்பகத்தரு தோத்திரஞ் செய்யும் அசோக விருக்ஷத்தின்கீழ் வாசஞ்செய்கின்ற அருக தேவதையினுடைய பெருமையைச் சொல்லி வராநின்ற அப்பாவையர் என்பவர் கோவிந்த தீக்ஷதருடைய அங்கீகாரத்தினால் பெருமை பொருந்திய இந்தத் தாண்டவமாலையைச் சோதிட நடையை அறிந்து செப்பியதாகும் என்பதாம்.

(வி-ரை) அசோக விருக்ஷத்தின்கீழ் வாசம் செய்யாநின்ற அருக தேவதை என்றதால் அப்பெயர் சத்திதேவியைக் குறிக்கும். இந்நூலை முதன் முதலாய் இயற்றியவர் அப்பாவையர் என்பவரும், சத்திதேவியிடம் அன்பும், மேற்படி தேவியினது திருநாமங்களை இடைவிடாது பஜித்துக் கொண்டு இருப்பவர் என்பது இதனது அருத்தமாகும். ஆயினும் கோவிந்த தீக்ஷதருடைய அங்கீகாரத்தால் அப்பாவையர் என்பவர் கூறினர் என்றதால் மேற்படி அப்பாவையர் அவர்களின் குரு கோவிந்த தீக்ஷதர் என்றும் கூற வேண்டியதாகிறது. ஆனதால் அப்பாவையர் என்பவரே இந்நூலுக்கு முதலாசிரியராவர் எனக் கூறலாம். 68

இதுவுமது

ஆதியாஞ் செய்யுளோ ராறுறு மாறைந்தின்
மீதிரண்டாய்ச் செப்பினான் மேதினியில்—வேதியன்றான்
ஆண்டகைய னாண்டி மகிப னருள்வணிகன்
தாண்டவன் பேரைத் தரித்து.

(பொ-ரை) இவ்வுலகத்தில் அருக அந்தணனாகிய அப்பாவையன் மனிதர்க்கொத்த நடையினையுடைய ஆண்டி மகிபன் குமாரன் வணிகனாகிய தாண்டவராயனுடைய பேரைத் தரித்து ஆதிமுதல் அறுபத்தெட்டுப் பாடலாகச் செப்பினான் என்பதாம்.

(வி-ரை) அருகதேவதையினுடைய[illegible]ன் பெற்றவராகிய அப்பாவை யருக் கொத்த நடையினை யுடையவரு[illegible] னக குலத்[illegible] ஆண்டியப்ப ருடைய திருக்குமாரருமாகிய தாண்[illegible]வராயர் [illegible] மேற்படி அப்பாவையர் கூறிய இந்நூலினது வி[illegible]ங்களை [illegible]களாய்ச் செய்து தம் பேர் தாண்டவராய[illegible] ஆனதால் தாண்டவ[illegible]னும் பெயருடன் வெளியிட்டனர் என்பதே இச் செய்யுளின் கருத்[illegible]

மற்றும் இந்நூலாசிரியராகிய தாண்டவபூப[illegible]பவரின் ஆசிரியரான அப்பாவையர் என்பவர் அருக தே[illegible]க உபா[illegible]னம் [illegible]ள்ளவர் எனக் கூறிய தாலும், அருகதேவதை என்பது [illegible]மாதாவாகிய உமாதேவியைக் குறிக்கும். ஆனதால், சகல முனிவர்களு[illegible] ரிஷிகளும், சித்தர்களும் ஸ்ரீதேவியின் மூலமாகவே சகல சாஸ்திரங்க[illegible]யும் கேட்டுத் தெளிந்தனர் என்னும் சாஸ்திரம் இருப்பதாலும், மேற்படி அப்பாவையர் என்பவர் அப்படிப்பட்ட உமாதேவியை உபாசனம் செய்து வந்ததாலேயே சோதிடர்களுக்கு இருகண் போன்று விளங்கும் இந்நூலை, எவரும் மதிக்கும் வண்ணம் ஒவ்வொரு கிரகங்களது சக்தியையும் நிச்சயமாய் அறியும் வழியை தமது சிஷ்யராகிய தாண்டவபூபதிக்கு உபதேசித்திருப்பதை எம்போன்றா ரல்லாமல் கற்றறிந்த உத்தமர்களே கூறவியலும். இப்படிப்பட்ட அருமை வாய்ந்த நூலை, அழகிய வெண்பாவால் இயற்றிய இந்நூலாசிரியராகிய தாண்டவபூபதிக்கு உள்ளன்புடன் வாழ்த்து கூறுவோமாக.

தாண்டவமாலை மூலமும்-விருத்தியுரையும்

முற்றிற்று.

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1939.

சோதிட

சி[illegible]ல[illegible] கோர்வை

இப்பூம[illegible]ண் உதித்த [illegible]ந்தர்கட்கு நன்மை யுண்டானபோ[illegible]தீமையும், தீமையுண்டானபோது நன்மையும் உ[illegible]ாவ[illegible]ம், மேற்சொல்லியுள்ள நன்மையும் தீமையு[illegible] அனுபவித்தே தீரவேண்டு மாகையாலும், அ[illegible] நன்மையும் தீமையும் வருங்கால மறியும்வண்ணம் ஆ[illegible]தியில் கணிதசாஸ்திரம் ஜோதி டத்தால் அவைகளை அறிந்துகொள்ளுமாறு அநேக சித்தர்களால் பற்பல நூல்களை வடமொழியில் எழுதப் பட்டன. அவைகளைத் தமிழால் மொழிபெயர்த்தும் நம்போன்று சிற்றறிவுள்ளோரும் அதைப் பயனடை யும்வண்ணம் பற்பல நூல்களை ஒன்று சேர்த்து சோதிட சில்லரைக் கோர்வை' என்று பெயரளித்து, முறையே அறிவாளரும் சிற்றறிவுடையோரும் இதைக் கைக்கொள்வாராயின் கோசாரம், ஆரூடம், காரகம், கிரகநிலை, இராசிநிலை, ஆரூடம் சொல்லும் விதம், கணிதம் செய்யும்விதம், திசைபுக்தி அந்தரம் பிரிக்கும் விபரம், திசைப்பலன் சொல்லல், மாரக திசையறிதல், யோகதிசை, உற்பன்னதிசை இவை யாவும் ஆசானின்றி அனைவரும் தெரிந்து பயனடையு [illegible]று எளியநடையில் மதுரை. தம்புசாமி நாயுடு அ[illegible]ர்க[illegible] குமாரரும் சோதிட வல்லவருமாகிய த. குப்புசா[illegible] நாயுடு அவர்களால் பற்பல ஏட்டுப் பிரதிகளைக்கொண்டும் எழுதப்பட்டு சுத்தப்பிரதியாக அச்சிட்டுள்ளோம். ஆகையால் இதை ஒவ்வொரு வரும் கைக்கொள்வாராயின் பெரிதும் பயன்பெறலாம். ஒவ்வொருவரும் எமது பதிப்பைக் கவனித்து வாங்கக் கோருகின்றனம். விலை ரூபா 2 8 0

எமது விலாசம்:

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

24, தாண்டவராயப்பிள்ளைவீதி, சென்னை.

பூமகள் பதிப்பின்

சோதிடபுத்தகங்கள்

[பிரபல சோதிட வித்வான்களால் பரிசோதித்தது]

கமலமாமுனி ரேகை சாஸ்திரம் விருத்தியுரை	1	4	0
தாண்டவமாலை விருத்தியுரை	0	10	0
சோதிட பாலபாடம் புதியபதிப்பு	0	12	0
சோதிடக்களஞ்சியம் விருத்தியுரை	2	0	0
பாராசாரியம் விருத்தியுரை	1	8	0
உரோமரிஷி விநாடி பஞ்சபட்சி விருத்தியுரை	1	8	0
அகஸ்தியர் பஞ்சபட்சி விருத்தியுரை	1	0	0
குமாரசுவாமியம் உரை	1	8	0
சாதகாலங்காரம் உரை	2	0	0
வீமேசுர உள்ளமுடையான்	1	8	0
அனுபோக ஜாதக ரகசியம்	0	8	0
சோதிட சில்லரைக்கோர்வை	1	0	0
அனுபோக ஆரூட சிந்தாமணி	0	6	0
சாதக சிந்தாமணி	0	12	0
சோதிட பிரஞ்ஞான தீபிகை	2	0	0
கௌசிக சிந்தாமணி 3-பாகங்கள்	2	0	0
சோதிட அரிச்சுவடி 4-பாகங்கள்	1	0	0
மணிகண்ட கேரளம்	0	6	0
ஆண் பெண் இரேகைசாஸ்திரம்	0	12	0
பெரிய வருஷாதிநூல்	1	0	0
புலிப்பாணிசோதிடம் தாய்மகளேசல்	0	6	0

விலாசம்:—

A. இரங்கசாமிமுதலியார் சன்ஸ்

புத்தக வியாபாரிகள்

24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.